# நக்கல் நமசிவாயம்




Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 302 பிலவ வருடம், ஆடி மாதம் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை (13.08.2021) ஹிஜ்ரி - 1443, முஹர்ரம் பிறை - 03, 0115886187 - பக்கங்கள் 16

விலை ரூ.30

## மனிதருள் மாணிக்கம்



ஷம் றிபாய் ஹாஜியார்

விசேட கட்டுரை 04ஆம் பக்கம்...



வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்திர மகோற்சவம் இன்றைய தினம் வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நிலையில் நல்லூர் வரவேற்பு வளைவில் கொடி கட்டும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. (படம்:- ஐ.சிவசாந்தன்)

# ஒட்சிசன் தட்டுப்பாடு அபாயம்!

## சுகாதாரத்துறை அவசர எச்சரிக்கை; கொரோனா நிலைமை உச்சத்தில்

•யோ.தர்மராஜ்

டெல்ட்டா வைரஸ் தொற்றின் தீவிரத்தால் கொரோனா நோயாளர்களுக்கு பயன்படுத்தும் ஒட்சிசன் அளவானது நாட்டில் உற்பத்திசெய்யப்படுகின்ற முழு அளவையும் தாண்டும் நிலைமையே ஏற்பட்டுள்ளதால் தொற்றுக்குள்ளா வோரின் எண்ணிக்கையை உடனடியாக குறைக்கவேண்டும். இல்லையேல் எதிர்வரும் வாரங்களில் நாடு பாரிய ஒட்சிசன் பற்றாக்குறைக்கு முகங்கொடுக்க... 02

## தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் விரட்டியடிப்பு

வட கடலில் மீன் பிடிக்கக்கூடாதென எச்சரிக்கை 02

## நாடு கடத்தலுக்கெதிரான சிறுமியின் மனுவை அவுஸ்திரேலிய உயர்நீதிமன்றம் நிராகரித்தது



நாடு கடத்தப்படுவதைத் தடுக்கவும், குயின்ஸ்லாந்து நகரமான பிலோலாவில் மீண்டும் வாழ அனுமதிக்கவும் சட்டப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இலங்கை குடும்பத்தின் நான்கு வயது சிறுமி சார்பாக மேன்முறையீடு செய்ய அவுஸ்திரேலிய உயர்நீதிமன்றம் மறுத்துவிட்டது.

புகலிடக்கோரிக்கை நிராகரிக்கப்பட்ட நிலையில், தற்போது பேர்த்தில் தற்காலிகமாக தங்கவைக்கப்பட்டுள்ள நடேசன்-பிரியா தம்பதியரின் இரண்டாவது மகள் தருணிகா சார்பிலான மேன்முறையீட்டை விசாரிப்பதற்கே உயர்நீதிமன்றம் மறுத்துள்ளது.

நான்கு வயதுச் சிறுமி தருணிகாவின் அகதி தஞ்ச விண்ணப்பத்தில் நியாயத் தன்மை காண்பிக்கப்படவில்லையென பெடரல் நீதிமன்றம் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் தெரிவித்திருந்தது. 02

## தமிழ்ப்பெண்கள் இருவர் பிரான்சில் படுகொலை

### வீட்டிலிருந்த ஆண்கள் அதிர்ச்சிக்குள்ளாகியிருந்த நிலையில் மீட்பு



பிரான்ஸின் பாரிஸ் புறநகர்ப் பகுதியான வால்து ஓஸ் பிராந்தியத்தில் ஈழத்தமிழர்களான 52 வயதான மனைவியும் 21 வயதான மகளும் கழுத்து அறுக்கப்பட்டும் குத்தப்பட்டும் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. 02

## அமைச்சரவையில் அதிரடி மாற்றங்கள்

- டலஸுக்கு ஊடகம்
- பவித்ராவுக்கு மின்சக்தி
- தினேஸுக்கு சுற்றுலாத்துறை
- பிரசன்னவுக்கு கல்வி

அமைச்சரவையில் அதிரடி மாற்றங்களை செய்துள்ள அரசு அது தொடர்பான அறிவிப்பை இன்று வெளியிடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய அமைச்சரவை மாற்றத்தின்படி டலஸ் அழகப்பெரும ஊடக அமைச்சராக பதவியேற்கும் அதேசமயம், ஊடக அமைச்சு பொறுப்பை வகித்த கெஹெலிய ரம்புக்வெல்ல பெருந்தோட்ட அமைச்சராக நியமிக்கப்படவுள்ளார். சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி மின்சக்தி அமைச்சராக... 02

## லாஃப் சமையல் எரிவாயு விலை 363 ரூபாவினால் அதிகரிப்பு

லாஃப் சமையல் எரிவாயுவின் விலையை 363 ரூபாவால் அதிகரிப்பதற்கு நுகர்வோர் விவகார அதிகாரசபை அனுமதி வழங்கியுள்ளது.

அதன்படி, 12.5 கிலோகிராம் லாஃப் சமையல் எரிவாயு சிலிண்டரின் புதிய விலை 1,856 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, 5 கிலோகிராம் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலையை 145 ரூபாவால் அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி, குறித்த எரிவாயு சிலிண்டரின் புதிய விலை 743 ரூபாவாகும். 02




அதிபர்கள் - ஆசிரியர்களின் பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வை பெற்றுத்தருமாறு கோரி, கொழும்பிலுள்ள சுதந்திர சதுக்கத்தில் ஆசிரியர்கள் சங்கம் உள்ளிட்ட தொழிற்சங்கங்கள் நேற்று சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டபோது... (படப்பிடிப்பு:- பிரதீப் தரம்பரகே)

## வாழ்வை கடவுளிடம் ஒப்படைப்பதாயின் அரசாங்கம் என்ற ஒன்று எதற்காக?

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கேள்வி



நம் நாடு 5400இற்கும் அதிகமான கொரோனா இறப்புடன் ஒரு பயங்கரமான சோகத்தில் மூழ்கியுள்ளதென்பதை ஒப்புக்கொள்வது வருத்தமளிக்கிறது. நிலைமையை அதிகரிக்க அனுமதிக்கும் முழுப் பொறுப்பையும் அரசாங்கம் ஏற்கவேண்டும் என்பதை நாங்கள் வலியுறுத்துகிறோம்.

ஆனால், ஒரு பொறுப்புள்ள அரசாங்க அமைச்சர் "எதிர்காலம் கடவுளிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்" என்று கூறியுள்ளார். இறப்பு மற்றும் நோய்த்தொற்று... 02

## அம்பாறையில் ஒரேநாளில் 411 பேருக்கு கொரோனா

08

## உடனடியாக நாட்டை முடக்குங்கள்!

### ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை



கொரோனா வைரஸ் பரவலால் எழுந்துள்ள சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு மருத்துவ மற்றும் விசேட நிபுணர்களின் ஆலோசனையின் பிரகாரம் உடனடியாக நாட்டை முடக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது. அதன் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

நம் நாடு ஏற்கனவே பயங்கரமானதொரு தொற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளது. 02

## 'தமிழன்' பத்திரிகை ஆசிரியரை பின்தொடர்ந்த மர்ம நபர்கள்!

### கல்கிசை பொலிஸ் விசாரணை

'தமிழன்' பத்திரிகையின் ஆசிரியர் சிவராஜாவின் கல்கிசை இல்லத்திற்கு சிஜடி என்ற போர்வையில் நுழைய முயன்ற இனந்தெரியாத நபர்கள் குறித்து விசேட பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் நேற்று அதிகாலை 2 மணியளவில் வந்த இந்த நபர்கள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் அனுப்பப்பட்டவர்கள் அல்லரென ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. 02

## ஒரு மணிநேரத்திற்கு 5 பேர் உயிரிழப்பு

### ஆபத்தான நிலைமை என்கிறது அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

•யோ.தர்மராஜ்

நாட்டில் கொரோனா தொற்றால் ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் 5 பேர் உயிரிழப்பதால் பொருளாதாரம் என்ற பெயரில் நாட்டை முடக்கத் தீர்மானம் எடுக்க தாமதிக்கும் ஒவ்வொரு நாளும், டெல்ட்டா திரிபு மிக வேகமாக நாடு முழுவதும் பரவி ஆபத்தான நிலைமை ஏற்படும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. 02

## 'தமிழன்' பத்திரிகை...

எவ்வாறாயினும் அந்தப்பகுதி சி.சி.ரி.வி. கெமராக்களைக் கொண்டு விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக மேல்மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்தார்.

அலுவலக கடமைகள் முடிந்து அதிகாலை 1 மணியளவில் வீடு திரும்பிய பத்திரிகை ஆசிரியரை இனந்தெரியாத சந்தேகநபர்கள் பின்தொடர்ந்து வந்திருக்கலாமென நம்பப்படு கிறது. குற்றப்புலனாய்வுப் பிரிவு உறுப்பினர்களென தங்களைக் கூறிக்கொண்ட இருவர் பிரதான கேட்டை திறக்கக் கோரியதாகவும் ஆனால், அவ்வேளை வேளை என்பதால் தாம் திறக்கவில்லையென்றும் பத்திரிகை ஆசிரியர் குடியிருக்கும் மனைத்தொகுதியின் பாதுகாப்பு உத்தியோகத்தர் சிவராம் தெரிவித்துள்ளார்.

கல்கிஸை பொலிஸார் மேலதிக விசாரணை களை நடத்தி வருகின்றனர்.

## தமிழக மீனவர்கள்...

தமிழகத்தின் இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் கடலோரப் பகுதியிலிருந்து நேற்றுமுன்தினம் காலை 200க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் கச்சதீவு கடல் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது ரோந்துப் பணியில் வந்த இலங்கைக் கடற்படையினர் தமிழக மீனவர்கள் அந்தப்பகுதியில் மீன் பிடிக்கக்கூடாது என எச்சரிக்கை விடுத்தனர்.

எனினும், தமிழக மீனவர்கள் தொடர்ந்தும் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டதால் திடீரென இலங்கை கடற்படையினர், தமிழக மீனவர்களை விரட்டியடித்தனர். இலங்கைக் கடற்படை விரட்டியடிப்பால் 50க்கும் மேற்பட்ட படகுகளுக்கு தலா ரூ. 50 ஆயிரம் முதல் ரூ.2 இலட்சம் வரை மீன்பிடி வலைகள் மற்றும் சாதனங்கள் சேதமடைந்ததாகவும், இதனால் பல இலட்ச ரூபா தங்களுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், இலங்கைக் கடற்படையின் தாக்குதலால் ஏராளமான தமிழக மீனவர்கள் முன்னதாகவே கரைக்குத் திரும்பி விட்டனர். இதனால் மண்டபம் கடற்கரையில் நேற்றுக் காலை மீன்வரத்து குறைவாகக் காணப்பட்டதாக தமிழக செய்திகள் தெரிவித்துள்ளன.

## ஒரு மணிநேரத்திற்கு ...

அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

டெல்டா திரிபு மிக வேகமாகப் பரவும் ஆபத்தான சூழ்நிலையில், நாட்டை உடனடியாக முடக்க வேண்டும் என நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம். தற்போது வரை ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் 5 பேர் கொரோனா தொற்றால் உயிரிழக்கின்றனர்.

பொருளாதாரம் என்ற பெயரில் நாட்டை முடக்கத் தீர்மானம் எடுக்கத் தாமதிக்கும் ஒவ்வொரு நாளும், டெல்டா திரிபு மிக வேகமாக நாடு முழுவதும் பரவி நாட்டில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதால் வைத்தியசாலைகளின் கொள்ளளவு திறனை மீறும் சந்தர்ப்பம் ஏற்படலாம். டெல்டா திரிபு வேகமாகப் பரவுவதால் புதிய, புதிய திரிபுகள் உருவாகலாம் என்பதே விசேட வைத்திய நிபுணர்களின் எச்சரிக்கையாகும். இவ்வாறு புதிய திரிபுகள் உருவாகி நாடு மேலும், மேலும் ஆபத்துக்குள் தள்ளப்படுமாக இருந்தால் அதற்கு அனைவரும் பொறுப்புக்கூற வேண்டும்.

தற்போதுவரை வைத்தியசாலைகளில் ஒட்சிசன் தேவைப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை மிக வேகமாக அதிகரிப்பதால் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் ஒட்சிசன் அதிகபட்ச கொள்ளளவை எட்டியுள்ளதாகத் தெரிய வந்துள்ளது. அதனால் ஒட்சிசனை இறக்குமதி செய்வதன் தேவை ஏற்பட்டுள்ளதால் பொருளாதாரத்துக்கு மேலும் சுமையை ஏற்படுத்தும்.

நாங்கள் இன்று எதிர்கொள்ளும் கொரோனா தொற்றுக்கு உலகின் ஏனைய நாடுகள் பின்பற்றும் உத்திகளை கவனத்தில் எடுப்பது அவசியமாகும்.

தொற்றுநோய் மற்றும் சமூக மருத்துவத்தின் அறிவியல் முறைகள் மூலம் வைரஸ் பரவுவதை கட்டுப்படுத்துவதற்குப் பதிலாக, விஞ்ஞான ரீதியில் அல்லாது ஏனைய செயற்பாடுகளால் நிலைமை மேலும் சிக்கலாக அமையும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமைச்சரவையில்...

பொறுப்பேற்கவுள்ளார். ரமேஷ் பத்திரணவை சுகாதார அமைச்சராகவும், தினேஷ் குணவர்தனவை சுற்றுலாத்துறை அமைச்சராகவும், பிரசன்ன ரணதுங்கவை கல்வியமைச்சராகவும் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸை வெளிவிவகார அமைச்சராகவும் நியமிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சுப் பொறுப்புகளை முஸ்லிம்கள் இருவருக்கு வழங்க நேற்றிரவு ஆலோசிக்கப்பட்டது. ஆனால், நேற்று நள்ளிரவுவரை அதில் இறுதி முடிவு எட்டப்பட வில்லை.

## நாடு கடத்தலுக்கெதிரான...

தருணிகாவின் விண்ணப்பம் தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும், இவ்விசாரணை முடியும் வரை அவர் நாடுகடத்தப்படக்கூடாது எனவும் உத்தரவிட்டது.

இது பிரியா குடும்பத்திற்கு சாதகமாக அமைந்திருந்ததாகத் தெரிவிக்கப்பட்டதுடன், தருணிகா குழந்தை என்பதால் அவரிடமிருந்து பெற்றோரை தனியாகப் பிரித்து நாடு கடத்த முடியாது என்பதால் முழுக்குடும்பமும் நாடு கடத்தலிலிருந்து தப்பித்து தொடர்ந்தும் சட்டப்போராட்டத்தில் ஈடுபட வாய்ப்பினைத் திறந்திருந்தது.

மறுபுறத்தில் பிரியாவும், நடேசும் படகு மூலம் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்கு வந்ததால் அவர்களுக்குப் பிறந்த தருணிகாவும் சட்டவிரோத குடியேறியாகவே பார்க்கப்படுவதாகவும், அவர் சார்பில் 2019ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட பாதுகாப்பு விண்ணப்பம் செல்லுபடியற்றது (குடிவரவு அமைச்சர் விதிவிலக்கு அளிக்காத பட்சத்தில்) எனவும் பெடரல் நீதிமன்றம் மற்றுமொரு தீர்ப்பில் தெரிவித்திருந்தது. இதையடுத்து குறித்த தீர்ப்பிற்கெதிராக உயர்நீதிமன்றம் செல்ல வேண்டுமெனில் சிறப்பு அனுமதி பெற வேண்டியிருந்த நிலையில், தருணிகாவின் சட்டத்தரணி இதற்கான அனுமதியைக் கோரியிருந்தார். ஆனால், இந்தக் கோரிக்கையை உயர்நீதிமன்றம் நேற்று நிராகரித்துள்ளது.

## லாஃப் சமையல்...

அறிக்கை ஒன்றை வெளியிட்டு நுகர்வோர் விவகார அதிகாரசபை இதனைத் தெரிவித்துள்ளது.

இதேவேளை, லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலையில் மாற்றமில்லை என இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார். லாஃப் சமையல் எரிவாயு கொள்கலன்களின் விலைகளை அதிகரிக்க நுகர்வோர் விவகார அதிகாரசபை அனுமதி வழங்கியுள்ளதாக இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார்.

## உடனடியாக...

நாளுக்கு நாள் பதிவாகும் கொரோனா தொற்று மற்றும் இறப்புகளின் எண்ணிக்கை கவலைக்கிடமாக உயர்ந்துள்ளது. அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட புள்ளிவிவரங்களில் உள்ள முரண்பாடுகள் அந்தக் கொடூரத்தை மேலும் அதிகரிக்கின்றன.

அரசாங்கம் இதில் புத்திசாலித்தனமாக செயற்பட வில்லை என்பதோடு, அவர்களின் தன்னிச்சையான கொள்கைகளின்படி உயிர்களுடன் விளையாடிக் கொண்டிருக்கிறது. அனைத்து சுகாதார வல்லுநர்களும் இந்தத் தீவிர நிலைமை குறித்து தீர்க்கமான எச்சரிக்கைகளை தொடர்ந்து வழங்கி வருவதோடு, கிட்டத்தட்ட அனைவரும் நாட்டை உடனடியாக மூட வேண்டும் என்றே கூறுகின்றனர். அதைத் தாண்டி இந்தப் பேரழிவிலிருந்து தப்பிக்க முடியாது என்பது அனைத்து நிபுணர்களின் கருத்தா கவுள்ளது. கொரோனா பேரழிவின் உச்சத்தை நமது நாடு வேகமாக அடைந்து வருவதோடு, நாங்க ளும், நிபுணர்களின் கருத்துப்படி நாட்டை முடக் குமாறு வலியுறுத்துகிறோம். அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள கொரோனா சட்டமூ லத்தை நிறைவேற்றுவதற்கு விவாதங்களோ, வாக் கெடுப்போ இன்றி பங்களிக்க ஐக்கிய மக்கள் சக்தி இணைந்து பணியாற்றும்.

நாட்டில் எழுந்துள்ள பேரழிவு நிலைமை குறித்து பொறுப்பான எதிர்க்கட்சியாக, ஐக்கிய மக்கள் சக்தி தீவிரமாக கவனம் செலுத்தி வருவதோடு, இந்நாட்டு மக்களின் உயிரைப் பாதுகாக்க எடுக்கப்பட வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் நாங்கள் நிபந்தனையின்றி ஆதரிக்கிறோம்.

அரசாங்கத்தின் தன்னிச்சையான மற்றும் ஒருதலைப்பட்சமான நடவடிக்கைகளை கைவிட்டு விட்டு, இந்த முக்கியமான தருணத்தில் நாட்டை முடக்கி, மக்களின் உயிர்களைப் பாதுகாக்க நிபுணர்களின் ஆலோசனையின் பேரில் முடிவுகளை எடுக்குமாறு நாங்கள் அரசாங்கத்தை மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறோம் - என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வாழ்வை கடவுளிடம்...

நிகழ்வுகளின் அடிப்படையில் இலங்கை உலகில் முதலிடத்தில் இருந்தாலும் அரசாங்கம் மிகவும் முட்டாள்தனமாகவும் பொறுப்பற்றதாகவும் நடந்து கொள்கிறது.

எவ்வாறாயினும், ஒட்டுமொத்த நாட்டு மக்களைப் பொருட்படுத்தாவிடினும், வாக் களித்த 69 இலட்சம் மக்களின் மனதை இழிவு படுத்தும் அறிக்கைகளை வெளியிடும் அளவுக்கு அரசாங்கம் மோசமடைந்துள்ளது துரதிர்ஷ் டவசமானது.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது,

கொரோனா பேரழிவு இலங்கையை ஆக்கிரமிப்பதாக எங்களால் முன்கூட்டியே அறிவிக்கப்பட்டபோது கூட, எந்த விதத்திலும் தலையிடாத அரசாங்கம், கொரோனா பேரழிவு நாடு மீது படையெடுத்த போதும் மிகவும் பைத்தியக்காரத்தனமாகவும், பொறுப்பற்ற விதத்திலும் நடந்து கொண்டது.

ஆரம்பத்தில் இருந்தே, அரசாங்கம் இந்த கொரோனா பேரழிவை தனது சொந்த அரசியல் திட்டமாக மாற்றியது. அரசாங்கம் கொரோனாவை தோற்கடித்ததாக பெருமைப்பட்டு தேர்தல் பிரசாரம் செய்தது எப்படி என்பதை மக்கள் நினைவில் கொண்டிருப்பர்.

கொரோனா தடுப்பூசியை முன்கூட்டியே கொள்வனவு செய்யுமாறு நாங்கள் நாடாளுமன் றத்திலும் அதற்கு வெளியிலும் அரசாங்கத்திடம் பலமுறை கேட்டுக் கொண்டதோடு, ஒவ்வொரு முறையும் இராஜதந்திர மட்டத்தில் பல்வேறு இராஜதந்திரிகளைச் சந்தித்த போதிலும், இலங்கைக்குத் தேவையான தடுப்பூசியை வழங்குவதற்குத் தேவையான உதவிகளை வழங்குமாறு கோரியுள்ளோம்.

இருப்பினும், அரசாங்கம் இவற்றை அவம திப்புடன் நிராகரித்து அதற்கு பதிலாக தம்மிக பானத்தை ஊக்குவித்து நாடாளுமன்றத்திற்கும் கொண்டு வந்தது. நாடாளுமன்றத்தில் உள்ள சில அமைச்சர்கள் பானத்துக்கான பிரசார முகவர்கள் என்று அழைக்கப்படுபவர்களாக மாறினர். சில அரசாங்க அமைச்சர்கள் ஆறுகளில் முட்டிகளை இட்டு பிரபலப்படுத்தி மயக்கநிலையில் இருந்தனர்.

நிலைமை மோசமடைந்தாலும், தடுப்பூசிகளை இறக்குமதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்தபோது பேரழிவு சமூக பரவலாக முடிவுக்கு வந்தது. ஒவ்வொரு முறையும் நாங்கள் தடுப்பூ சியின் முக்கியத்துவம் குறித்து நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பியபோது, அதை விமர்சித்த எம்.பி.க்கள் மற்றும் அமைச்சர்கள் தாங்களே கொரோனாவால் பாதிக்கப்பட்டபோதுதான் அதன் தீவிரத்தை உணர்ந்தனர்.

தடுப்பூசியை சரியான நேரத்தில் பெற்றுக் கொள்வது, நிதி மூலங்களை ஒதுக்குவது, மனித வளங்களை பயிற்றுவிப்பது, தடுப்பூ சிகளை விநியோகிப்பது, திட்டமிடுதல் மற்றும் முன்னுரிமை அளிப்பது பற்றிய தெளிவான திட்டத்தை நாங்கள் எப்போதே முன்வைத் துள்ளோம். ஆனால், அரசாங்கத்திடம் அத்தகைய திட்டம் இருக்கவில்லை. அதைப் பற்றி உணர்வற் றவர்களாக இருந்தனர்.

கனடா போன்ற நாடுகள் ஒரு குடிமகனுக்கு தடுப்பூசியின் பல அளவுகளை ஒதுக்கியுள்ளன, இன்னும் அந்த நாடுகளில் உபரியான தடுப்பூசிகள் உள்ளன. ஆனால், நம் நாட்டில் இன்னும் முதல் முறையாக தடுப்பூசி போடப்படாதவர்கள் இருக்கிறார்கள். நாங்கள் அப்போதிருந்து முன்கூட்டியே சொன்ன அனைத்தும் தற்போது நிறைவேறியுள்ளது, அரசாங்கம் உடனடியாக மூன்றாவது டோஸை ஓர்டர் செய்ய வேண்டும் என்று நாங்கள் தற்போது முன்கூட்டியே கூறிகு றோம்.

இப்போதும் கூட, நமது நாட்டில் கொரோனா பேரழிவால் உயிரிழந்துள்ளோரில் 80வீதத் திற்கும் அதிகமானோர், 60 வயதுக்கு மேற் பட்டவர்கள் ஆவர். சுகாதார விதிமுறைக ளின்படி, இப்பிரிவினர்களுக்கே தடுப்பூசிக்கு முன்னுரிமை அளிக்க வேண்டியிருந்தது. 60 வயதிற்கு மேற்பட்டவர்களின் வாழ்க்கையை புறக்கணித்து அரசாங்கம் அதை கொடூரமாக புறக்கணித்தது.

ஆரம்பத்தில் இருந்தே, அரசாங்கம் தடுப்பூசி போடுவதில் செல்வாக்கு செலுத்துவதாகவும் அரசியல் ரீதியாகவும் இருந்ததோடு, தடுப்பூசி குறித்த அறிக்கைகள் இன்னும் முரண்பாடாக உள்ளன. கொரோனா பேரழிவை தோற்கடிக்க கிட்டத்தட்ட எல்லா நாடுகளும் தடுப்பூசி மூலமே மேற்கொண்டன. ஒவ்வொரு நாடும் இந்த பணியை சுகாதார நிபுணர்களிடமே ஒப்படைத்தன. ஆனால், நம் நாட்டில் நடந்தது, அத்தகைய நிபுணர்களை ஒதுக்கி வைத்து விட்டு, விருப்பத்திற்கு ஏற்ப முடிவுகள் எடுக்கப்பட்டதே.

வைத்தியர் மலித் பீரிஸ், வைத்தியர் ஆனந்த விஜேவிக்ரம, வைத்தியர் அனில் ஜயசிங்க மற்றும் வைத்துயர் ரவி ரணன்எலிய உள்ளிட்ட நிபுணர்களின் ஆலோசனைகளை அரசாங்கம் புறக்கணித்ததோடு, குறைந்தபட்சம் நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் செய்யப்பட்ட வைரஸ்கள் பற்றிய நிபுணர் பேராசிரியர் திஸ்ஸ விதாரணவின் ஆலோசனையைக் கூட ஏற்க வில்லை.

ஜேர்மனி அதிபர் ஏஞ்சலா மெர்க்கல் தனக்கும் அவரது அமைச்சரவைக்கும் சுகாதாரம் அல்லது விஞ்ஞான அறிவியல் தெரியாது என்றும், கொவிட் கட்டுப்பாட்டை மருத்துவ வல்லுநர்கள் மற்றும் மருத்துவ விஞ்ஞானிகளிடமே ஒப்படைத்ததாக கூறினார். அவுஸ்திரேலிய பிரதமரும் இதையே கூறினார்.உலகம் இதுபோன்ற உதாரணங்களை முன் வைக்கும்போது, நம் நாட்டில் நிலைமை முற்றிலும் மாறுபட்டதாக அமைந்துள்ளது.நாடு கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அரசாங்கம் அதிகார வெறி, மாயை, ஆணவம் மற்றும் பொறுப்பற்ற தன்மை போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளது. துரதிர்ஷ்டவசமாக, இவற்றுக்கு விலை கொடுக்க வேண்டியது நாட்டு மக்கள் தான்- என்று குறிப்பிட்டுள்ளார் சஜித்.

# மாகாண சபை தேர்தல் முறைமை இல்லாமல் செய்யப்பட முடியாது!

## முன்னாள் அமைச்சர் ஹசன் அலி



மாகாண சபைத் தேர்தல் முறைமை எந்தவொரு சூழ்நிலைகளிலும் இல்லாமல் செய்யப்படுவது அனுமதிக்கப்பட முடியாது. இது தொடர்பான தீர்மானங்கள் ஒவ்வொரு மாகாணத்திலும் ஒரே நாளில் பொதுஜன வாக்கெடுப்புகள் நடத்தப்பட்டு அவற்றின் முடிவுகளுக்கு அமைய எடுக்கப்பட வேண்டியது அவசியமாகும் என்று ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் செயலாளர் நாயகமும், சுகாதார மற்றும் போஷாக்குத்துறை முன்னாள் இராஜாங்க அமைச்சருமான எம்.ரி.ஹசன் அலி தெரிவித்தார்.

தேர்தல் மறுசீரமைப்புக் குழுவுக்கு ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் தீர்வு யோசனைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக நேற்று வியாழக்கிழமை ஊடகவியலாளர்களை நிந்தவூர் இல்லத்தில் சந்தித்துப் பேசியபோது ஹசன் அலி மேலும் தெரிவித்தவை வருமாறு,

மக்கள் பிரதிநிதிகளை தெரிவுசெய்வதற்கான தேர்தல்கள் அனைத்தும் விகிதாசார தேர்தல் முறைமையிலேயே தொடர்ந்தும் இடம்பெறுதல் வேண்டும். பன்முக சமூகங்களினதும் அபிலாஷைகளை உள்வாங்குவதற்காக விகிதாசார தேர்தல் முறைமையை வலுப்படுத்த முடியும்,

இதே போலவேதான் தற்போதைய விகிதாசார தேர்தல் முறையிலும் மாற்றங்கள் கொண்டு வரப்பட முடியும். அதே நேரத்தில் தற்போதைய விகிதாசார தேர்தல் முறைமையில் இருக்கக் கூடிய பிழைகளை இல்லாமல் செய்தல் என்கிற போர்வையில் தேர்தல்கள் பிற்போடப்படுவதை அனுமதிக்கவே முடியாது.

அடுத்த தேர்தல்களுக்கான திகதி உரிய சபைகளின் முதலாவது அமர்வின்போது கட்டாயம் பிரகடனப்படுத்தப்படுதல் வேண்டும்.

தேர்தல் முறைமையில் ஏதேனும் மாற்றங்கள் தீர்மானிக்கப்பட்டால் அவை எதிர்கால தேர்தல்களில் மாத்திரமே அமுல்படுத்தப்பட வேண்டும்.

தெரிவான மக்கள் பிரதிநிதிகளின் சொத்து விபரங்கள், வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்கின்றபோதோ அல்லது அதற்கு முன்னரோ அவர்களால் பிரகடனப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். எந்தவொரு மட்டுப்பாடுகளும் இல்லாமல் இந்நாட்டு பிரஜைகள் எவரும் தகவலறியும் சட்டத்துக்குக் கீழ் இவ்விபரங்களை பெற முடிதல் வேண்டும்.

கட்சியின் கொள்கை, கோட்பாடு, மக்கள் நலன் போன்ற விடயங்கள் சார்ந்து அரசாங்க தரப்புக்கு அல்லது எதிரணிக்கு கட்சி ஒன்றின் மொத்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாற அனுமதிக்கப்பட வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர்களின் தனிப்பட்ட கட்சி தாவல்கள் முற்று முழுதாக தடை செய்யப்பட வேண்டும் என்று நாம் ஊக்குவிக்கின்றோம். தேர்தல்களில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களுக்கு அடிப்படைக் கல்வி தகைமைகள் வரையறுக்கப்படல் வேண்டும். இது தேர்தல் சட்டத்தில் உள்ளடக்கப்படுதலும் வேண்டும். பெண் மற்றும் இளைஞர் பிரதிநிதிகளின் எண்ணிக்கையை ஊக்குவிக்க வேட்பு மனுக்களிலேயே உரிய விகிதம் கட்டாயம் பிரதிபலிக்கப்படல் வேண்டும்.

சிறுபான்மைகளுக்கான தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கை அவர்களுடைய தேசிய மட்டத்திலான சதவீதத்துக்கு அமைய உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதே நேரம் வடக்கு, கிழக்கு, மத்திய மலைநாடு ஆகியவற்றில் வாழ்கின்ற மக்களுக்கான தேர்தல் தொகுதிகள் அவர்களுடைய இன சதவீதத்துக்கு ஏற்ப அவரவர் பிரதிநிதிகளை தெரிவுசெய்யக் கூடிய வகையில் உருவாக்கப்படல் வேண்டும்.

இதற்கமைய திகாமடுல்ல தேர்தல் மாவட்டம் இரண்டாக பிரிக்கப்பட வேண்டும். கல்முனை, பொத்துவில், சம்மாந்துறை ஆகிய தேர்தல் தொகுதிகள் இதிலிருந்து பிரிக்கப்பட்டு புதிய தேர்தல் மாவட்டம் ஒன்று உருவாக்கப்படுதல் வேண்டும். இவ்வாறான கட்டமைப்பு யாழ். மாவட்டத்திலும், வன்னியிலும் உள்ளது. யாழ். மாவட்டம், யாழ்ப்பாணம், கிளிநொச்சி என இரண்டு தேர்தல் மாவட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. வன்னி மாவட்டம், வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் என்று மூன்று தேர்தல் மாவட்டங்களாக பிரிக்கப்பட்டு உள்ளது.

திகாமடுல்ல தேர்தல் மாவட்டம் இவ்விதம் இரண்டாக பிரிக்கப்படுவதன் மூலமே தேர்தல்களில் சிறுபான்மை மக்களின் அபிலாஷைகள் வெற்றி பெறக் கூடியதாக இருக்கும். மேலும், அம்பாறை மாவட்டத்தைப் பொறுத்தவரை சாய்ந்தமருதுக்கு தனியான நகர சபை வழங்கப்பட வேண்டும், சம்மாந்துறை நகர சபை தரம் உயர்த்தப்பட வேண்டும். திருகோணமலை மாவட்டத்தில் தோப்பூருக்கு பிரதேச சபையும், மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழைச்சேனை மத்திக்கு பிரதேச சபையும் உருவாக்கப்பட வேண்டும் - என்றார் ஹஸன் அலி.

## ஒட்சிசன் தட்டுப்பாடு...

நேரிடலாம் என சுகாதாரத் துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

நாட்டில் கடந்த வாரத்திலிருந்து ஒட்சிசன் தேவையுடையோரின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துவருவதால் தொற்றுக்குள்ளாகும் நோயாளர்களுக்கு வழங்க வேண்டிய ஒட்சிசன் உற்பத்தியையும் அதிகரிக்க வேண்டி ஏற்பட்டது. இதனால், சிங்கப்பூர் மற்றும் இந்தியாவிலிருந்து ஒட்சிசன் இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்திருந்தார். இந்த நிலையில் ஒட்சிசன் தேவை ஏற்படுவோரின் எண்ணிக்கை ஆயிரத்தை கடந்துச் செல்லும் நிலைமை காணப்படுவதாக தெரிவிக்கப்பட்ட நிலையில், நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற ஒட்சிசனின் முழு அளவையும் நோயாளர்களுக்கு பயன்படுத்த வேண்டிய உச்சக்கட்டத்தில் இருப்பதால், எதிர்வரும் வாரங்களில் நாட்டின் உற்பத்தி அளவை தாண்டும் ஆபத்து ஏற்படலாம் என சுகாதாரத் துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

குறிப்பாக, இனி நாட்டின் தேவைக்கு ஏற்ற ஒட்சிசன் உற்பத்தியை இங்கு முன்னெடுப்பதில் பாரிய நெருக்கடி நிலை ஏற்படலாம் எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர். இந்த நிலையில் ஒட்சிசன் தேவை குறித்து சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் கருத்து தெரிவிக்கையில்,

நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற முழு ஒட்சிசன் அளவையும் தற்போது பயன்படுத்துகின் றோம். இதனால், வெளிநாடுகளிலிருந்து ஒட்சிசனை இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எனினும், வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்வதும் வரையறைக்குட்படுத்தப்படலாம். நாங்கள் இறக்குமதி செய்யும் நாடுகள் ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் தங்களுக்கும் ஒட்சிசன் தேவை இருப்பதால் எங்களுக்கு தர முடியாது என கூறினால் நாங்கள் என்ன செய்வோம் என்பதும் பாரிய பிரச்சினையாகும்.

அத்தோடு, நாட்டிலுள்ள வைத்தியசாலைகளுக் கும் ஒட்சிசன் உற்பத்தி செய்யும் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு பல மாற்றுவழிகளை முன்னெடுத்து ஒட்சிசன் உற்பத்தியை உச்சமட்டத்தில் முன்னெடுத்துச் செல்கின்றோம். எனினும், எல்லாவற்றிற்கும் ஒரு வரையறை இருக்கின்றது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

ஆகவே, முடிந்தவரை கொரோனா தொற்றுக்குள்ளாகும் நோயாளர்களை குறைப்பதற்கான நடவடிக்கைக்கு எப்போதும் முக்கியத்துவம் கொடுத்து செயற்பட வேண்டிய கட்டாயத்திலுள்ளோம் நோயாளர்களுக்கு ஒட்சிசன் வழங்கும் அளவை பொருத்தே உற்பத்தித் திறனும் தீர்மானிக்கப்படுகின்றது. சில சமயங்களில் 5 லீற்றர் அல்லது 10 லீற்றர் ஒட்சிசனும் வழங்க வேண்டிவரும். இவ்வாறான நிலையில் ஜம்போ சிலிண்டராக இருந்தாலும் அவை குறிப்பிட்ட சில மணி நேரத்திற்கு மாத்திரமே போதுமானதாக இருக்கும். இவ்வாறு 24 மணித்தியாலமும் பயன்படுத்தும் போது 8 -10 அல்லது 10 – 12 சிலிண்டர்களும் பயன்படுத்த நேரிடலாம்.

பின்னர் அந்த சிலிண்டர்கள் நிரப்புவதற்கு அனுப்ப வேண்டும். அவ்வாறு அனுப்பும் போது மற்றொரு சிலிண்டர் அங்கு நிரப்பியிருக்க வேண்டும். சாதாரணமாக ஒரு நோயாளருக்கு ஒரு நாளைக்கு 10 சிலிண்டர் தேவை ஏற்பட்டால் அவருக்கு மேலும் 10 சிலிண்டர் அருகில் இருக்க வேண்டும். மேலும் 10 சிலிண்டர் உற்பத்தி நிறுவனத்தில் நிரப்பியிருக்க வேண்டும். அவ்வாறாயின் ஒரு நோயாளருக்கு சாதாரணமாக 30 ஒட்சிசன் சிலிண்டர் ஒதுக்கிவைக்க வேண்டும். இவை அனைத்து சரியான தொகையாக இருக்காது சில நேரம் குறையலாம். சில நேரம் கூடலாம். ஆகவே, நாளுக்கு நாள் கொவிட் நோயாளர்கள் அதிகரிக்கும் பட்சத்தில் ஒட்சிசன் வழங்குவதில் பாரிய நெருக்கடியை சந்திக்க நேரிடலாம் - என்றார்.

## திமிழ்ப்பெண்கள் இருவர்...

பாரிஸின் முன்னணி ஊடகங்களில் தலைப்புச் செய்தியாக இடம்பெற்றுள்ள இந்தச் சம்பவம் புலம்பெயர் இலங்கை குடும்பங்களில் இடம் பெற்ற இன்னொரு குரூரக் கொலையாகப் பதிவா கியுள்ளது.

பாரிஸிலிருந்து வடமேற்கே சுமார் முப்பது கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள வால்துஓஸ் பிராந்தியத்தின் செந்துவான் லமேன் (Saint-Ouen-l'Aumne) பகுதியில் இந்த இரட் டைக்கொலை இடம்பெற்றுள்ளது.

இரவுநேரப் பணிமுடித்து காலை 10 மணியளவில் வீடு திரும்பிய இலங்கை பூர்வீகத்தை கொண்ட குடும்பத்தலைவர், தனது 52 வயதான மனைவியும் 21 வயதான மகளும் அவர்களது படுக்கை அறையில் கழுத்து அறுக்கப்பட்டும், குத்தப்பட்ட காயங்களுடனும் சடலங்களாக இருப்பதைக் கண்டதையடுத்து இந்த குரூர சம்பவம் வெளிச்சத்துக்கு வந்தது.

உடனடியான பொலிஸார் உட்பட அவசரகாலப் பணியாளர்கள் அழைப்பட்டு அந்தப்பகுதி சுற்றி வளைக்கப்பட்டிருந்தது. பொலிஸாரின் தடயவியல் பிரிவு நடத்திய தேடுதல்களில் கொலைக்கு பயன்படுத்தப்பட்டதாக கருதப்படும் ஒரு கூரிய கத்தி அந்த இடத்திலிருந்து மீட்கப்பட் டிருந்தது.

இந்தக் குரூர சம்பவத்திலும் கொலையாளி இந்த குடும்பத்திற்குள் இருப்பதற்கான சாத்தியங்களை பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகள் குறிப்பிடுகின்றன. ஆயினும், இந்தக் கட்டத்தில் இதுகுறித்த திடமான அனுமானங்களை வெளியிடுவதற்கு பொலிஸார் விரும்பவில்லை.

குறித்த வீட்டிலிருந்து கொல்லப்பட்டவரின் இரண்டு மகன்கள் பொலிஸாரின் பாதுகாப்பு டன் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப் பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர், ஆடைகளில் இரத்தம் தோய்ந்த நிலையில் இருந்ததாகவும், இந்த சம்பவம் நடந்தபோது வீட்டில் இல்லாத மற்ற மகன் கடும் அதிர்ச்சியில் இருந்ததாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கொல்லப்பட்டவர்களின் பெயர்கள் நேற்றுக் காலைவரை அறிவிக்கப்படவில்லை. துன்பி யலுக்கு உள்ளான இந்தக் குடும்பம் இரண்டு வருடங்களுக்கு முன்னர்தான் சமூகநல உதவி களை வழங்கும் 'எம்மாஸ்' அமைப்பின் வதிவி டங்கள் அமைந்துள்ள இந்த வளாகத்தில் குடிபெ யர்ந்ததாக கூறப்படுகிறது.

தற்போது வெர்செயில் பிராந்திய நீதித்துறை இந்த சம்பவம் குறித்து விசாரணைகளை ஆரம்பிக்க உத்தரவிட்டதையடுத்து வேண்டு மென்றே செய்யப்படும் படுகொலைக்குரிய வகைப்படுத்தல் பிரிவின் கீழ் பொந்துவாஸ் அரசு வழக்குத் தொடுநர் பணியகம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. இந்த குரூர கொலைகளுக்குரிய துல்லியமான காரணங் கள் இனிமேல்தான் தெரியவரும் என்ற போதிலும் இந்த சம்பவம் பிரான்ஸ்வாழ் இலங்கையர்களையும் புலம்பெயர் இலங்கை மக்களையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

# இன்றைய ராசி பலன்

நாள்: 13.08.2021 வெள்ளிக்கிழமை – ஆடி 28

**ஜோதிடர் நற்பவி**

தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141

| சுப நேரங்கள் | அசுப நேரங்கள் | |
|---|---|---|
| காலை 09.23-10.15 | ராகு காலம்<br>காலை 10.44-12.17 | எமகண்ட காலம்<br>பிற்பகல் 03.23 -04.54 |
| பிரம்ம முகூர்த்தம்<br>14.08.2021<br>மாலை 4.35 -5.21 | குளிகை காலம்<br>காலை 07.40-09.13 | துர் முகூர்த்தம்<br>காலை 08.33 - 09.22<br>பிற்பகல் 12.40-01.30 |

**மேடம்** — இளம் தம்பதியருக்கு இனிமையான செய்தி கிடைக்கும். கல்வியுடன் சில மாணவர்களுக்கு பகுதிநேர தொழில் வாய்ப்புகள் உண்டாகலாம்.

**ரிஷபம்** — காணி/வீடு விடயங்கள் நன்மை பெறும். வியாபார பயணங்களும், புதிய தொழில் முயற்சிகளும் உண்டாகலாம்.

**மிதுனம்** — காதல் அனுபவம் ஏற்படலாம். பிறரின் விடயங்களில் தலையீடு வேண்டாம். பணியிடங்களில் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**கடகம்** — கூட்டுத் தொழில் பங்குதாரர்களிடம் நேர்மையாக இருப்பது நன்மை தரும். நிதி நிலைமை சீராகும்.

**சிம்மம்** — பிரச்சினைகள் உங்களால் நீங்கப் பெறும். இல்லத்தில் ஆதரவு தன்மை பெருகும். பிள்ளைகளும் மகிழ்ச்சியை தரலாம்.

**கன்னி** — பயணங்களில் கவனம் தேவைப்படலாம். புதிய தொழில் நிதி முதலீடுகளில் அதிக கவனம் தேவை.

**துலாம்** — பணப் பிரச்சினைகள் உண்டாகலாம். சகோதரர்களுடன் அன்பாக இருப்பது அவர்களுக்கு ஆறுதல் தரலாம். உடல் நலத்தில் சிறிய கவனம் தேவைப்படலாம்

**விருச்சிகம்** — வணிகத்திலிருந்த பிரச்சினைகள் நீங்க துவங்கும். புதிய பணிக்கான செய்திகளும், பணி உயர்வும் கிடைக்க பெறலாம். காதலர்களுக்குள் நல்ல உறவு உருவாகும்.

**தனுசு** — சந்தைப்படுத்தும் தொழில் நன்மை பெறும். உழைப்பும் அதிகரிக்கும். வணிகத்தில் அதிக இலாபம் உண்டாகலாம்.

**மகரம்** — தம்பதியரிடையே சகிப்புத்தன்மை தேவைப்படலாம். பணியிடங்களில் ஒத்துழைப்பு கிடைக்காமல் இருக்கலாம். இறைவணக்கம் அமைதி தரும்.

**கும்பம்** — பிள்ளைகளின் உடல்நலத்தில் சிறிய கவனம் தேவைப்படலாம். வியாபாரத்தில் தேவையற்ற பிரச்சினைகள் நீங்க இறையருள் உதவி செய்யும்.

**மீனம்** — திருமணத்திற்கு காத்திருப்போருக்கு இறையருளால் சுப செய்திகள் கிடைக்கக்கூடும். திறமையால் வணிகத்தில் நன்மைகள் உண்டாகலாம். பிள்ளைகளின் முயற்சிகள் வெற்றி தரும்.

# கொரோனா செய்திகள்

## பதுளை மருத்துவமனையில் வைத்தியர்கள் மூவர் உள்ளிட்ட 16 பேருக்கு கொரோனா

பதுளை பொது வைத்தியசாலையில், வைத்தியர்கள் மூவர் உள்ளிட்ட பணியாளர் பிரிவில் 16 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அவசர சிகிச்சைப்பிரிவின் பிரதான வைத்தியர் பாலித ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வைத்தியர்கள் மூவர், தாதியர்கள் ஆறு பேர் மற்றும் கனிஷ்ட பணிப்பிரிவைச் சேர்ந்த 7 பேருக்கும் இவ்வாறு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன், நேற்றைய தினம் எழுமாறாக சிலருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் 27 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பதுளை பொது வைத்தியசாலையில் இதுவரையில் 116 கொரோனா நோயாளர்கள், 05 மருத்துவ விடுதிகளில் தங்கி சிகிச்சை பெற்று வருவதாகவும், நாளொன்றுக்கு பெருந்தொகை நோயாளர்கள் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## சாரதி அனுமதிப்பத்திர காலாவதி திகதி நீடிப்பு

சாரதி அனுமதிப்பத்திர காலாவதி திகதி இந்த வருடம் டிசம்பர் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்றுப் பரவல் காரணமாக மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் வேரஹெர மற்றும் நாரஹேன்பிட்டி ஆகிய அலுவலகங்கள் எதிர்வரும் திங்கட்கிழமை (16) முதல் 07 நாட்களுக்கு மூடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மோட்டார் வாகன போக்குவரத்து ஆணைக்குழு தற்காலிகமாக மூடப்படுகிறது

நாரஹேன்பிட்ட மோட்டார் வாகன போக்குவரத்து ஆணைக்குழு அலுவலகம் மற்றும் வேரஹெர அலுவலகங்கள் எதிர்வரும் திங்கட்கிழமை (16) முதல் தற்காலிகமாக மூடப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாரஹேன்பிட்ட பிரதான அலுவலகத்தில் பிரதி ஆணையாளர்கள் மூவர் உட்பட 15 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள காரணத்தினாலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. வேரஹெர அலுவலகத்திலும் சிலருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வவுனியாவில் ஒரே நாளில் 84 பேருக்குக் கொரோனா

வவுனியாவில் மேலும் 84 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப் பட்டுள்ளது எனச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனா தொற்றுக்குள்ளானோருடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளின் முடிவுகள் சில நேற்று வெளியாகின.

## புத்தளத்தில் 106 பேருக்கு கொரோனா; சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நால்வர் பலி

(ஜூட் சமந்த)

புத்தளம் மாவட்டத்திலுள்ள சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளில் நேற்றுக் காலை வரையில் புதிதாக 106 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

சிலாபம் சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவில் அதிகளவான கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதற்கமைய அந்தப் பிரதேசத்தில் 44 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆராச்சிக்கட்டுவ சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவில் 20 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், மாதம்பே சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவில் 16 பேருக்கும் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தங்கொட்டுவ மற்றும் வென்னப்புவ சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளில் 16 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், மாரவில மற்றும் நாத்தாண்டிய ஆகிய பிரதேசங்களில் 15பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

புத்தளம் சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவில் 09 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. முந்தல் சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவில் 05 பேரும், பல்லம பிரதேசத்தில் 07 பேரும் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். ஏனைய 10 கொரோனா நோயாளர்கள் ஆனமடுவ, நவகன்னேகம மற்றும் கருவலகஸ்வெவ ஆகிய பிரிவுகளில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதேவேளை மாரவில உதவி பொலிஸ் அதிகாரி ஒருவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ள கொரோனா நோயாளர்களில் அநேகமானவர்களை அவர்களில் வீடுகளிலேயே வைத்து சிகிச்சை வழங்குவதற்கு சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். ஆபத்தான நிலையிலுள்ள நோயாளர்களை மாத்திரம் சிகிச்சை மத்திய நிலையங்களுக்கு அழைத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

கொரோனா தொற்றுக்குள்ளாமையினால் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நால்வர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளனர்.

இரணைவில் சிகிச்சை மத்திய நிலையத்தில் மூவர் உயிரிழந்துள்ளனர். அவர்கள் மூவரும் ஆண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. நாரம் மலை, பிபில மற்றும் பிலியந்தலை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 60 வயதுக்கும் மேற்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சிலாபம் பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த பெண்ணொருவர் நேற்று முன்தினம் மாலை உயிரிழந்துள்ளார்.

அவர் சிலாபம், பங்கதெனிய பிரதேசத்தைச் சேர்ந்த 60 வயதுக்கும் மேற்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## அகலவத்தை பிரதேச சபையில் 9 பேருக்கு கொரோனா தொற்று

### மறு அறிவித்தல்வரை மூடப்பட்டது

அகலவத்தை பிரதேச சபைத் தலைவர் ஜயசேன கம்புராவல, உப தலைவர் ரோஹண கலபட உட்பட பிரதேச சபை ஊழியர்கள் ஒன்பது பேர் தொற்றுக்குள்ளானதைத் தொடர்ந்து அகலவத்தை பிரதேச சபை காரியாலயத்தை எதிர்வரும் 22 ஆம் திகதி வரை மூட பிரதேச சுகாதார அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த 8 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளின் பெறுபேறுகளின் அடிப்படையிலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதுடன், தற்போது தொற்றுக்குள்ளானோர் அனைவரும் தத்தமது வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். மேலும், இவர்கள் கொரோனா எதிர்ப்பு தடுப்பூசி இரண்டையும் பெற்றுக்கொண்டவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### கொரோனா தொற்றுக்குள்ளானோர் விபரம்

| மொத்த பாதிப்பு | சிகிச்சை பெறுவோர் | குணமடைந்தோர் | புதிதாக அடையாளம் | மரணம் |
|---|---|---|---|---|
| 344,499 | 36,580 | 302,455 | 2,420 | 5,620 |

## வெளிநாட்டிலிருந்து வருவோருக்கு பி.சி.ஆர். பரிசோதனை அவசியம்

வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு வருபவர்களை தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தும் நடைமுறையில் சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் மீண்டும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதன்படி, முழுமையாக தடுப்பூசி செலுத்தப்பட்ட இலங்கையர்கள் மற்றும் இரட்டைக் குடியுரிமை கொண்டவர்கள் நாட்டிற்குள் நுழைவதற்கு முன் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சகம் அல்லது சிவில் விமானப் போக்குவரத்து ஆணைக்குழுவிடம் அனுமதி பெற வேண்டிய தேவையில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், அவ்வாறு வரும் அனைவரும் நாட்டிற்குள் வந்தவுடன் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கர்ப்பிணித் தாய்மாருக்கு 24 ஆம் திகதி முதல் தடுப்பூசி

கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்த முன்னெடுத்துள்ள தடுப்பூசி வழங்கல் திட்டத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கர்ப்பிணித் தாய்மாருக்கு கொரோனா தடுப்பூசி வழங்கும் திட்டத்தை முன்னெடுப்பதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் ஆலோசனைக்கமையவே இந்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக விசேட வைத்திய நிபுணர் பிரதீப் டி சில்வா தெரிவித்துள்ளார்.

## கொரோனா தொற்றுக்குள்ளான சிறார்களுக்கு வீட்டில் வைத்து சிகிச்சை வழங்கத் தீர்மானம்

கொரோனா தொற்றுக்குள்ளான சிறிதளவு நோய் அறிகுறிகள் காணப்படுகின்ற 2 வயது முதல் 14 வயது வரையான சிறுவர்களுக்கு வீட்டில் சிகிச்சை வழங்கத் தீர்மானித்துள்ளதாக கொழும்பு சீமாட்டி ரிட்ஜ்வே மருத்துவமனையின் சிறுவர் வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை மிக வேகமாக அதிகரித்துச் செல்வதைக் கருத்தில் கொண்டே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

சிறுவர் வைத்தியசாலையில் கொரோனா தொற்று சிகிச்சைக்கு முன்னுரிமை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும், கொரோனா தொற்று தொடர்பான ஏதேனும் சிக்கல்கள் ஏற்பட்டால் சிறுவர்களை வைத்தியசாலைக்கு அழைத்து வர வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்றுக்குளான சிறுவர்களை வீட்டில் வைத்து சிகிச்சை வழங்கும்போது, சிறுவர்களை கவனித்துக்கொள்ள அவர்களுக்கு அருகில் பெரியவர் ஒருவர் எந்த நேரமும் இருக்க வேண்டும். அத்துடன் தொலைபேசி மூலம் சிகிச்சை பரிந்துரைக்கப்படுவதால் தேவையான வசதிகளை பெற்றுக்கொள்ள சிறுவர்களின் பொறுப்பாளர்கள் எந்நேரமும் தயாராக இருக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு வீட்டிலிருந்து எவ்வாறு சிகிச்சை வழங்குவது என்பது தொடர்பாக அறிந்து கொள்ள 1390 என்ற இலக்கத்தில் அழைக்கலாம் என்றும், நாட்பட்ட நோய்கள் அல்லது ஏனைய நோய்களால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை கண்டிப்பாக வைத்தியசாலைக்கு அழைத்து வர வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## துளிச் செய்திகள்

★அனுராதபுரம் நகரசபைத் தலைவருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. திருமண நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னரே தொற்றுக்குரிய அறிகுறிகள் தென்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

★அரசாங்க அச்சகத் திணைக்களத்தில் பணியாற்றும் 15 பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதையடுத்து அங்கு ஐந்து பிரிவுகளைத் தற்காலிகமாக மூடுவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

★காலியில் உணவகம் ஒன்றில் முகக்கவசம் இல்லாமல் உணவு சமைத்த நபர் ஒருவரை தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் பொலிஸார் கைதுசெய்ததுடன், அவரை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் நீதிமன்ற நீதவான் பவித்ரா சஞ்சீவனி பத்திரண உத்தரவிட்டுள்ளார்.

★பொல்கஹவலவில் தொலைக்காட்சி நாடகமொன்றின் படப்பிடிப்புக்காக வருகைதந்திருந்த குழுவினரில் நால்வருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாக பொதுச் சுகாதார அதிகாரி மகேஷ் அமாகர தெரிவித்துள்ளார்.

★பாணந்துறை, பிங்வத்த பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் அதிகாரிகள் எண்மருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

★மத்துகமவில் கொரோனா தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதையடுத்து, பொதுச் சந்தையை தற்காலிகமாக மூடுவதற்கு பொதுச் சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.



தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2021, ஓகஸ்ட் 13ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# கொரோனா ஒழிப்பின் தேவை

கொரோனாபாதிப்பிலிருந்து மீண்டு வரவே நாம் கடுமையாகப் போராடிக் கொண்டிருக்கும் நிலையில், அதி தீவிரமான பாதிப்பை ஏற்படுத்தும் ‘மார்பர்க்’ வைரஸ் பாதிப்பால் கினியா நாட்டில் ஒருவர் உயிரிழந்திருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கொரோனா பாதிப்பிலிருந்தே நாம் இன்னும் முழுமையாக மீளவில்லை. கொரோனா வெக்சின் கண்டுபிடிக்கப்பட்டாலும் கூட வைரஸ் பாதிப்பு தொடர்ந்துகொண்டேதான் இருக்கிறது. இந்தச் சூழலில் மிக மோசமான பாதிப்பை ஏற்படுத்தும் ‘மார்பர்க்’ வைரஸ் பாதிப்பு கினியா நாட்டில் உறுதி செய்யப்பட்டுள்ளது ஆய்வாளர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மேற்கு ஆபிரிக்க நாடான கினியாவில் கடந்த ஜூலை 25ஆம் திகதி ஒருவருக்கு அதி தீவிரமான காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்றுவந்த அவர், சில நாட்களில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். அவரிடமிருந்து எடுக்கப்பட்ட மாதிரிகளில் அவருக்கு மோசமான பாதிப்பை ஏற்படுத்தும் ‘மார்பர்க்’ வைரஸ் பாதிப்புள்ளது உறுதிசெய்யப்பட்டது. இதை உலக சுகாதார அமைப்பும் உறுதிசெய்துள்ளது. இது சர்வதேச ஆய்வாளர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த ‘மார்பர்க்’ வைரஸ் வௌவால்களிலிருந்து மனிதர்களுக்குப் பரவக்கூடியது. எபோலா மற்றும் கொரோனா வைரஸை போலவே இதுவும் விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்குப் பரவிய ஒரு வைரஸாகும். ஆனால், அந்த இரண்டு வைரஸ்களைவிட இது மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தும். இந்த ‘மார்பர்க்’ வைரஸால் பாதிக்கப்படுபவர்களில் சுமார் 88 வீதம் பேர் உயிரிழக்கும் அபாயம் உள்ளது. இது கொரோனாவை போன்ற வேகமாகப் பரவும் அதேநேரம், எபோலாவை போன்ற கொடூர பாதிப்பு ஏற்படுத்தும் என்பதால் உலக சுகாதார அமைப்பும் எச்சரித்துள்ளது.

இந்த வைரஸ் விலங்குகளிடமிருந்து ஒரு மனிதருக்குப் பரவிய பின்னர், அவரிடமிருந்து பலருக்கும் பரவும் ஆற்றல் கொண்டது. இந்த வைரஸ் தொற்றால் பாதிக்கப்படும் ஒருவரது உடலிலிருந்து வெளியேறும் உமிழ்நீர், வியர்வை ஆகியவை மூலம் மற்றவர்களுக்குப் பரவும். ஒருவர் வௌவால்கள் அதிகம் இருக்கும் குகை அல்லது சுரங்கம் போன்ற இடங்களில் அதிக காலம் இருக்கும்போது, அவர்களுக்கு இந்த ‘மார்பர்க்’ வைரஸ் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளதாக உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது.

இந்த ‘மார்பர்க்’ வைரஸால் பாதிக்கப்பட்ட 5 முதல் 10 நாட்களுக்குப் பிறகு திடீரென ஒருவருக்குக் காய்ச்சல், தலைவலி ஆகியவை ஏற்படும். அதேபோல் இந்த வைரஸால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மோசமான உடல் வலியும் ஏற்படும். குமட்டல், வாந்தி, மார்பு வலி, தொண்டைப் புண், வயிற்று வலி மற்றும் வயிற்றுப்போக்கு ஆகியவை வைரஸ் தொற்று ஏற்பட்ட மூன்றாம் நாளிலிருந்து ஏற்படத் தொடங்கும். இன்னும் சிலருக்கு மஞ்சள் காமாலை, உடல் எடை இழப்பு, மயக்கம், கல்லீரல் செயலிழப்பு போன்ற தீவிரமான அறிகுறிகளும் ஏற்படும்.

இதுவரை, ‘மார்பர்க்’ வைரஸுக்கு நிரூபிக்கப்பட்ட சிகிச்சை என்று எதுவும் இல்லை. அதேநேரம் மருத்துவ சிகிச்சை, ஒட்ஸிசன் நிலையை முறையாக வைத்திருப்பது, இரத்த அழுத்தத்தைப் பராமரிப்பது போன்றவை மூலம் உயிரிழப்புகளைத் தடுக்கலாம். கொரோனா வைரஸை போலவே இதற்கும் முறையான சிகிச்சை இல்லை. அதேநேரம், இது கொரோனாவைவிட பல மடங்கு மோசமான பாதிப்பை ஏற்படுத்தும் வாய்ப்புகள் அதிகம் என்பதால் உலக சுகாதார அமைப்பு இது பரவாமல் இருக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க கினியாவுக்கு அறிவுறுத்தியுள்ளது.

ஏற்கனவே உலகம் கொரோனாவாலும் அதன் திரிபுகளாலும் அல்லாடிக் கொண்டிருக்கிருக்கும் சூழ்நிலையில், இப்போது இன்னொரு வைரஸ் உலகத்திற்குள் ஊடுருவ ஆரம்பித்துள்ளது. மரத்திலேறி விழுந்தவனை, மாடு மிதித்த கதையாய் இது இருந்தாலும் கொரோனாவை முற்றாக ஒழிப்பதற்கான முயற்சிகளும் எடுக்கப்படாமல் இல்லை. தற்போது இருக்கும் சூழலில் கொரோனா தடுப்பூசிகள் மட்டுமே கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தும் ஒரே ஆயுதமாகப் பார்க்கப்படுகின்றன. அனைத்து நாடுகளும் தடுப்பூசி செலுத்தும் பணிகளைத் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றன.

இருப்பினும், தற்போதுவரை தேவைக்கேற்ப கொரோனா தடுப்பூசி உற்பத்தி இல்லை. இதனால் பல நாடுகளிலும் தடுப்பூசி பற்றாக்குறை நிலவி வருகிறது. பிரிட்டன் லன்காஸ்டர் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் மூக்கில் வழியே செலுத்தக்கூடிய கொரோனா வெக்சின் பற்றிய ஆய்வுகளை நடத்தி வருகின்றனர். அதன்படி முதற்கட்டமாக வௌவால்களுக்கு தங்கள் உருவாக்கிய தடுப்பூசிகளை செலுத்தியுள்ளனர். அப்போது கொரோனா பாதிப்பு ஏற்படுவதை நாசி மூலம் செலுத்தக்கூடிய இந்த தடுப்பூசி சிறப்பாகக் கட்டுப்படுத்துவதைக் கண்டறிந்தனர். அதேபோல் இந்த வெக்சின் மூக்கிலிருந்து வெளேயே வரும் வைரஸ்களையும் குறைக்கிறது. அதாவது இதன்மூலம் வைரஸ் பரவலும் கணிசமாகக் குறையும் என்று அவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

எந்தவிதமான ஊசிகளும் இல்லாமல் நேரடியாக மூக்கில் செலுத்தக்கூடிய இந்த கொரோனா தடுப்பூசி மூலம் கொரோனா பாதிப்பு மற்றும் கொரோனா பரவல் என இரண்டையும் நிறுத்த முடிவதாக லன்காஸ்டர் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். இது கொரோனாவுக்கு எதிரான போரில் மிக முக்கியமான சாதனையாகப் பார்க்கப்படுகிறது. ஏனென்றால், இதுவரை கண்டறியப்பட்ட கொரோனா தடுப்பூசிகள் உயிரிழப்புகளையும், தீவிர கொரோனா பாதிப்பையும் குறைத்தாலும், வைரஸ் பாதிப்பு ஏற்படுவதை அந்த தடுப்பூசிகளால் கட்டுப்படுத்த முடியவில்லை.

ஆனால், மூக்கில் செலுத்தும் வெக்சின் வைரஸ் பரவலையும் தடுப்பதுடன் வைரஸ் பரவலை எளிதாக முடிவுக்குக் கொண்டுவர உதவும் என்பதில் சந்தேகம் இல்லை. இருப்பினும், இவை சோதனை கட்டத்திலேயே உள்ளது. மூக்கில் செலுத்தக்கூடிய கொரோனா தடுப்பூசி குறித்த ஆய்வுகள் உலகின் பல நாடுகளிலும் நடந்துவருகிறது. ஆனால், இவை முதற்கட்ட சோதனையிலேயே உள்ளதால், இவை மக்கள் பயன்பாட்டிற்கு 2022ஆம் ஆண்டிலேயே வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உலகின் பல நாடுகளிலும் இப்போது டெல்ட்டா கொரோனா பாதிப்பு காரணமாக அடுத்தடுத்த அலைகள் ஏற்பட்டு வருகின்றன. மற்ற எந்த உருமாறிய கொரோனாவை விடவும் டெல்ட்டா கொரோனா வேகமாகப் பரவுவதால் அது தீவிரமான பாதிப்பை ஏற்படுத்திவந்தது. தற்போது பயன்பாட்டிலுள்ள தடுப்பூசிகள் வைரஸ் பாதிப்பின் தீவிர தன்மையைக் குறைத்தாலும் வைரஸ் பரவலைத் தடுத்து நிறுத்துவதில்லை. ஆனால், மூக்கில் செலுத்தும் வெக்சின் வைரஸ் பாதிப்பைத் தடுத்துநிறுத்துவது முதற்கட்ட சோதனையில் தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தகுந்த சாதனையாகப் பார்க்கப்படுகிறது. அது வெற்றிபெறவேண்டுமென வேண்டிக்கொள்வோம்.

# மக்கள் மனங்களில் நீங்கா இடம்பிடித்த மனிதருள் மாணிக்கம்



# பேருவளை ஷம் றிபாய் ஹாஜியார்

இலங்கையில் வரலாற்றுச் சிறப்பும், கீர்த்தியும்மிக்க பிரதேசங்களில் தென்னிலங்கையின் பேருவளையும் ஒன்றாகும். இலங்கையின் முதலாவது முஸ்லிம் குடியேற்றமான மருதானை கிராமம், கி.பி. 920ஆம் ஆண்டில் கட்டப்பட்ட இலங்கையின் முதலாவது முஸ்லிம் பள்ளிவாசலான பேருவளை, மருதானை மஸ்ஜிதுல் அப்றார் ஜும்ஆ பள்ளிவாசல், 1924 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இலங்கையின் முதலாவது முஸ்லிம் பெண்கள் பாடசாலையான தற்போதைய பேருவளை, மருதானை அல்பாஸியதுல் நஸ்ரியா முஸ்லிம் பெண்கள் பாடசாலை போன்ற வரலாற்றுச் சிறப்புமிக்க அம்சங்களாலும், பண்டைக்காலம் முதல் சர்வதேச வர்த்தகத்தின் கேந்திர நிலையங்களில் ஒன்றான பேருவளை மீன்பிடித் துறைமுகம், கி.பி. 10ஆம் நூற்றாண்டில் பேருவளையில் குடியேறிய சின்னாசியாவிலுள்ள கோன்யாவைச் சேர்ந்த சுல்தானின் புதல்வரான இளவரசர் வைத்தியர் ஜமாலுத்தீனால் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட யுனானி மருத்துவமுறை, கி.பி. 1010ஆம் ஆண்டு ஐந்தாவது மிகிந்து மன்னனின் ஆட்சியின்போது பேருவளை, கொரக்காதுவ எனுமிடத்தைச் சேர்ந்த பெரிய முதலி மரிக்கார் எனும் வணிகர் இந்தியாவிலுள்ள சாலிய பட்டணம் எனும் கிராமத்திலிருந்து ஏழு நெசவாளர்களை அழைத்துவந்து இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட நெசவுத்தொழில் போன்ற வரலாற்று ஏடுகளில் பதிவுசெய்யப்பட்டுள்ள தேசிய பங்களிப்புகளாலும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உல்லாசப்பயணிகளின் மனம்கவர் கடற்கரைகள், பர்பரீன் தீவு மற்றும் ஆன்மீகத் தளங்களாலும், பேருவளை சீனன்கோட்டையில் அமைந்துள்ள பத்தக்கட சர்வதேச மாணிக்க வியாபார சந்தையினாலும், இலங்கை முஸ்லிம் இளைஞர்களின் கல்வி மற்றும் தொழில் கல்வித்துறையில் அளப்பரிய பங்களிப்புகளை நீண்டகாலமாக வழங்கிக்கொண்டிருக்கும் பேருவளை ஜாமிஆ நளீமிஆ கலாசாலை, இக்ராஃ தொழில்நுட்பக் கல்லூரி போன்றவற்றை சுமந்துகொண்டிருப்பதாலும் பேருவளை மண் இலங்கையில் கீர்த்திமிக்க நாமத்தைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

மேலும், இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க பங்களிப்புகளால் பேருவளை நாமம் எவ்வாறு கீர்த்தி பெற்றதோ அதேபோன்று பேருவளையைச் சேர்ந்த சில தனிநபர்களது வியத்தகு பங்களிப்புகளாலும் பேருவளை நாமம் சர்வதேசம்வரை வியாபித்துள்ளமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். அவ்வாறு பேருவளையில் பிறந்து தேசிய ரீதியில் சமூகம், கல்வி, பொருளாதாரம், அரசியல், ஆன்மீகம் என பல்வேறு துறைகளிலும் அளப்பரிய பங்களிப்புகளை வழங்கி நாட்டுக்கும், ஊருக்கும் பெருமை சேர்த்தவர்கள் ஏராளம் என்றே சொல்லலாம். அந்தவகையில் ஊருக்கும், சமூகத்துக்கும், நாட்டுக்கும் தமது சொந்த நிதியிலிருந்து கோடானகோடிகளால் எண்ணற்ற சேவைகள் புரிந்த அறிவுத் தந்தை நளீம் ஹாஜியார், கொடை வள்ளல் றிபாய் ஹாஜியார் போன்றவர்களின் வகிபாகம் பாராட்டத்தக்கது. இந்த ஆக்கம் அண்மையில் காலமான பிரபல சமூக சேவையாளரும், வர்த்தகருமான ஸ்ரீலங்கா சிகாமணி ஷம் (zam) றிபாய் ஹாஜியாரின் வாழ்க்கைப் பயணத்தின் சில பக்கங்கள் குறித்து அவதானம் செலுத்தவுள்ளது.

### ஆரம்ப காலமும், மாணவப் பருவமும்

பேருவளை நகரசபையின் முதலாவது அமர்வின் உறுப்பினர்களில் ஒருவரான ஸைனுல் ஆப்தீன் மரிக்கார் - தம்பி ஹாஜியார் ஆலியதும்மா தம்பதிகளுக்கு இரண்டாவது பிள்ளையாக ஷம் றிபாய் 1936ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ஆம் திகதி பேருவளையில் பிறந்தார். சிறுவன் றிபாய் தற்போதைய பேருவளை மருதானை அல்பாஸியதுல் நஸ்ரியா முஸ்லிம் பெண்கள் பாடசாலையில் தனது ஆரம்பக் கல்வியினை 1941ஆம் ஆண்டு ஆரம்பித்தார். பின்னர் கொழும்பு ஹமீத் அல்ஹுஸைனியா கல்லூரி, கம்பளை ஸாஹிரா கல்லூரி, தர்காநகர் ஸாஹிரா கல்லூரி போன்றவற்றில் தனது பாடசாலைக் கல்வியினை மேற்கொண்டார்.

### தொழில் பிரவேசம்

தனது பாடசாலைக் கல்வியை நிறைவுசெய்த மாணவன் றிபாய் உயர்கல்வியை தொடராமல் தொழில் செய்வதற்கு ஆயத்தமானார். இரத்தினபுரி நகரிலுள்ள கடையொன்றில் பத்து ரூபா மாத சம்பளத்திற்கு விற்பனை உதவியாளராக இணைந்துகொண்டார். பின்னர் கொழும்பு மருதானையிலுள்ள Colombo Stores இல் 90 ரூபா மாத சம்பளத்திற்கு விற்பனையாளராக இணைந்துகொண்டார். அங்கு சில காலம் பணியாற்றிய றிபாய் பின்னர் அந்நிறுவனத்திலிருந்து விலகி பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள Sheriff and Faiz Textile நிறுவனத்தில் 125 ரூபா மாத சம்பளத்திற்கு வேலைக்குச் சேர்ந்தார். அங்கும் சில காலம் பணியாற்றிய றிபாய் பின்னர் Silk Paradise நிறுவனத்தில் 160 ரூபா மாத சம்பளத்திற்கு பணியாற்றினார். பின்னர் கொழும்பிலுள்ள சாரதாஸ் (Sarathas) நிறுவனத்தில் 200 ரூபா மாத சம்பளத்திற்கு விற்பனையாளராக இணைந்துகொண்டார்.

பேருவளையிலிருந்து நாளாந்தம் கொழும்பிற்கு போக்குவரத்து செய்வது சிரமமாக இருந்தமையினால் சிறிய வாடகை அறையொன்றில் கொழும்பில் தங்கியிருந்தார் றிபாய். இவ்வாறு கொழும்பிலுள்ள சில வியாபார நிலையங்களில் பல வருடங்கள் பல்வேறு சிரமங்களோடும், அர்ப்பணங்களோடும் விற்பனையாளராக பணியாற்றி வாடிக்கையாளர்களுடன் எவ்வாறு கதைப்பது? எவ்வாறு வாடிக்கையாளர்களுக்கு பொருட்களை விற்பனை செய்வது? போன்ற வாடிக்கையாளர் தொடர்பாடல்களையும், விற்பனை



நுட்பங்களையும் றிபாய் பல வருட அனுபவமூடாக கற்றுக்கொண்டார். வாடிக்கையாளர்களுடன் இன்முகத்துடன் உறவாடி பொருட்களை விற்பனை செய்வதில் றிபாய் கைத்தேர்ந்தவராக இருந்தார். கடைசிவரை அவரது வியாபாரத்தின் வெற்றிக்கு இது பேருதவியாக இருந்ததெனலாம். இவ்வாறு வியாபார நிலையங்களில் பணியாற்றிக்கொண்டே சிறிய சேமிப்புகளைக்கொண்டு தனது ஓய்வுநேரங்களில் சிறியளவிலான வியாபாரங்களையும் அவ்வப்போது மேற்கொண்டார் றிபாய். தான் ஒரு விற்பனையாளர் என்ற நிலையிலிருந்து வியாபாரி என்ற அந்தஸ்தை அடைவதற்கான கனவுப் பயணத்தை அப்போதே ஆரம்பித்தார் றிபாய்.

### திருமண வாழ்க்கை

1967ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 12ஆம் திகதி கொழும்பைச் சேர்ந்த உயர் குடும்பத்துப் பெண்ணான ஸித்தி பாயிஸா என்பவரை திருமணம் செய்தார் றிபாய். “கொழும்பில் இவ்வாறான உயரிய அந்தஸ்துள்ள பெண் ஒருவரை திருமணம் முடிப்பது குறித்து நான் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. இது இறைவனின் பேரருளாகும்” என்று றிபாய் ஹாஜியார் தனது வாழ்க்கை வரலாறு தொடர்பிலான ஆவணப்படத்தில் தனது மனைவி குறித்து கூறியிருந்தார். இறைவனின் பேரருளினால் குடும்ப வாழ்வில் ஒரு ஆண்பிள்ளையும், இரண்டு பெண்பிள்ளைகளுமாக மூன்று பிள்ளைகளும், 13 பேரக்குழந்தைகளும் உள்ளனர்.

ஷம் றிபாய், வியாபாரத்தில் மும்முரமாக இருந்த அதேவேளை, குடும்ப வாழ்வில் தனது மனைவிக்கு அன்புமிகு கணவனாகவும், பிள்ளைகளுக்கு சிறந்த தந்தையாகவும், வழிகாட்டியாகவும், பேரப்பிள்ளைகளுடன் பாசம்மிக்க (பாட்டனார்) அப்பாவாகவும் மிளிர்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

றிபாய் ஹாஜியாரின் குடும்ப வாழ்விலும், வியாபாரத்திலும், சமூக சேவைகளிலும் உறுதுணையாக இருந்த அவரது அன்பு மனைவி ஸித்தி பாயிஸா, 2018ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார்.

### தொழிலதிபர்

திருமணத்தின் பின்னர் றிபாயின் வாழ்க்கையிலும், வியாபாரத்திலும் வேகமான எழுச்சியும், வளர்ச்சியும் ஏற்பட்டதெனலாம். Refai’s எனும் பெயரில் ஆடை வியாபார நிலையமொன்றை நடத்தி தனது வியாபார கனவினை ஆரம்பித்தார். பின்னர் அவரது மனைவியின் குடும்பத்தினரால் கொழும்பு Oberoi ஹோட்டலில் ஆரம்பிக்கப்பட்ட புத்தக வியாபார நிலையத்திற்கு பொறுப்பளராக றிபாய் ஹாஜியார் நியமிக்கப்பட்டார். இச்சந்தர்ப்பத்தில் மாலையில் தனக்கு அறிமுகமான இரத்தினக்கல் வியாபாரத்தில் ஈடுபடும் வாடிக்கையாளர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டார். அவர்களுக்குத் தேவையான இரத்தினக்கற்களை தனது உறவினர்கள் மூலமாக பெற்று விற்பனைசெய்ய ஆரம்பித்தார். இதன்மூலம் குறிப்பிடத்தக்களவிலான இலாபத்தினை பெற்றுக்கொண்டார். இதுவே ஷம் றிபாயின் இரத்தினக்கல் வியாபாரத்தின் ஆரம்ப படிக்கற்களாகும்.

பின்னர் தனது ஒன்றுவிட்ட சகோதரரான ஸாபிர் பாஷாவின் உதவியுடன் கொழும்பு ஹோட்டல்களிலுள்ள வெளிநாட்டு உல்லாசப் பயணிகளை சந்தித்து இரத்தினக்கல் வியாபாரத்தை மேற்கொண்டுவந்தார். இரத்தினக்கல் வியாபாரத்தில் றிபாய் ஹாஜியாரிடம் காணப்பட்ட உண்மை, நேர்மை, நியாயமான விலை, உயர்ந்த தரம் போன்றவற்றினால் ஈர்க்கப்பட்ட வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் வர்த்தகர் றிபாய் ஹாஜியாருடனான வர்த்தக தொடர்புகளை பேணிக்கொண்டனர். இதன்மூலம் சர்வதேச அளவில் வாடிக்கையாளர்களின் நன்மதிப்பைப் பெற்றுக்கொண்டார் றிபாய் ஹாஜியார். தனக்கென தனியான வாடிக்கையாளர் வலயமைப்பொன்றினை றிபாய் உருவாக்கிக்கொண்டார்.

*14ஆம் பக்கம் பார்க்க...*

## மக்கள் கடிதம்

***வாசகர்களே ,***

***உங்கள் ஊரிலுள்ள குறைநிறைகளை, பிரச்சினைகளை எங்களுக்குத் தபால் மூலமாகவோ, மின்னஞ்சலினூடாகவோ எழுத்துமூலம் தெரிவியுங்கள்.***

***பிரதி சனிக்கிழமைகளில் எமது பத்திரிகையில் வெளிவரவுள்ள மக்கள் கடிதம் பகுதியில் அவற்றைப் பிரசுரிப்போம்.***

thamilaneditor@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அல்லது 0761393805 என்ற தொலைபேசி இலக்கத்தின் வட்ஸப்புக்கு அனுப்பலாம்.

# இரட்டை பிரஜாவுரிமை கொண்டவர்கள் ஜனாதிபதியாக நியமிக்கப்படுவதை தவிர்ப்பதற்கு முறையொன்று அவசியம்

## சுதந்திரக் கட்சி உள்ளிட்ட மூன்று கட்சிகள் தேர்தல் மறுசீரமைப்பு தொடர்பில் பரிந்துரை

## ஜனாதிபதித் தேர்தல் - பொதுத் தேர்தல் என்பவற்றை ஒரே தினத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் அவசியமெனவும் வலியுறுத்து





ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மற்றும் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆகியன தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பாக பொருத்தமான சீர்திருத்தங்களை அடையாளங்காண்பதற்கும் தேவையான திருத்தங்களைப் பரிந்துரைப்பதற்குமான நாடாளுமன்ற விசேட குழுவுக்கு தமது முன்மொழிவுகளை எழுத்துமூலம் நேற்று முன்தினம் கையளித்தன.

அமைச்சர் மஹிந்த அமரவீர, இராஜாங்க அமைச்சர்களான தயாசிறி ஜயசேகர மற்றும் லசந்த அழகியவண்ண ஆகியோர் தமது கட்சிகள் சார்பில் முன்மொழிவுகளை குழுவின் தலைவர், சபை முதல்வரும் அமைச்சருமான தினேஷ் குணவர்தனவிடம் கையளித்தன. இராஜாங்க அமைச்சர் துமிந்த திசாநாயக்கவும் இதன்போது உடனிருந்தார்.

தற்பொழுது கலப்புத் தேர்தல் முறைமையொன்று நாட்டுக்குத் தேவை என இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார். நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை அத்தியாவசியம் எனவும், ஜனாதிபதியாக இரட்டை பிரஜாவுரிமை கொண்டவர்கள் நியமிக்கப்படுவதை தடுப்பதற்கு உரிய முறைமை தயாரிக்கப்படவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் என்பவற்றை ஒரே தினத்தில் நடத்துவதற்கான சாத்தியம், மாகாண சபைத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சிமன்ற தேர்தலைகளையும் ஒரே தினத்தில் நடத்துவதன் சாத்தியக்கூறுகள் தொடர்பிலும் விசேடமாக கண்டறிய வேண்டும் என இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

மாகாண சபை அதிகாரங்களை பரவலாக்கும் போது மாவட்ட சபை முறைமையை அறிமுகப்படுத்தவேண்டியதன் அவசியத்தையும் தயாசிறி ஜயசேகர வலியுறுத்தினார்.

அரசியல் கட்சிகள் கூட்டணி அமைக்கும் போது அதனுடன் தொடர்புடைய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் உள்ளிட்ட ஆவணங்களை தேர்தல் ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்கும் முறையொன்று உருவாக்கப்பட வேண்டும் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். தேர்தல்களின்போது ஒவ்வொரு கட்சிக்கும் நியாயமான பிரசார வாய்ப்புகள் இருக்கவேண்டும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பில் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண, புதிய மறுசீரமைப்பின் போது தேர்தல் பிரசார செலவுகளைக் குறைப்பது தொடர்பில் கவனம் செலுத்தவேண்டும் என தெரிவித்தார். பணத்தை செலவுசெய்து தேர்தலில் வெற்றிபெறும் போக்கொன்று தற்பொழுது ஏற்பட்டிருப்பதாகவும், அந்த நிலைமையை கட்டுப்படுத்துவதற்கு விரிவாக கவனம் செலுத்தவேண்டும் எனவும் இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

லங்கா சமசமாஜ கட்சி சார்பில் குழுவில் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண, அனைத்து இன மக்களினதும் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் புதிய தேர்தல் முறைமையொன்று நாட்டில் ஸ்தாபிக்கப்படவேண்டியது இந்நேரத்தில் தேவையானது என தெரிவித்தார். அரச சொத்துகளை துஷ்பிரயோகம் செய்வதை தடுப்பதன் முக்கியத்துவத்தையும் பேராசிரியர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

சிறுபான்மையினரின் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் அரசியல் முறைமை இருக்க வேண்டுமென இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதிநிதிகள், குழுவில் தெரிவித்தனர். தோட்டத் தொழிலாளர்களின் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினார்.

உரியநேரத்தில் தேர்தல்களை நடத்துவது முக்கியமானதென ஜனநாயக இடதுசாரி முன்னணி கட்சியினர் தெரிவித்தனர். நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை முற்றாக நீக்கி, நாடாளுமன்ற முறைமையை வலுப்படுத்த வேண்டும் எனவும் அவர்கள் குறிப்பிட்டனர். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி மற்றும் அருநலு மக்கள் முன்னணி ஆகியன குழு முன்னிலையில் தமது முன்மொழிவுகளை சமர்ப்பித்தன.

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்துவும் குழு முன்னிலையில் தமது முன்மொழிவுகளை சமர்ப்பித்ததுடன், அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கு புதிய மறுசீரமைப்பில் விரிவாக கவனம் செலுத்த வேண்டும் என அவர் குறிப்பிட்டார். பல உலக நாடுகள் இலத்திரனியல் வாக்கெண்ணும் முறையை பயன்படுத்திவருவதுடன் பரீட்சார்த்த நடவடிக்கையாக இலங்கையிலும் அந்த முறையை முயற்சித்து பார்க்கவேண்டும் என மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் பிரதிநிதிகள் குழுவில் தெரிவித்தனர்.

இதேவேளை, இந்தக் குழுவின் அடுத்த கூட்டம் எதிர்வரும் 18ஆம் திகதி நடைபெறவிருப்பதாக இக்குழுவின் செயலாளரும், நாடாளுமன்ற பணியாட்தொகுதியின் பிரதானியும், பிரதி செயலாளர் நாயகமுமான குஷானீ ரோஹனதீர தெரிவித்தார்

இதில் அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், எம்.யு.எம். அலி சப்ரி, இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், நாடாளுமன்ற உறுப்பினர்களான மதுர விதானகே மற்றும் சாகர காரியவசம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களும், எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் உறுப்பினர்களும், சட்ட மா அதிபர் திணைக்கள அதிகாரிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

## கரைச்சி பிரதேச சபையில் மேலும் நால்வருக்கு தொற்று

**கிளிநொச்சி மாவட்டம் கரைச்சி பிரதேச சபையில் கொரோனாத் தொற்றுக்குள்ளான உறுப்பினர்களின் எண்ணிக்கை 04 ஆக அதிகரித்துள்ளது.**

**கடந்த 10ஆம் திகதி கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டிருந்தது. இந்நிலையில், இன்று மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் தவிசாளர் உட்பட்ட மேலும் 03 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.**

**இதேவேளை, புதிதாக பதவியேற்ற உறுப்பினர் ஒருவரும் தொற்றுக்குள்ளாகியுள்ளமை பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் தெரியவந்துள்ளது.**

## மூன்று மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

நாட்டில் பெய்துவரும் மழை காரணமாக, இரத்தினபுரி, நுவரெலியா, கண்டி மாவட்டங்களில் பல இடங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் தென்மேல் திசையில் தற்போது ஏற்பட்டுள்ள மழை, எதிர்வரும் சில மணி நேரங்களில் மேலும் வலுவடையும் நிலை காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதற்கமைய, நாட்டின் மேல், சப்ரகமுவ, மத்திய மாகாணங்களிலும் காலி, மாத்தறை மாவட்டங்களில் ஒருசில இடங்களிலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும், ஒருசில இடங்களில் 100 மி.மீ.இற்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுவதாகவும் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பல இடங்களில் பிற்பகலில் அல்லது மாலையில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை தற்போது பெய்துவரும் மழை காரணமாக இரத்தினபுரி மாவட்டம் (குருவிட்ட, இரத்தினபுரி), நுவரெலியா மாவட்டம் (அம்பகமுவ), கண்டி மாவட்டம் (பஸ்பாகே கோரள, கங்க இஹல கோரள, தொலுவ, தெல்தோட்டை, உடபலாத்த, உடுநுவர) ஆகிய இடங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## மண்சரிவால் நோட்டன் பகுதியில் இரண்டு கடைகள் முற்றாக சேதம்

*(க.கிஷாந்தன்)*





நோட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நோட்டன் பகுதியில் ஏற்பட்ட மண்சரிவால் இரண்டு கடைகள் முற்றாக சேதமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று தியகல - நோட்டன் பிரதான வீதியில் நோட்டன் நகரத்திற்கு அருகாமையில் இடம்பெற்றுள்ளது. மண்சரிவு ஏற்படும்போது கடையில் இருந்த நபர் வெளியில் சென்றுள்ளதனால் அவர் உயிர்த் தப்பியுள்ளார்.

இந்த மண்சரிவு காரணமாக கடையிலிருந்த தளபாடங்கள், குளிர்சாதனப் பெட்டி உட்பட அனைத்துப் பொருட்களும் சேதமடைந்துள்ளன. ஹட்டன் காசல்ரீ வீதியூடாக நோட்டன்பிரிட்ஜ் பகுதிக்கான பொதுப் போக்குவரத்து பாதை மண்சரிவு காரணமாக பாதிக்கப்பட்டுள்ளது.

குறித்த வீதியில் விதுலிபுர பகுதியில் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக இந்த வீதி ஊடான போக்கு சுமார் மூன்று மணித்தியாலங்கள் முற்றாக தடைப்பட்டன. அதனைத் தொடர்ந்து நோட்டன் பொலிஸார் மற்றும் பொதுமக்கள் இணைந்து வீதியில் சரிந்து கிடந்த கற்களையும் மண்ணையும் அகற்றியதைத் தொடர்ந்து குறித்த பாதையின் பொதுப் போக்குவரத்து வழமைக்குத் திரும்பியது. குறித்த பகுதியில் மண்சரிவுடன் பிரதேசத்திற்கு குடிநீர் வழங்குவதற்காக அமைக்கப்பட்டிருந்த பாரிய இரண்டு கொங்கிரீட் குடிநீர்த்தாங்கிகளும் மண்ணுடன் அல்லுண்டு சென்றுள்ளன.

# பேச்சுவார்த்தைக்கு அமைச்சரவை உபகுழு அழைக்குமாக இருந்தால் மறுக்கமாட்டோம்

## இலங்கை ஆசிரியர் சேவை சங்க பொதுச் செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவிப்பு



அமைச்சரவை உபகுழு அழைத்தால் அவர்களுடன் பேசத் தயாராக உள்ளோம். அவர்களது தற்போதைய நிலைப்பாட்டை வரவேற்க இல்லை. ஆனால், அவர்களின் அழைப்பை நிராகரிக்க மாட்டோம் - என தெரிவித்த இலங்கை ஆசிரியர் சேவை சங்க பொதுச் செயலாளர் மஹிந்த ஜயசிங்க, எதிர்வரும் 16ஆம் திகதி பெற்றோரைத் தெளிவு படுத்தி பொதுமக்கள் கையெழுத்துச் சேகரிக்கும் நடவடிக்கையை ஆசிரியர் திறம்பட முன்னெடுக்க வேண்டும் எனவும் சுட்டிக்காட்டினார்.

கண்டி நீதிமன்றம் அழைப்பாணைக்கமைய அதிபர் - ஆசிரியர் போராட்டத்தில் பங்குபற்றிய முக்கியஸ்தர்கள் 26 பேர் நேற்று முன்தினம் நீதிமன்றில் ஆஜராகியிருந்ததாகவும், விசாரணைகளை தொடர்ந்து அவர்களுக்கு பிணை வழங்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஏங்களின் இலக்கு சுயநலமான நோக்கங்களைக்கொண்டதல்ல. பிரச்சினைக்குத் தீர்வு காண அமைச்சரவை உபகுழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது யாவரும் அறிந்த விடயம். அதிலுள்ள அமைச்சர்களில் ஒருவரான மஹிந்த அமரவீர இந்த வாரம் தீர்வை வழங்க முடியாது அடுத்த வாரமாகும் என்று கால இழுத்தடிப்பை மேற்கொள்ளும் செயலில் இறங்கியுள்ளார்.

மற்றைய அமைச்சரான பிரசன்ன ரணதுங்க அரசியல் தலையீடுகளின்றி ஆசிரியர் - அதிபர் தலைமைகள் வந்தால் தீர்வு காணலாம் எனக் கூறியுள்ளார். தற்போதைய தொழிற்சங்கங்கள் எதுவும் எதுவித அரசியல் கலப்பும் அற்றவை. ஆனால், ஆசிரியர்களின் போராட்டத்தை அரசியலோடு கலப்பதற்கு அவர்கள் முற்படுகின்றனர்.

அமைச்சரவை உபகுழு அழைத்தால் அவர்களுடன் பேசத் தயாராக உள்ளோம். அவர்களது தற்போதைய நிலைப்பாட்டை வரவேற்கவும் இல்லை, அழைப்பை நிராகரிக்கவும் மாட்டோம். ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றும் ஆசிரியர்கள் அதிபர்களின் பிரச்சினையைத் தீர்க்க கடந்த காலங்களில் உருவாக்கப்பட்டது. அதுவும் காலத்தை இழுத்தடிக்கும் தந்திரோபாய வேலையைச் செய்ததாகவும் தெரிவித்தார்.

இவ்வாறான பல்வேறு வரலாற்று அனுபவங்கள் எனக்கு இருக்கிறது. எவ்வித தடைகளையும் தாண்டி ஒன்றாகப் பயணித்து போராட்டத்தில் வெற்றிபெறுவோம். எல்லோரும் உறுதியோடு ஒன்றிணைந்து நில்லுங்கள். போராட்டத்துக்குத் தீங்கைத் தருகின்ற எந்தவொரு நடவடிக்கையிலும் ஈடுபட வேண்டாம். அவ்வாறு அனைவரும் செயற்படும்போதே வெற்றி சாத்தியம் என்றும் தெரிவித்தார்.

பாடத்திட்டங்கள் தொடர்பாக எவரும் குழம்பிக்கொள்ள வேண்டாம். அதனைப் பிற்போடுவதற்காக உரிய தரப்புகளுடன் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் கூறினார்.

நடனம், சங்கீதம் போன்ற பாட ஆசிரியர்களிடம் செயன்முறைப் பரீட்சை விண்ணப்பப் படிவம் கோரப்பட்டுள்ளது. அவற்றிலும் எவரும் கலந்துகொள்ள வேண்டாம்.

நேற்று 10 மணியளவில் அனைத்துத் தொழிற் சங்கங்களும் இணைந்து பாரிய சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தோம். எதிர்வரும் 16ஆம் திகதியன்று ஆசிரியர்களுக்குப் பாரிய பொறுப்பு உள்ளது. பெற்றோரைத் தெளிவுபடுத்தி பொதுமக்கள் கையெழுத்துச் சேகரிக்கும் நடவடிக்கையை திறம்பட முன்னெடுக்க வேண்டும்.

பல்வேறு ஆசிரியர்களால் டிஜிட்டல் முறைமூலம் கையெழுத்துச் சேகரிப்பதற்கான கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார். பல்வேறு அதிபர்கள், ஆசிரியர்கள் தொலைபேசி ஊடாகவும் குறுந்தகவல் ஊடாகவும் எக்காரணம் கொண்டும் போராட்டத்தைக் கைவிட்டு பின்வாங்க வேண்டாம் என தெரிவிக்கிறார்கள்.

எவ்வாறான தடைகள் வந்தாலும் எமது போராட்டத்துக்கு உரிய தீர்வு இல்லாது போராட்டத்தை நிறைவுசெய்யும் எண்ணமில்லை. அதற்கு முற்படவும் மாட்டேன். அனைத்து அதிபர்களும் ஆசிரியர்களும் நம்பிக்கையோடு ஒன்றுபட்டு நில்லுங்கள். வெற்றி கிட்டும். அதற்குரிய உத்தரவாதத்தை வழங்குகிறேன் - என்றார்.

# யாழ்ப்பாணம் – காரைநகர் வீதியில் அரசுக்கு சொந்தமான பஸ் விபத்து!

## காயமடைந்த 24 பேர் வைத்தியசாலையில் அனுமதி

யாழ்ப்பாணம், மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லுண்டாய் வீட்டுத்திட்ட பகுதியில் தனியார் பஸ்ஸை முந்திச் செல்ல முயற்சித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ்ஸொன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்த விபத்தில் காயங்களுக்குள்ளான 24 பேர் வைத்தியசாலையில் சிகிச்சைபெறறு வருகின்றனர்.



இலங்கை போக்குவரத்துச் சபையின் காரைநகர் சாலைக்கு சொந்தமான யாழ்ப்பாணம் - காரைநகர் சேவையில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ் நேற்றுக் காலை காரைநகரிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்துக்கொண்டிருந்த வேளையில், கல்லுண்டாய் வீட்டுத்திட்ட பகுதியில் வீதியில் பயணித்த காரைநகர்- யாழ்ப்பாணம் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்ஸை முந்திச் செல்ல முற்படுகையில் பஸ் கட்டுப்பாட்டை இழந்து வீதியின் அருகே பாய்ந்து குடைசாய்ந்துள்ளது.

கல்லுண்டாய் வீதி அபிவிருத்தி பணிகள் இடம்பெற்றுவரும் நிலையில் குறித்த பகுதியில் நேற்று காலை மழை பெய்ததன் காரணமாக வழுக்கல் நிலை காணப்பட்டதாகவும் வேகமாக வந்த பஸ் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதாகவும் அந்த பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

ஆனைக்கோட்டை பகுதியைச் சேர்ந்த குறித்த பஸ்ஸின் சாரதி தப்பி ஓடியுள்ளதாகவும் மேலும் குறித்த வீதியில் ஒவ்வொரு நாளும் குறித்த பஸ்ஸானது மிக வேகமாகவே பயணிப்பதாகவும் அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்

# மாத்தளையில் எரிவாயு தட்டுப்பாடு மக்கள் பெரும் அவதி

## ஹோட்டல்கள் மூடப்படும் நிலை

(மாத்தளை நிருபர்)

நாடளாவிய ரீதியில் நிலவும் எரிவாயு தட்டுப்பாடு மாத்தளை மாவட்டத்தில் உக்கிர நிலையை அடைந்துள்ளதாக மக்கள் குற்றச்சாட்டுகின்றனர். எரிவாயு பெற முடியாத நிலையில் தடுமாறுவதாகவும் தெரிவிக்கின்றனர்.




மாத்தளை மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக நிலவுகின்ற எரிவாயு தட்டுப்பாடு காரணமாக மக்கள் தங்கள் தேவைகளுக்கான எரிவாயுவைப் பெற்றுக்கொள்ள பல சிரமங்களை எதிர்நோக்கி வருவதை அவதானிக்க முடிகின்றது.

பொதுவாக மாத்தளை மாவட்டத்தில் வாகன எரிபொருள் நிரப்பும் இடங்களிலேயே எரிவாயு சிலிண்டர்கள் விற்பனை செய்யப்பட்டு வந்தபோதும் கடந்த இரண்டு நாட்களாக மாத்தளை நகரிலும் நகரை அண்மித்த சில உப நகரங்களிலும் எரிவாயு சிலிண்டர்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதோடு, எரிவாயு சிலிண்டர்களை பெற்றுக்கொள்வதற்கு நுகர்வோர் தடுமாறுவதையும் காணமுடிகின்றது.

மாத்தளை மாவட்டத்தில் இயங்குகின்ற சிறிய மற்றும் பெரிய உணவகங்களில் உணவுப் பண்டங்களை தயாரிப்பதற்கு எரிவாயுவை பாவித்து வருகின்றனர். இவ்வாறான உணவகங்களில் காலை தொடக்கம் உணவகங்கள் மூடப்படும் எரிவாயுவையே பாவித்து வருகின்றனர். தற்போது இம்மாவட்டத்தில் நிலவுகின்ற எரிவாயு தட்டுப்பாடு காரணமாக சில உணவகங்கள் மூடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

அத்தோடு, மாத்தளை மாவட்டத்தில் நிலவுகின்ற மழையுடனான சீரற்ற காலநிலை காரணமாக வீடுகளில் எரிவாயு தட்டுப்பாடு காரணமாகவும் விறகுகளைக்கொண்டு சமையல் செய்யக்கூடிய நிலைமையும் கேள்விகுறியாகியுள்ளது.

# கொரோனா தொற்றினால் மாத்தளையில் 180 மரணங்கள்

(மாத்தளை நிருபர்)

நாட்டில் வேகமாக பரவும் கொரோனா இதுவரை மாத்தளை மாவட்டத்தில் 180 மரணங்கள் பதிவாகியுள்ளதாக மாத்தளை மாவட்ட சுகாதாரப் பணியகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, மாத்தளை மாவட்டத்தில் 11ஆம் திகதி புதிதாக 327 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், இதுவரை மாத்தளை மாவட்டத்தில் 9 ஆயிரத்து 600 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் மாத்தளை மாவட்ட உக்குவளை பிரதேச செயலகப் பிரிவுக்குள் ஆயிரத்து 811 பேரும் கலேவளை பிரதேச செயலகப் பிரிவுக்குள் 899 பேரும் இறத்தொட்டை பிரதேச செயலகப் பிரிவுக்குள் ஆயிரத்து 41 பேரும் நாவுலை பிரதேச செயலகப் பிரிவுக்குள் 611 பேரும் தம்புள்ளை பிரதேச செயலகப் பிரிவுக்குள் 682 பேரும் மாத்தளை பிரதேச செயலகப் பிரிவுக்குள் 719 பேரும் மாத்தளை மாநகர சபை எல்லைக்குள் 577 பேரும் யட்டவத்த பிரதேச செயலகப் பிரிவுக்குள் 737 பேரும் பல்லேபொல பிரதேச செயலகப் பிரிவில் 431 பேரும் அம்பன்கங்ககோரலை பிரதேச செயலக பிரிவுக்குள் 439 பேரும் வில்கமுவ பிரதேச செயலக பிரிவுக்குள் 473 பேரும் லக்கலை பிரதேச செயலக பிரிவுக்குள் 322 பேருமாக மாத்தளை மாவட்டத்தில் 9 ஆயிரத்து 600 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இம்மாவட்டத்தில் ஆகக்கூடிய கொரோனா நோயாளர்கள் உக்குவளை மற்றும் இறத்தோட்டை பிரதேச செயலகப் பிரிவுகளிலேயே அடையாளம் காணப்படுவதாக மாத்தளை சுகாதாரப் பணியகம் மேலும் தெரிவித்துள்ளது.

# சீரற்ற காலநிலையால் பல பகுதிகளில் மண்சரிவு



(நோட்டன் பிரிட்ஜ், கினிகத்தேனை நிருபர்கள்)

மலையகத்தில் அடைமழை காலநிலை தொடர்வதனால் வீதிகளில் பல பகுதிகளில் மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளதுடன் ஆற்றுநீர் பெருக்கொடுத்து குடியிருப்புகளுக்குள் வெள்ள நீர் புகுந்துள்ளது.

மலையகத்தில் நேற்று அதிகாலை முதல் பெய்துவரும் கடும் மழையினால் கினிகத்தேனை - கித்துல்கல பிரதான பாதையின் ஆங்காங்கே மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளதுடன், நோட்டன் - அட்டன் பிரதான வீதியின் விமலசுரேந்திரகம பகுதியிலும் மண்சரிவு



ஏற்பட்டுள்ளது. அத்தோடு கினிகத்தேனை நகரின் வீதியில் மதியம் 12.30 மணியளவில் ஏற்பட்ட மண்சரிவினால் வீதியோரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டி மற்றும் சிறிய ரக லொறியொன்றின் மீதும் மண்மேடு சரிந்து வீழ்ந்துள்ளது.

இதனால் உயிராபத்துகள் ஏற்படாதபோதிலும் போக்குவரத்து பல மணிநேரம் தடைப்பட்டுள்ளதுடன் நாவலப்பிட்டி நகர வீதியிலும் வெள்ள நீர் பெருக்கெடுத்துள்ளது. அதிக மழையினால் நீரேந்தும் பகுதிகளில் நீர்மட்டம் வெகுவாக உயர்வடைந்து வருகின்றமையினால் கரையோர வாழ் மக்களை அவதானத்துடன் இருக்குமாறு நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது

மேலும், மண்சரிவு அபாயம் காரணமாக வீதிகளில் ஒரு வழி போக்குவரத்து இடம்பெற்று வருவதாகவும் வாகன சாரதிகள் அவதானமாக வாகனங்களைச் செலுத்துமாறு பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# பால்மாவுக்காக மக்கள் நீண்ட வரிசையில்; பக்கெட் ஒன்று மட்டுமே விநியோகம்



அம்பேவல பாற்பண்ணையில் உற்பத்திசெய்யப்படும் ஹைலன்ட் பால்மா பக்கெட்டுகளை கொள்வனவு செய்வதற்காக நுவரெலியா மாவட்ட செயலகத்துக்கு முன்பாக நேற்றுக் காலை நீண்ட வரிசையில் பொதுமக்கள் காத்திருந்தனர்.

நுவரெலியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள விற்பனை நிலையம் ஒன்றிலிருந்து குறித்த பால்மா பக்கெட் ஒன்றை பெறுவதற்காக நுவரெலியா பகுதியில் நீண்ட வரிசையில் பொதுமக்கள் காத்திருந்தனர்.

சந்தைகளில் வேறுவகையான பால்மா கிடைக்காததால், மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள விற்பனை நிலையத்தில் வாரத்திற்கு ஒருமுறை வழங்கப்படும் குறித்த பால்மா பக்கெட்டை கொள்வனவு செய்வதற்காக தாங்கள் காலையிலிருந்து நீண்ட வரிசையில் காத்திருப்பதாக நுவரெலியா பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

பால்மா கொள்வனவு செய்ய வரும் மக்களைக் கட்டுப்படுத்துவதற்காக பொலிஸ் அதிகாரிகள் பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். அம்பேவல பாற்பண்ணை தொழிற்சாலையில் அமைந்துள்ள விற்பனை நிலையம் தற்போது மூடப்பட்டுள்ளமையால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

# கடும் மழையால் மவுசாக்கலை நீர்த்தேக்கத்தின் வான்கதவுகள் திறப்பு

(கினிகத்தேனை, மஸ்கெலியா நிருபர்கள்)

மலையகத்தில் தொடர்ச்சியாக இடியுடன் கூடிய கன மழை பெய்துவருவதன் காரணமாக மவுசாக்கலை நீர்த்தேக்கத்தின் வான்கதவுகள் நேற்றுமுதல் திறக்கப்பட்டுள்ளன.



இதனால் தாழ்நிலப் பிரதேசங்களில் வசிக்கும் மக்களை மிக அவதானத்துடன் இருக்குமாறு அந்த நீர் மின்நிலைய உயர் அதிகாரி தெரிவித்தார்.

மேலும் கெனியன், லக்சபான, நவலக்சபான, பொல்பிட்டிய, விமசுரேந்திரா, காசல்ரீ, மேல்கொத்மலை ஆகிய நீர்த்தேக்கங்களின் நீர்மட்டமும் அதிகரித்து வருவதால் அங்குள்ள வான்கதவுகளும் எந்நேரத்திலும் திறக்கப்படும் என்பதால் அதனை அண்டி வாழும் மக்களை மிக அவதானத்துடன் இருக்கும்படி அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# கம்பளையில் ஒரு மாதத்தில் 38 கொவிட் மரணங்கள்

கம்பளையில் அதிக வேகமாக கொவிட் தொற்று பரவி வருவதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

கம்பளையில் 12ஆம் திகதி 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் 48 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அரச வங்கியொன்றில் 18 பேருக்கும், கம்பளை சந்தையைச் சேர்ந்த 15 பேருக்கும், கீரிப்பனை பகுதியைச் சேர்ந்த 15 பேருக்கும் கொவிட் தொற்று உறுதியாகியுள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்று காரணமாக நேற்றுமுன்தினம் எம்.மகேந்திரன் என்ற வர்த்தகர் உயிரிழந்துள்ளார்.

கம்பளையை அண்டிய பகுதிகளில் கொரோனா சிகிச்சை நிலையங்கள் நிரம்பி வழிவதாகவும், 150இற்கும் மேற்பட்டவர்கள் வீடுகளில் சிகிச்சைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஒரு மாத காலத்தில் கம்பளையில் கொரோனா காரணமாக 38 மரணங்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



நுவரெலியா கல்வி வலயத்தின ஆரம்பக்கல்விக்குப் பொறுப்பான உதவி கல்விப் பணிப்பாளர் எஸ். செல்வராஜா இலங்கையின் மூன்றாவது அதிவுயர் கௌரவ விருதான தேசபந்து விருதை அண்மையில் பெற்றுக்கொண்டார். இவர் 2004ஆம் ஆண்டில் சிறந்த அதிபர்களுக்கான வித்யா கீர்த்தி ஸ்ரீ விருதை பெற்றுக்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது... (படங்கள் - தலவாக்கலை நிருபர்)

# ஹட்டனில் இருவருக்கு கொவிட்; ஹோட்டல் தற்காலிகமாக பூட்டு

(மநுர சுதத்)

ஹட்டன் நகரிலுள்ள ஹோட்டலொன்றில் பணிபுரியும் இருவருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதையடுத்து, ஹோட்டலை தற்காலிகமாக மூடுவதற்கு டிக்கோய சுகாதாரத்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

பொதுச் சந்தைக்கு அருகில் நடத்திச் செல்லப்பட்ட ஹோட்டலொன்றில் பணி புரியும் இருவரே நேற்று தொற்றுக்குள்ளாகியுள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து, குறித்த ஹோட்டலை தற்காலிகமாக மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், கொரோனா நோயாளர்களுடன் நெருங்கி செயற்பட்டவர்களை அடையாளம் கண்டு அவர்களை சுய தனிமைப்படுத்தி, அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

# கடும் மழையால் வட்டவளையில் சில வீடுகள் நீரில் மூழ்கின



(கினிகத்தேனை நிருபர்)

மலையகத்தில் பெய்த கடும் மழை காரணமாக வட்டவளை நகரத்திற்கு அண்டிய சில வீடுகள் பகுதியளவில் நீரில் மூழ்கியுள்ளன.

நீரில் மூழ்கியுள்ள குடும்பங்கள் பாதுகாப்பு கருதி அயலவர்களின் வீடுகளுக்குச் சென்று தங்களை பாதுகாத்துக்கொண்டனர்.

தொடர்ச்சியாக மலையகத்தில் மழை பெய்கின்றபோது வட்டவளை நகரத்திற்குட்பட்ட சில வீடுகள் நீரில் மூழ்குவது தொடர்ச்சியாக நிகழும் செயற்பாடு என்றும் இம்மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

# கொட்டகலையில் மணிக்கடை ஒன்றை உடைத்துக் கொள்ளை

## சி.சி.ரி.வியின் உதவியுடன் இருவர் கைது

(கினிகத்தேனை,மஸ்கெலியா நிருபர்கள்)

திம்புள்ள - பத்தனை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட கொட்டகலை நகரில் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்ட கும்பலொன்றை சிசிரிவி காணொளி ஊடாக இரண்டு பேரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொட்டகலை நகரில் நேற்று முன்தினம் மணிக்கடை ஒன்றை உடைத்து பணம் கொள்ளை





அடித்துச் சென்றதாக புகார் ஒன்றை ஹட்டன் பொலிஸ் நிலையத்தில் கடை உரிமையாளர் பதிவு செய்துள்ளார் - என ஹட்டன் பொலிஸ் நிலைய அதிகாரி தெரிவித்தார்.

ஹட்டன் பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை செய்தபோது அங்கு பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி. கெமராவில் கொள்ளையிட்ட சம்பவம் பதிவாகியுள்ளது. சிசிரிவியில் பதிவான காட்சிகளைக்கொண்டு 11ஆம் திகதி இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள்.

சுந்தேக நபர்களினால் கொள்ளையிடப்பட்டு சென்ற 18 ஆயிரம் பணம் மற்றும் பொருட்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேகநபர்கள் இருவரையும் ஹட்டன் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ள பொலிஸார், இத்திருட்டு சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஹட்டனில் குழந்தைகளுக்கான பால்மா தட்டுப்பாடு: மக்கள் கவலை

(மநுர சுதத்)

ஹட்டன் பிரதேசத்தில் பால்மா தட்டுப்பாடு உச்சநிலையை அடைந்துள்ளதால் குழந்தைகளுக்கு பால்மா இன்றி தவிப்பதாக பிரதேசவாசிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஹட்டன் நகரிலுள்ள கடைகளில் பால்மா இல்லை என்பதால் தாங்கள் பெரும் அசௌகரியங்களை சந்திப்பதாகவும் குறிப்பாக, பால் குடிக்கும் குழந்தைகளுக்கு பால்மா இல்லாதமையினால் குழந்தைகள் பட்டினியால் அழுவதாகவும் மக்கள் கவலை தெரிவித்தனர்.

இது குறித்து வர்த்தகர்கள் கருத்து தெரிவிக்கையில்,

தங்களுக்குரிய பால்மா கிடைக்காதமையினாலேயே இவ்வாறு இங்கு பால்மா தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

# பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் நுவரெலியா மாவட்டத்தில் நடமாடும் சேவை

மின்சாரம் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் முரண்பாடுகளை தீர்க்கும் வகையில் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு நாடுமுழுவதும் நடமாடும் சேவைகளை நடத்தி வருகின்றது.

இதன் அடுத்த நடமாடும் சேவை நுவரெலியா மாவட்டத்தில் நடைபெறவுள்ளது.

அதன்படி, ஒகஸ்ட் 13 ஆம் திகதி அம்பகமுவ பிரதேச செயலகத்திலும், ஒகஸ்ட் 14ஆம் திகதி நுவரெலியா பிரதேச செயலகத்திலும், ஒகஸ்ட் 16ஆம் திகதி ஹங்குராங்கெத்த பிரதேச செயலகத்திலும் நடைபெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் மின்சார பிரச்சினைகளைத் தீர்க்கும் முக்கிய பங்காளர்களான இலங்கை மின்சார சபை, பிரதேச செயலகங்கள், கிராம சேவகர்கள் என அனைவரும் கலந்துகொள்ளவுள்ளனர். இதில் பொதுமக்கள் தமது மின்சாரம் தொடர்பான பிரச்சினைகளை தெரிவிப்பதின் ஊடாக தீர்வு காண முடியும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு நம்புகிறது.

ஏற்கனவே நடமாடும் சேவையினூடாக வடமத்திய மாகாணத்தில் 100 வீதம் வெற்றியை பெற்றுள்ள நிலையிலேயே இந்த சேவை தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றது.

மேலதிக தகவல்களுக்கு தொடர்புகொள்ள 0777 174 466 ரஹான் - முகாமைத்துவ உதவியாளர் - இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு.

# நெகிழ்திறன் மற்றும் தொழில்துறைக்கு தயாராக உள்ள இளைஞர்களுக்கான திறன்களை வளர்ப்பதற்கு ஜோன் கீல்ஸ் உதவுகிறது

ஸ்கிப் (திறன் முன்னேற்றம்) திட்டம் என்பது ஜோன் கீல்ஸ் அறக்கட்டளையால் உருவாக்கப்பட்ட தனி பயனாக்கப்பட்ட, தொழில் சார்ந்த திட்டமாகும், இது ஜோன் கீல்ஸ் குழுமத்தின் அடையாளம் காணப்பட்ட வழங்குநர் குழுக்களின் திறமை இடைவெளிகளை நிவர்த்தி செய்வதற்கும் அதன்மூலம் சேவை மற்றும் பெருந்தொற்றுக்கு பிந்தைய சூழலில் வருமான வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கும் உதவுகிறது. இந்தத் திட்டம் ஜோன் கீல்ஸ் குழுமத்தின் விநியோக சங்கிலி மேலாண்மை வசதிக்கான வழிமுறையாக வெவ்வேறு வழங்குநர் குழுக்களை மேம்படுத்துகிறது.

ஸ்கிப் திட்டம் என்பது 16 ஆண்டுகளுக்கு முன்பு நிறுவப்பட்ட ஜோன் கீல்ஸ் அறக்கட்டளையால் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்ட திறன் மேம்பாட்டு முயற்சிகளின் சங்கிலியின் சமீபத்திய இணைப்பாகும். இலங்கையில் உற்பத்தி மற்றும் உந்துதல் தொழிலாளர் சக்தியின் அணுகலை உறுதிசெய்வதில் தொடர்புடைய கல்வி மற்றும் திறன் மேம்பாட்டுக்கான அணுகல் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை ஜோன் கீல்ஸ் குழு நீண்ட காலமாக புரிந்துகொண்டுள்ளது. எனவே, குழு தனது சி.எஸ்.ஆர். நிறுவனமான ஜோன் கீல்ஸ் அறக்கட்டளை (ஜே.கே.எவ்.) மூலம் இலங்கை முழுவதும் குழந்தைகள் மற்றும் இளைஞர்களின் சந்தை தொடர்பான திறன்களை வளர்ப்பதற்கான தேவைக்கு முன்னுரிமை அளித்துள்ளது.






ஆண்டுதோறும் ஜூலை 15ஆம் திகதி அனுசரிக்கப்படும் உலக இளைஞர் திறன் தினம், இளைஞர்களை வேலைவாய்ப்பு, ஒழுக்கமான வேலை மற்றும் தொழில்முனைவோர் ஆகியவற்றுக்கான திறன்களுடன் ஆயத்தப்படுத்துவதன் மூலோபாய முக்கியத்துவத்தை மையமாகக் கொண்டுள்ளது. இது ஜே.கே.எவ்.இன் கல்வித் தூணின் முதன்மை மையமாகவும் உள்ளது, இதன்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் பிற இலக்கு குழுக்களின் நலனுக்காக நீண்டகாலமாக நீடிக்கக்கூடிய முன்முயற்சிகள் உருவாக்கப்பட்டும் செயற்படுத்தப்பட்டும் சுமார் 25,000 நபர்களை வலுவூட்டுகிறது.

தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலை சிறார்கள் மற்றும் பல்கலைக்கழக இளைஞர்களின் ஆங்கில தொடர்பு, தகவல் தொடர்பு மற்றும் மென்மையான திறன்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட 'ஜோன் கீல்ஸ் ஆங்கில மொழி உதவித் தொகைத் திட்டம்' ஜே.கே.எவ்.இன் முதன்மை திறன் மேம்பாட்டு முயற்சியாகும்.

2004ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து, கேட்வே லெங்வேஜ் சென்டருடன் இணைந்து செயற்படுத்தப்பட்ட இத்திட்டம், 17,700இற்கும் மேற்பட்ட பாடசாலை சிறார்கள் மற்றும் இளைஞர்களுக்கு நேரடியாக பயனளித்துள்ளது.

மேலும், இளைஞர்களின் தொழில் தயார்நிலையை அதிகரிப்பதன் மூலம் வேலையின்மை விகிதங்களைக் குறைப்பதை நோக்கி, பொருளாதார ரீதியாக பின்தங்கிய இளைஞர்களிடையே மேம்பட்ட படிப்புகளைத் தொடர ஊக்குவிப்பதற்காக உயர் கல்வி உதவித்தொகைகளையும், மென்மையான திறன்கள், பட்டறைகள், வேலை கண்காட்சிகள், வெளிப்பாடு திட்டங்கள் மற்றும் பல்கலைக்கழக இளங்கலை பட்டதாரிகளுக்கான உள்ளக பயிற்சி ஆகியவற்றை அவர்களின் தொழில் திறன், அணுகுமுறைகள் மற்றும் வாய்ப்புகளை மேம்படுத்துவதுவதற்காக ஜோன் கீல்ஸ் குழுமத்தின் பல்வேறு வணிகங்களுடன் இணைந்து ஜே.கே.எவ். வழங்கியுள்ளது.

இந்த முன்முயற்சிகளின் முக்கிய நோக்கங்கள், மாநில கல்வி மற்றும் உயர்கல்வி முறைகளை பூர்த்திசெய்து விளைவுகளை முன்னேற்றுதல், சந்தை தொடர்பான திறன்கள், அணுகுமுறைகள் மற்றும் திறன்களை மேம்படுத்துதலாகும். இதன்மூலம் அதிக எண்ணிக்கையிலான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளுக்கான அணுகலை மேம்படுத்துவதன் மூலமாக, அவர்கள் நிலையான அபிவிருத்தி இலக்குகளுக்கேற்ப அனைவருக்கும் வளமான, நிலையான மற்றும் சமமான சமூக, பொருளாதார சூழலை வளர்ப்பதற்கு இலாபகரமாக பங்களிக்க முடியும்.

ஜோன் கீல்ஸ் அறக்கட்டளையின் ஆறு மையப் பகுதிகளில் கல்வி ஒன்றாகும். கொழும்பு பங்குச் சந்தையில் இலங்கையின் மிகப்பெரிய பட்டியலிடப்பட்ட கூட்டு நிறுவனமான ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பி.எல்.சியின் (ஜே.கே.எச்.) சி.எஸ்.ஆர். நிறுவனம் 7 வெவ்வேறு தொழில் துறைகளிலுள்ள 70இற்கும் மேற்பட்ட நிறுவனங்களை இயக்குகிறது. 150 ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றைக்கொண்ட ஜோன் கீல்ஸ் குழுமம் 14,000இற்கும் மேற்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குகிறது மற்றும் எல்எம்டி இதழால் கடந்த 15 ஆண்டுகளாக இலங்கையின் மிகவும் மதிப்பிற்குரிய நிறுவனம் என்று தரப்படுத்தப்பட்டுள்ளது.

உலகப் பொருளாதார மன்றத்தின் முழு உறுப்பினராகவும், ஐ.நா. குளோபல் காம்பாக்ட்டின் பங்கேற்பாளராகவும் இருக்கும் ஜே.கே.எச். தனது சமூக பொறுப்புணர்வு பார்வையை 'நாளைக்கு தேசத்தை மேம்படுத்துதல்' என்ற ஜோன் கீல்ஸ் அறக்கட்டளை மூலமாகவும், சமூக தொழில்முனைவோர் முயற்சியாக இலங்கையில் பிளாஸ்ரிக் மாசுபாட்டைக் கணிசமாகக் குறைப்பதில் வினையூக்கியான பிளாஸ்ரிக் சைக்கிள் மூலமாகவும் இயக்குகிறது.




## இழப்பீட்டுக் காப்புறுதி கொடுப்பனவுகளை விரைவுபடுத்த மாவனல்லை வர்த்தக சங்கம் கோரிக்கை



அமானா தகாபுல் காப்புறுதிப் பிரிவால் தீப்பற்றல் மற்றும் பாதிப்புகளால் சொத்துகளுக்கு ஏற்படும் இழப்புகளுக்காக வழங்கப்படுகின்ற இழப்பீட்டுக் காப்புறுதி கொடுப்பனவுகளை விரைவாக வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அமானா தகாபுல் காப்புறுதிப் பிரிவிடம் மாவனல்லை ஐக்கிய வர்த்தக சங்கம் கோரிக்கை விடுத்திருக்கின்றது.

மாவனல்லையில் கடந்த 06 மாதங்களுக்கு முன்னர் தீயினால் எரிந்து நாசமான ரஜரட்ட ஹாட்வெயார் நிறுவனத்திற்கு ஏற்பட்ட இழப்பு தொடர்பாக அதன் உரிமையாளரான எம்.ஜே.எம்.சஹ்னி என்பவருக்கான இழப்பீட்டுக் காப்புறுதி கொடுப்பனவில் ஏற்பட்டுள்ள தாமதம் தொடர்பாக அண்மையில் மாவனல்லை ஐக்கிய வர்த்தக சங்கம் நடத்திய கலந்துரையாடலின் பின்னரே குறித்த தகாபுல் காப்புறுதி தலைமையகத்திடம் இந்த வேண்டுகோளை விடுத்திருக்கின்றது.

குறித்த ஹாட்வெயார் உரிமையாளரான சஹ்னி என்பவருக்கு அவரது கடை தீக்கிரையானதால் சுமார் இரண்டு கோடி ரூபாவுக்கு மேல் கடையில் இருந்த பொருட்கள் தீயில் எரிந்து நாசமாகியதால் நட்டம் ஏற்பட்டிருக்கின்றது. இழப்பு காரணமாக இதுவரையில் கடையை புனரமைப்பு செய்து வியாபார ஸ்தலத்தை மீண்டும் ஆரம்பித்துக்கொள்ள முடியாத அளவிற்கு நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கின்றார். அதனால் குறித்த நிறுவனத்தில் அவர் காப்புறுதி செய்திருப்பதால் இழப்பீட்டை பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பம் செய்திருந்தபோதும் 06 மாதங்களுக்கு மேலாகியும் இதுவரையில் இழப்பீடு வழங்கப்படவில்லை. அதனால் இது தொடர்பாக கூடுதல் கவனம் செலுத்தி முடியுமான அளவு விரைவாக காப்புறுதி இழப்பீட்டை பெற்றுக்கொடுக்க உரிய வங்கியின் காப்புறுதி பிரிவு நடவடிக்கை எடுக்கவேண்டும். இன்றேல் வர்த்தகர்கள் குறித்த காப்புறுதி மீது நம்பிக்கை இழப்பதை தவிர்க்க முடியாததாகிவிடும் - என்று மாவனல்லை ஐக்கிய வர்த்தக சங்கத்தின் சார்பாக அதன் தலைவர் கே.எம்.அமீனுல்லாஹ் விடுத்துள்ள வேண்டுகோளில் தெரிவித்துள்ளார்.

**எம்.எஸ்.அமீர் ஹுசைன்**


### தன நிதானய

உத்தியோகபூர்வ முடிவுகள்

NLB

ஆங்கில எழுத்து: K

வெற்றி இலக்கங்கள்: 10 19 34 43

திகதி: 12.08.2021

சீட்டிழுப்பு இலக்கம்: 0564

| | கட்டமைப்பு | பரிசுகள் | வெற்றியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 1,000,000.00 | 1 |
| 2 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 100,000.00 | 3 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 3,000.00 | 72 |
| 4 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 1,000.00 | 157 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 100.00 | 3848 |
| 6 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூபா. 60.00 | 2653 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூபா. 20.00 | 65985 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூபா. 20.00 | 12261 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூபா. 3,781,900.00
பரிசுகளை வென்ற வெற்றியாளர்களின் எண்ணிக்கை. 84,980

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத் தொகை
ரூ. 80,749,167.60

- ரூபா. 5 இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசின் வரி சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது.
- பரிசுத்தொகையை பெற்றுக்கொள்ளும் போது தேசிய அடையாள அட்டை கட்டாயமானது.
- சீட்டிழுப்பு தினத்திலிருந்து 6 மாதகாலத்திற்கு மாத்திரமே வெற்றி லொத்தர் செல்லுபடியாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD

இல 32 தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01,
தொலைபேசி: 0112-324324, 0114 607000
Web: www.nlb.lk



### கொவிசெத

உத்தியோகபூர்வ முடிவுகள்

NLB

சீட்டிழுப்பு இலக்கம்: 2829 சீட்டிழுப்பு திகதி: 12.08.2021

ஆங்கில எழுத்து: L

வெற்றி இலக்கங்கள்: 07 17 58 71

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 0 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 5 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 2,000.00 | 143 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 1,000.00 | 332 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 7578 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 5025 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 125448 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 23157 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றியாளர்களின் எண்ணிக்கை 161,688

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத் தொகை
ரூ. 5,048,900.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 64,843,722.40

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சமோ அதற்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD

இல 32 தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01,
தொலைபேசி: 0112-324324, 0114 607000
Fax: 0114 663416 Web: www.nlb.lk



செய்திகளை உடனுக்குடன் அறிய
www.thamilan.lk
தளத்திற்கு பிரவேசியுங்கள்



### ජාතික සම්පත

JATHIKA SAMPATHA

NLB

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 1135

திகதி: 12.08.2021

லக்னம்: ♓

வெற்றி இலக்கங்கள்: 2 6 8 2 6 8

வலமிருந்து இடமாக பரிசுக்கட்டமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | | வெற்றியாளர்கள் |
|---|---|---|---|---|
| 01 பரிசு | 2 6 8 2 6 8 | ரூ. 1,000,000.00 | பரிசு | 1 |
| 02 பரிசு | 6 8 2 6 8 | ரூ. 100,000.00 | பரிசுகள் | 2 |
| 03 பரிசு | 8 2 6 8 | ரூ. 10,000.00 | பரிசுகள் | 22 |
| 04 பரிசு | 2 6 8 | ரூ. 1,000.00 | பரிசுகள் | 231 |
| 05 பரிசு | 6 8 | ரூ. 100.00 | பரிசுகள் | 2304 |
| 06 பரிசு | 8 | ரூ. 20.00 | பரிசுகள் | 22830 |

இடமிருந்து வலமாக பரிசுக்கட்டமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | | வெற்றியாளர்கள் |
|---|---|---|---|---|
| 07 பரிசு | 2 6 8 2 6 | ரூ. 10,000.00 | பரிசுகள் | 2 |
| 08 பரிசு | 2 6 8 2 | ரூ. 1,000.00 | பரிசுகள் | 25 |
| 09 பரிசு | 2 6 8 | ரூ. 200.00 | பரிசுகள் | 227 |
| 10 பரிசு | 2 6 | ரூ. 100.00 | பரிசுகள் | 2307 |
| 11 பரிசு | ♓ | ரூ. 20.00 | பரிசுகள் | 19045 |
| 12 பரிசு | வெற்றி இலக்கங்கள் ஆறும் எந்த ஒழுங்கில் பொருந்தினாலும் | ரூ. 200.00 | பரிசுகள் | 16 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ. 3,043,200.00

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத் தொகை அரசாங்க வரிச் சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசினைப் பெறுவதற்கு அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அடுத்த சனிக்கிழமைக்கான சுப்பர் பரிசு ரூ. 16,700,142.90

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD

32, தேசமான்ய என்.டபிள்யூ.ஜே முதலிகே மாவத்தை, கொழும்பு 01.
தொலைபேசி: 011 4607000, 011 2324324
பக்ஸ்: 011 4669416



### மஹஜன சம்பத

சீட்டிழுப்பு இலக்கம்: 4534

உத்தியோகபூர்வ முடிவுகள்

NLB

திகதி: 12.08.2021

வெற்றி எழுத்து: G

வெற்றி இலக்கங்கள்: 6 9 8 9 3 9

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| பரிசு | இலக்கங்கள் | தொகை | வெற்றியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | 6 9 8 9 3 9 | ரூபா. 2,000,000/- | 1 |
| 2ஆம் பரிசு | 9 8 9 3 9 | ரூபா. 100,000/- | 8 |
| 3ஆம் பரிசு | 8 9 3 9 | ரூபா. 10,000/- | 94 |
| 4ஆம் பரிசு | 9 3 9 | ரூபா. 1,000/- | 943 |
| 5ஆம் பரிசு | 3 9 | ரூபா. 100/- | 9348 |
| 6ஆம் பரிசு | 9 | ரூபா. 20/- | 92925 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| பரிசு | இலக்கங்கள் | தொகை | வெற்றியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7ஆம் பரிசு | 6 9 8 9 3 | ரூபா. 10,000/- | 8 |
| 8ஆம் பரிசு | 6 9 8 9 | ரூபா. 1,000/- | 100 |
| 9ஆம் பரிசு | 6 9 8 | ரூபா. 100/- | 918 |
| 10ஆம் பரிசு | 6 9 | ரூபா. 50/- | 9282 |
| 11ஆம் பரிசு | G | ரூபா. 20/- | 37161 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ. 8,955,420.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 22,148,886.20

NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்

தேசிய லொத்தர் சபை
32, தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01.
தொலைபேசி: 011-4607000, 011-2324324. Fax: 011-4669416.
www.nlb.lk



### Mega POWER

மெகா பவர்

சீட்டிழுப்பு இலக்கம்: 0882

உத்தியோகபூர்வ முடிவுகள்

NLB

திகதி: 12.08.2021

ஆங்கில எழுத்து: N சுப்பர் இலக்கம்: 14 வெற்றி இலக்கங்கள்: 21 42 61 73

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 1 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 2 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 81 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 172 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 4187 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 2738 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 69436 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 12442 |

இலங்கையின் அதிகூடிய சுப்பர் பரிசு

அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 142,804,801.20

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 3,532,780.00

N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01, தொலைபேசி 0112-470662, 0114 607000 இணையம் www.nlb.lk

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD

# அம்பாறை மாவட்டத்தில் கொரோனா கோரத் தாண்டவம்; ஒரே நாளில் 411 பேருக்கு கொரோனா தொற்று உறுதி

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சுகுணன்

(சாய்ந்தமருது நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தாக்கம் கடந்த சில நாட்களாக என்றுமில்லாதவாறு மிகவும் தீவிரமடைந்துள்ளது. நேற்று முற்பகல் 10 மணிவரையான 24 மணிநேரத்தில் 411 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர். அம்பாறை மாவட்டத்தில் ஒரே நாளில் அதிகமானோர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டிருப்பது இதுவே முதல் சந்தர்ப்பமாகும்.

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை நிர்வாகப் பிரிவில் 150 பேரும் அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை நிர்வாகப் பிரிவில் 261 பேரும் இவ்வாறு கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

அதேவேளை, கல்முனை பிராந்தியத்தில் கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 100ஐ எட்டியிருக்கிறது. இங்கு தொற்றுக்குள்ளானோரின் மொத்த எண்ணிக்கை ஐயாயிரத்தை எட்டிவிட்டது.

கடந்த சில நாட்களாக அம்பாறை மாவட்டத்தில் தினமும் நூற்றுக்கு மேற்பட்டோர் கொரோனா தொற்றுக்குள்ளாகி வருவதனால், வைத்தியசாலைகளிலும் கொரோனா சிகிச்சை நிலையங்களிலும் இடப்பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஜீ.சுகுணன் தெரிவித்தார்.

நிலைமை மிகவும் மோசமடைந்துவிட்டது. இந்த அபாய நிலைமையைக் கவனத்திற் கொண்டு கொவிட் கட்டுப்பாட்டுக்கான சுகாதார நடைமுறைகளை மிகவும் இறுக்கமாக நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை எழுந்திருக்கிறது எனவும் அவர் வலியுறுத்தினார்.



கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை நிர்வாகப் பிரிவில் கடந்த சில நாட்களாக கொரோனா தாண்டவமாடி வருகின்றது. ஆனால், பொதுமக்கள் பொறுப்பின்றி நடந்துகொள்வதை அவதானிக்க முடிகிறது. எமது நடவடிக்கைகளுக்கு எல்லோரும் ஒத்துழைப்பு வழங்கினாலொழிய கொரோனாவைக் கட்டுப்படுத்த முடியாது. பாரிய இழப்புகளையே சந்திக்க நேரிடும் - என பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஜீ.சுகுணன் மேலும் தெரிவித்தார்.

# கிழக்கில் சேதனப் பசளை உற்பத்தியை ஊக்குவிக்க 40 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

## உள்ளூராட்சி மன்றங்களுக்கு தலா 10 இலட்சம் ரூபா

(சாய்ந்தமருது நிருபர்)

கிழக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் மூலம் சேதனப் பசளை உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் சுமார் 40 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளாரென ஆளுநர் செயலகம் அறிவித்துள்ளது.

கிழக்கு மாகாணத்திலுள்ள ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்திற்கும் சேதனப் பசளை உற்பத்தி ஊக்குவிப்பு நிதியாக தலா பத்து இலட்சம் ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் 08 உள்ளூராட்சி மன்றங்கள், மட்டக்களப்பு மாவட்டத்தில் 12 உள்ளூராட்சி மன்றங்கள், அம்பாறை மாவட்டத்தில் 20 உள்ளூராட்சி மன்றங்களுக்கு இந்நிதி பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாக கிழக்கு மாகாண ஆளுநர் செயலகம் மேலும் தெரிவித்துள்ளது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# அடையாளம் காணப்படாதிருந்த 40 சடலங்களில் 26 உடல்கள் சூடுபத்தினசேனையில் அடக்கம்

## ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் நெளபர்

(கனகராசா சரவணன்)

கொழும்பு தேசிய வைத்தியசாலை பிரேத அறையில் 2017 தொடக்கம் தேங்கியிருந்த 40 சடலங்களில் 26 சடலங்கள் மட்டக்களப்பு ஓட்டமாவடி சூடுபத்தினசேனையில் நேற்று முன்தினம் இரவு கொண்டுவரப்பட்டு அடக்கம் செய்யப்பட்டுள்ளதாக ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம் நெளபர் தெரிவித்தார்.

இந்த உடல்களின் நல்லடக்கம் தொடர்பாக நேற்று பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.நெளபர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

கொழும்பு தேசிய வைத்தியசாலை பிரேத அறையில் தேங்கியிருந்த 40 சடலங்களை மட்டக்களப்பு ஓட்டமாவடி சூடுபத்தினசேனையில் அடக்கம் செய்யுமாறு கொழும்பு மாளிகாவத்தை நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதனையடுத்து நேற்று இரவு பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் ஓட்டமாவடிக்கு 26 சடலங்கள் கொண்டுவரப்பட்டதையடுத்து, அவை இரு கிடங்குகளில் பரப்பப்பட்டு அடக்கம் செய்யப்பட்டுள்ளன.



அதேவேளை கொரோனாவினால் உயிரிழந்த 1537 பேரின் ஜனாஸாக்கள் மற்றும் உடல்கள் இதுவரை அடக்கம் செய்யப்பட்டுள்ளதுடன், தொடர்ந்து அதிகளவான சடலங்கள் வருவதனால் அதனை புதைப்பற்கு இடப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இந்த இடப்பற்றாக்குறை தொடர்பாக கடந்த சில தினங்களாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உட்பட அரசியல்வாதிகளின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளதாகவும் இந்த பகுதியில் எதிர்வரும் சில நாட்களின் பின்னர் சடலங்கள் அடக்கம்செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# மட்டு. – அம்பாறை மாவட்டங்களில் சீமெந்து தட்டுப்பாடு

## பொதுமக்கள், கட்டட ஒப்பந்தக்காரர்கள் திண்டாட்டம்

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் சில பிரதேசங்களில் சீமெந்துக்கு தட்டுப்பாடு நிலவுவதாக பொதுமக்கள், கட்டிட ஒப்பந்தக்காரர்கள் விசனம் தெரிவிக்கின்றார்கள். குறிப்பாக, மருதமுனை, கல்முனை, களுவாஞ்சிக்குடி, வெல்லாவெளி, வவுணதீவு, நாவிதன்வெளி போன்ற பிரதேசங்களில் சீமெந்து தட்டுப்பாடு நிலவுகின்றது.

பொதுமக்கள் தங்கள் காணிக்குள் அமைக்கப்படும் கட்டிட வேலைகளுக்கும், ஒப்பந்த வேலைகளுக்கும் சீமெந்து மூடைகளை கடைகளில் கொள்வனவு செய்யமுடியாத நிலையில் திண்டாடுவதாக கவலை தெரிவிக்கின்றார்கள்.

கொரோனா பரவல் காரணமாக சீமெந்து உற்பத்தி தொழிற்சாலைகளில் கடமைபுரியும்




ஊழியர்கள் தொழிலுக்கு செல்லாத காரணத்தினால் கடைகளுக்கு ஏற்றிவரும் சீமெந்து மூடைகளை தங்களின் கடைகளுக்கு மட்டுப்படுத்தி தருவதாகவும், கட்டிட நிர்மாண வேலைகளுக்கு சீமெந்து மூடைகளை கொள்வனவு செய்ய கோரும் வாடிக்கையாளருக்கு குறைவாக தாம் தருவதாகவும் சீமெந்து கடைகளின் உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். இதனால் காலையில் பெறப்படும் சீமெந்து மூடைகள் காலையிலேயே முடிவடைகின்றன. சீமெந்து மூடைகளை கொள்வனவு செய்வதற்கு முன்பதிவுகளை மேற்கொண்ட சில பொதுமக்களுக்கு சீமெந்து கிடைக்காமல் போயுள்ளதாகவும் கவலை தெரிவிக்கின்றார்கள்.

ஆயிரத்து 10 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட சீமெந்து மூடை ஒன்றின் தற்போதைய விலை ஆயிரத்து 50 ரூபாவாக விற்கப்படுகின்றது. பொருட்களின் விலை மலைபோல் உயர்ந்துள்ள நிலையில், வறுமைப்பட்ட மக்கள் புதிதாக கட்டிட வேலைகளை மேற்கொள்ள முடியாத நிலையில் இருப்பதாகவும் கவலை தெரிவிக்கின்றார்கள்.

# ஜனாதிபதியின் சௌபாக்கிய வீடமைப்புத் திட்டத்தில் ஓட்டமாவடியில் 6 வீடுகளுக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வு





(கல்குடா நிருபர்)

வீடு இல்லாதோருக்கு வீடு வழங்கும் ஜனாதிபதியின் சௌபாக்கியா விசேட வீடமைப்புத் திட்டத்தின் கீழ் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் வீடுகளுக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வுகள் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் இடம்பெற்று வருகின்றது.

அந்தவகையில் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் சமுர்த்தி சௌபாக்கியா விசேட வீடமைப்புத் திட்டத்தின் மூலம் ஆறு வீடுகளுக்கு அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் வி.தவராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், சமுர்த்தி தலைமையக முகாமையாளர் எம்.ஐ.ஏ.அஸீஸ், சமுர்த்தி சமுக உத்தியோகத்தர் எம்.எம்.எம்.சாஜகான், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மீராவோடை, மாஞ்சோலை, ஓட்டமாவடி ஆகிய பகுதிகளில் ஐந்து வீடுகள் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் இரண்டு இலட்சம் ரூபா நிதி உதவியும், மக்களின் மேலதிக நிதி பங்களிப்பு மூலமும், காகிதநகர் பகுதியில் ஒரு வீட்டுக்கு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் ஆறு இலட்சம் ரூபா நிதி உதவியும், பயனாளியின் நான்கு இலட்சம் ரூபா நிதிப் பங்களிப்பு மூலமும் ஆறு வீடுகள் நிர்மானிக்கப்படவுள்ளதாக ஓட்டமாவடி பிரதேச செயலாளர் வி.தவராஜா தெரிவித்தார்.

# வாழைச்சேனையில் மீனவர் உற்பத்திச் சங்கம் உதயம்



(மீராவோடை நிருபர்)

கோறளைப்பற்று மத்தி வாழைச்சேனை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 206 பி, கிராமசேவகர் பிரிவில் மீனவர் உற்பத்திச் சங்கம் உதயமாகியுள்ளது.

சௌபாக்கியா திட்டத்தின்கீழ் இந்த மீனவர் உற்பத்திச் சங்கம் உருவாக்கப்பட்டுள்ளது. கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எச்.எம்.எம்.றுவைத், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எவ்.எவ்.முஜீபா ஆகியோரின் பங்குபற்றுதலுடன் இச்சங்கம் உருவாக்கப்பட்டுள்ளது.

இதில், 206 பி, கிராமசேவகர் பிரிவு மீனவர்கள் பலரும் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் புதிய மீனவர் உற்பத்திச் சங்க தவிசாளராக ஏ.சீ.எம். முனவ்வர் தெரிவுசெய்யப்பட்டார்.

குறித்த சௌபாக்கியா மீனவர் உற்பத்திச் சங்கத்திற்கு முதற்கட்டமாக இருபது இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டை நாடாளுமன்ற உறுப்பினரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழு இணைத் தலைவருமான ஹாபீஸ் நஸீர் அஹமட் ஒதுக்கியுள்ளதாக புதிய தவிசாளர் ஏ.சீ.எம்.முனவ்வர் தெரிவித்தார்.

# ஓட்டமாவடியில் சடலங்களை அடக்கம்செய்ய இடப்பற்றாக்குறை

## கிண்ணியா - இறக்காமம் பகுதிகள் பரிந்துரை

(சாய்ந்தமருது நிருபர்)

மஜ்மா நகரில் கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழக்கும் உடலங்கள் நிரம்பி வழிவதால், அங்கு மேலும் சடலங்களை அடக்க முடியாத சூழ்நிலை உருவாகியிருப்பதால் கிண்ணியா, இறக்காமம் போன்ற இடங்களிலும் அடக்கம்செய்ய உடனடியாக அனுமதி வழங்கப்படவேண்டும் என்பதுடன், மாவட்டந்தோறும் அவசரமாக புதிய இடங்கள் அடையாளம் காணப்பட வேண்டும் எனவும் சாய்ந்தமருது சமூக, கலாசார அபிவிருத்தி மன்றம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதனை வலியுறுத்தி ஜனாதிபதி, பிரதமர் மற்றும் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கடிதங்களை அனுப்பிவைத்திருப்பதாக மன்றத்தின் தவிசாளர் எம்.அஹமட்லெப்பை தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனாவால் மரணிக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் தகனம்செய்யப்பட்ட துரதிர்ஷ்டமான நடவடிக்கைக்கு எதிரான போராட்டங்களையடுத்து, இவ்வாறான ஜனாஸாக்களை அடக்குவதற்காக அங்கீகாரம் கிடைக்கப்பெற்றதுடன், அதற்காக மட்டக்களப்பு மாவட்டத்தின் ஓட்டமாவடி, மஜ்மா நகர் தேர்ந்தெடுக்கப்பட்டது.

அன்று தொடக்கம் முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் மாத்திரமல்லாமல் இந்து, பௌத்தர், கிறிஸ்தவர் உள்ளிட்ட அனைத்து இனத்தவரினதும் உடல்கள் அடக்கம்செய்யப்பட்டு வருகின்றன. தற்போது அங்கு 1500இற்கு மேற்பட்ட உடலங்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ள நிலையில், இடப்பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இலங்கையிலுள்ள அனைத்து மயானங்களுக்கும் முன்மாதிரியான ஒரு மையவாடியாக மஜ்மா நகர் திகழ்கிறது. மயானங்கள் அனைத்தும் தனித்தனி இனங்களுக்கென இருக்கும்போது மஜ்மா நகர் மாத்திரம் அனைத்து இன, மதங்களுக்குமான ஒற்றுமை மயானம் என்ற பெயரை பெற்றிருக்கிறது.

எவ்வாறாயினும் தற்போது அங்கு இடப்பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதால் ஏற்கனவே கொவிட் ஜனாஸாக்களை அடக்குவதற்காக தெரிவுசெய்யப்பட்டு, பரிந்துரைக்கப்பட்டுள்ள திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா மற்றும் அம்பாறை மாவட்டத்தின் இறக்காமம் போன்ற இடங்களிலும் அடக்கம் செய்வதற்கு உடனடியாக அனுமதி வழங்கப்பட வேண்டும்.

அத்துடன், ஏனைய மாகாணங்களிலும் மாவட்டந்தோறும் இதற்கான இடங்கள் அடையாளம் காணப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என அக்கடிதங்களில் வலியுறுத்திக் கேட்டுள்ளோம் - என்றார்.

# காரைதீவு வைத்தியசாலைக்கு 3 மாடிக் கட்டடம்



(அட்டாளைச்சேனை)

காரைதீவு பிரதேச வைத்தியசாலைக்கு சொந்தமான காணியில் மூன்று மாடி கட்டிட நிர்மாணத்துக்கு நேற்றுக் காலை சுபநேரத்தில் அடிக்கல் நாட்டப்பட்டது.

காரைதீவு பிரதேச வைத்தியசாலையின் வைத்தியசாலை பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி நடராஜா அருந்திரன் தலைமையில் பொதுச் சுகாதார விதிமுறைகளுக்கமைய இடம்பெற்ற வைபவத்தில் கல்முனை பிராந்திய சேவைகள் திட்டமிடல் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எம்.சீ.எம்.மாஹீர், கட்டட திணைக்களத்தின் அம்பாறை பிராந்தியத்துக்கான பொறியியலாளர் பா.அச்சுதன், சமூக, பொதுநல, ஊடக செயற்பாட்டாளர் வி.ரி.சகாதேவராஜா மற்றும் வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். இந்துசமய கிரியைகளை காரைதீவு கண்ணகி அம்மன் ஆலய பிரதம குரு சிவ ஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்கள் மேற்கொண்டார்.

# பாண்டிருப்பில் 37 பேரிடம் மேற்கொண்ட கொவிட் அன்ரிஜன் பரிசோதனையில் 13 பேருக்கு தொற்று



(பாண்டிருப்பு நிருபர்)

கல்முனை வடக்கு பிராந்திய சுகாதாரப் பணிமனைக்குட்பட்ட பாண்டிருப்புக் கிராமத்தில் நேற்று 37 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் 13 பேர் கொரோனா தொற்றக்குள்ளாகியிருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளதாக கல்முனை வடக்கு பிராந்திய சுகாதாரப் பணிமனை தெரிவித்துள்ளது.

கல்முனை வடக்கு பிராந்திய சுகாதாரப் பணிமனையினால் கல்முனை, பாண்டிருப்பு, பெரியநீலாவணை, சேனைக்குடியிருப்பு, துறைவந்தியமேடு, நற்பிட்டிமுனை ஆகிய கிராமங்களில் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான பல்வேறு விழிப்புணர்வு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை, கல்முனை வடக்கு பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஆர்.கணேஸ்வரன் தலைமையிலான பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் குடும்பநல உத்தியோகத்தர்கள் அடங்கிய குழுவினர் கொரோனா தொற்றைக் கண்டறிவதற்கான அன்ரிஜன் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பாண்டிருப்பு எல்லைவீதியில் ஏற்கனவே சுயதனிமைப்படுத்தலில் இருந்தவர்கள், கொரோனா தொற்றுக்குள்ளானோருடன் தொடர்புபட்டவர்கள், கொழும்பு போன்ற தூர இடங்களுக்குச் சென்று வந்தவர்கள் என இனங்காணப்பட்ட 37 பேருக்கு அன்ரிஜன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது 13 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியிருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது. பாண்டிருப்பில் கடந்த நான்கு நாட்களில் 23 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

சுகாதாரப் பிரிவினருக்கு தெரியாமல் கொழும்பு போன்ற தூர இடங்களுக்குச் சென்று திரும்பி வருபவர்கள் கொரோனா தொற்றுப் பரிசோதனை செய்துகொள்ளாது நடமாடித் திரிவதனால், அவர்கள் ஏனையோருக்கும் தொற்றைப் பரப்பி வருகின்றனர். பொதுமக்கள் தூர இடங்களிலிருந்து வருகைதந்து கிராமங்களில் சுற்றித்திரிபவர்கள் தொடர்பில் தகவல்களை வழங்குமாறும் சுகாதாரப் பிரிவினர் கேட்டுள்ளனர்.

கொரோனா தொற்றை அலட்சியமாக கருதாது தங்களையும், தங்களைச் சார்ந்தவர்களையும் பாதுகாத்துக்கொள்வதற்கு பிரதேசத்தில் அனைவரும் இறுக்கமான சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி நடக்குமாறு கல்முனை வடக்கு பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஆர்.கணேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# கல்முனை மாநகர சபையில் தரம் பிரிக்கப்படாத குப்பைகளுக்குத் தடை; திண்மக்கழிவகற்றல் பிரிவினர் புதிய நடைமுறை நாளை அமுல்



(சாய்ந்தமருது நிருபர்)

கல்முனை மாநகர சபை எல்லையினுள் நாளை 14ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் தரம் பிரிக்கப்பட்ட குப்பைகளை மாத்திரம் சேகரிக்கும் நடைமுறை அமுல்படுத்தப்படவிருப்பதாக தெரிவித்துள்ள மாநகர சபை, தரம் பிரிக்கப்படாத குப்பைகள் எக்காரணம் கொண்டும் பொறுப்பேற்கப்படமாட்டாது எனவும் அறிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் வெளியிட்டுள்ள விசேட அறிவித்தலில் மேலும் தெரிவித்திருப்பதாவது;

கல்முனை மாநகர சபை எல்லையினுள் சேகரிக்கப்படுகின்ற திண்மக்கழிவுகளை கொட்டுவதற்கென இடமொன்று (Dumping Place) எமது மாநகர சபை உட்பட அம்பாறை மாவட்டத்தின் வேறு எப்பகுதியிலும் இல்லாத சூழ்நிலையில், அட்டாளைச்சேனை பிரதேச சபைக்குட்பட்ட பள்ளக்காடு எனும் பகுதியில் மாத்திரமே கடந்த பல வருடங்களாக கொட்டப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் பணிப்புரைக்கமைவாக தற்போது தரம் பிரிக்கப்பட்ட குப்பைகளை மாத்திரமே பள்ளக்காட்டில் கொட்டுவதற்கு அட்டாளைச்சேனை பிரதேச சபையினால் அனுமதி வழங்கப்பட்டிருப்பதுடன், தரம் பிரிக்கப்படாத குப்பைகளை அங்கு கொட்டுவதற்கு தடைவிதித்திருக்கிறது.

இதன் காரணமாக கடந்த சில வாரங்களாக கல்முனை மாநகர பிரதேசங்களில் சேகரிக்கப்படுகின்ற திண்மக்கழிவுகளை கொட்டுவதில் எமது மாநகர சபை பாரிய சவாலை எதிர்நோக்கி வருகின்றது. இதனால் திண்மக்கழிவகற்றல் சேவையை வழமைபோல் முன்னெடுப்பதில் பாரிய சிக்கல் நிலை தோன்றியுள்ளது.

ஆகையால், பொதுமக்கள் தமது வீடுகளில் சேர்கின்ற சமையலறைக் கழிவுகள், உணவுக் கழிவுகள், மரக்கறி, இலை, குலைகள் போன்ற உக்கக்கூடிய கழிவுகளை வேறாகவும் பிளாஸ்ரிக், பொலித்தீன், டின்கள் மற்றும் உக்க முடியாத பொருட்களை வேறாகவும் ஒப்படைக்க வேண்டும் எனவும் இவ்வாறு தரம் பிரிக்கப்படாத குப்பைகள் எக்காரணம் கொண்டும் மாநகர சபையின் திண்மக்கழிவகற்றல் வாகனங்களில் பொறுப்பேற்கப்பட மாட்டாது என்பதையும் வருத்தத்துடன் அறியத்தருகின்றோம்.

புதிய நடைமுறைக்கு நீங்கள் ஒத்துழைப்பு வழங்குவீர்களானால், கல்முனை மாநகர சபையின் திண்மக்கழிவகற்றல் சேவையை தொடர்ந்தும் வினைத்திறனுடன் வெற்றிகரமாக முன்னெடுக்க முடியும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன் - என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## மட்டு. கல்குடா கடலில் சட்டவிரோதமாக கடலட்டை பிடித்த மீனவர்கள் மூவர் கைது





(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு கல்குடா கடலில் சட்டவிரோதமாக படகொன்றில் கடல் அட்டை பிடித்துக்கொண்டிருந்த 3 மீனவர்களை நேற்று முன்தினம் நள்ளிரவு கைதுசெய்துள்ளதாக வாகரை கடற்படையினர் தெரிவித்தனர்.

வாகரை கடற்படை முகாம் கடற்படை புலனாய்வு பிரிவுக்குக் கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து, கடற்படையின் கடலோர பாதுகாப்புத் திணைக்களப் பிரிவு அதிகாரிகளின் உதவியோடு நேற்று முன்தினம் நள்ளிரவு 11.45 மணியளவில் கல்குடா கடலில் வைத்து 3 பேரை கைதுசெய்ததுடன், படகு மற்றும் 65 கடல் அட்டை ஒக்சிஜன் சிலிண்டர் மற்றும் ஏனைய கடல் தொழில் உபகரணங்கள் என்பனவற்றை மீட்டுள்ளனர்.

இதில் கைதுசெய்யப்பட்டவர்கள் கல்குடா பிரதேசத்தைச் சேர்ந்த மீனவர்கள் எனவும் இவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுப்பதற்கு மட்டக்களப்பு மீன்பிடி திணைக் களத்திடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் கடற்படையினர் தெரிவித்தனர்.

## ஐஸ்-ஹெரோயினுடன் வாழைச்சேனையில் இருவர் கைது



(கனகராசா சரவணன்)

வாழைச்சேனை பிறைந்துறைச்சேனை பிரதேசத்தில் ஐஸ் போதைப்பொருள் மற்றும் ஹெரோயின் போதைப்பொருள் வியாபாரிகள் இருவரை நேற்று முன்தினம் இரவு கைதுசெய்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்ட புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து, வாழைச்சேனை பொலிஸ் நிலைய ஊழல் ஒழிப்பு மற்றும் போதை தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி உப பொலிஸ் அதிகாரி பண்டார தலைமையில், பொலிஸார் மற்றும் மாவட்ட புலனாய்வு பிரிவினர் இணைந்து நேற்று முன்தினம் இரவு பிறைந்துறைச்சேனை பகுதியில் உள்ள குறித்த இரு வீடுகளை முற்றுகையிட்டனர்.

இதன்போது போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுவந்த 37 வயதுடைய ஒருவரை 940 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடனும் 18 வயதுடைய ஒருவரை 18 பக்கட்டுக்கள்கொண்ட 1570 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடனும் கைதுசெய்தனர்.

இதில் கைதுசெய்யப்பட்ட இருவரும் பிறைந்துறைச்சேனையை சேர்ந்தவர்கள் எனவும் இவர்கள் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுவந்துள்ளதாகவும் தெரிவித்த பொலிஸார்,அவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

## கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் குருதித் தட்டுப்பாடு

(நற்பிட்டிமுனை நிருபர்)

அஷ்ரப் ஞாபகார்த்தத வைத்தியசாலையில் இடம்பெறும் அவசர சத்திர சிகிச்சைகளுக்குத் குருதி தேவையாதலால் குருதி நன்கொடை யாளர்கள் அதனை அவசரமாக தந்துதவுமாறு இரத்த வங்கிப் பிரிவினரால் கேட்கப் பட்டுள்ளனர்.

வைத்தியசாலைக்கு வருவோருக்கு தேவையான வாகன வசதிகள் மற்றும் ஏனைய வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகவும் கடந்த காலங்களைப்போல் இப்பணிக்கு நல்லாதரவு வழங்குமாறும் கேட்டுள்ளனர்.

உதிரம் கொடுப்போம் உயிரைக்காப்போம் எனும் இந்த செயல்திட்டத்தில் இணைய விரும்புவோர் வைத்திய அத்தியட்சகர் அப்துல் றஹ்மானோடு தொடர்பு கொள்ளலாம்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## அக்கரைப்பற்றில் 5 ஆயிரம் போதை மாத்திரைகளுடன் இருவர் கைது



(கனகராசா சரவணன்)

அம்பாறை அக்கரைப்பற்று பிரதேசத்தில் 5 ஆயிரம் போதை மாத்திரைகளுடன் இருவரை நேற்று முன்தினம் இரவு இராணுவ புலனாய்வுப் பிரிவினர் விசேட அதிரடிப்படையுடன் இணைந்து கைதுசெய்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை கடதாசி ஆலை இராணுவ புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து, விசேட அதிரடிப்படையினருடன் இராணுவப் புலனாய்வு பிரிவினர் நேற்று முன்தினம் இரவு அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு பிரதேசத்தில் குறித்த போதை மாத்திரை வியாபாரிகளின் வீட்டை சுற்றிவளைத்து, சோதனை நடவடிக்கையை மேற்கொண்டபோது அவர்களிடமிருந்து 5 ஆயிரம் போதை மாத்திரைகளை மீட்டதுடன், இருவரையும் கைதுசெய்தனர்.

இதில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரையும் கைப்பற்றப்பட்ட போதை மாத்திரைகளுடன் விசேட அதிரடிப்படையினர் ஒப்படைத்துள்ளதாக தெரிவித்த பொலிஸார் அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

## வரிப்பத்தான்சேனையில் சேதனப் பசளை ஊக்குவிப்பு உற்பத்தித் திட்டம் ஆரம்பித்துவைப்பு





(பாண்டிருப்பு நிருபர்)

அரசின் சௌபாக்கிய திட்டத்தின்கீழ் சேதனப் பசளை பிரயோகத்தை ஊக்குவிக்கும் வகையில் வர்த்தக ரீதியிலான வேலைத்திட்டம் அம்பாறை இறக்காமம் விவசாயப் போதனாசிரியர் பிரிவிற்குட்பட்ட வரிப்பத்தான்சேனை கிராமத்தில் விவசாய விரிவாக்கல் நிலையப் பொறுப்பு விவசாய போதனாசிரியர் எஸ்.ஏ.அஸ்ஹர் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதில் பிரதம அதிதியாக இறக்காமம் உதவிப் பிரதேச செயலாளர் எம்.சி.நஸீல் கலந்துகொண்டார். அத்துடன், இறக்காமம் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் கே.எல்.ஹம்சார், அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆஹிர், வரிப்பத்தான்சேனை விவசாய போதனாசிரியர் ஏ.எல்.மனாஸர், கிராமசேவை உத்தியோகத்தர், விவசாய திணைக்கள உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இங்கு சேதனப் பசளை தயாரிக்கும் செய்முறை பற்றிய விளக்கமளிக்கப்பட்டதுடன், சேதனப் பசளை தயாரித்து அதனை விற்பனை செய்யும் வியாபார நுணுக்கங்கள் பற்றியும் விவசாயிகளுக்கு எடுத்துக்கூறப்பட்டன.

## ஓட்டமாவடியில் இதுவரை 1539 சடலங்கள் நல்லடக்கம்



(எச்.எம்.எம்.பர்ஸான்)

கொரோனா தொற்றினால் மரணமடைந்த நபர்களை நல்லடக்கம் செய்யும் ஓட்டமாவடி – மஜ்மா நகர் மையவாடியில் நேற்று முன்தினம் வரை 1539 உடல்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளதாக ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.நௌபர் தெரிவித்தார்.

அத்துடன், சடுதியாக உயர்ந்த கொரோனா மரணங்களில் ஓகஸ்ட் முதலாம் திகதிமுதல் 11ஆம் திகதிவரை குறித்த மையவாடியில் 308 உடல்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன.

இதில், 10ஆம் திகதி மாத்திரம் 37 உடல்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன. இதுவே ஒரேநாளில் அதிகூடிய உடல்கள் நல்லடக்கம் செய்யப்பட்ட நாளாக பதிவாகியுள்ளது.

கொரோனா உடல்களை நல்லடக்கம் செய்யும் ஊழியர்கள் சலிப்பின்றி இரவு 12 மணிவரை தாண்டியும் நல்லடக்கப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறித்த மையவாடியில் இதுவரை 1448 முஸ்லிம்கள், 42 இந்துக்கள், 28 கிறிஸ்தவர்கள், 21 பௌத்தர்களின் உடல்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன என தவிசாளர் தெரிவித்தார்.



*அட்டாளைச்சேனை - பாலமுனை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அமைப்பாளர் லியார் தலைமையிலான மத்திய குழுவினால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளராக எம்.எஸ்.தௌபீக் நியமிக்கப்பட்டதையிட்டு, வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டு நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிப்பதை படத்தில் காணலாம். (எப்.முபாரக்)*

## அக்கரைப்பற்று வைத்தியசாலைக்கு 87 ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் வழங்கிவைப்பு

(அக்கரைப்பற்று நிருபர்)

அரசாங்கத்துடன் அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களும் இணைந்து கொவிட் அவசரகால இடர் முகாமைத்துவ உதவி வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றன. இதனடிப்படையில் பெரண்டினா நிறுவனம் அதன் கொவிட்-19 அவசரகால இடர்முகாமைத்துவ உதவித்திட்டத்தின் கீழ் பல உதவிச் செயற்பாடுகளை மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டம் உள்ளடங்கலாக 9 மாவட்டங்களில் இயங்கிவரும் சிறுவர், முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் பராமரிப்பு இல்லங்களுக்கும், கொவிட்-19 சிகிச்சை மற்றும் பராமரிப்பு நிலையத்திற்கும், வறுமைக்கோட்டிற்குற்பட்ட தனது பயனாளிகள் குடும்பங்களுக்கும் மாவட்ட செயலகங்கள் மற்றும் அரச திணைக்களங்களுடன் இணைந்து வழங்கி வருகின்றது.

இச்செயற்திட்டத்தின் ஓர் அங்கமாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின்கீழ் இயங்கிவரும் அக்கரைப்பற்று பிரதேச வைத்தியசாலையில் இயங்கிவரும் கொவிட்-19 சிகிச்சை மற்றும் பராமரிப்பு நிலையத்திற்கு உடனடி தேவையான 87 ஆயிரம் ரூபா பெறுமதியான மருத்துவ மற்றும் மருத்துவம் சாரா உபகரணங்கள் வழங்கப்பட்டன.

வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி வபா தலைமையில் இடம்பெற்ற உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வில், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜி. சுகுணன் கலந்துகொண்டு வைத்திய உபகரணங்களை கையேற்றார்.




நிகழ்வில் கல்முனை பிராந்திய கொவிட் சிகிச்சை மற்றும் பராமரிப்பு நிலைய பொறுப்பாளர் வைத்தியர் மாகீர், பெரண்டினா நிறுவனத்தின் பிராந்திய முகாமையாளர் எஸ்.விஜிந்தன் பிரதேச முகாமையாளர் மற்றும் சமூக அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளர்கள் கிளை உத்தியோகத்தர்கள் என சிலர் கலந்துகொண்டனர்.

இதே தினம் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின்கீழ் இயங்கிவரும் கரடியனாறு மற்றும் வாகரை கொவிட் சிகிச்சை மற்றும் பராமரிப்பு நிலையங்களுக்கும் உடனடி தேவையான ரூபா 75 ரூபா பெறுமதியான மருத்துவ மற்றும் மருத்துவம் சாரா உபகரணங்கள் பெரண்டினா நிறுவனத்தினால் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில் பாதுகாப்புப் படையினர் வசமுள்ள காணிகளை இவ்வருட இறுதிக்குள் உரிமையாளர்களிடம் கையளிக்க தீர்மானம்

(மட்டக்களப்பு)

இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவது மற்றும் பொலிஸார், படையினரிடமுள்ள அரச மற்றும் தனியார் காணிகளை மீளக் கையளிப்பது தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலின்போது, கடந்த காலங்களில் உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவது மற்றும் பொலிஸார், படையினரிடமுள்ள அரச மற்றும் தனியார் காணிகளை மீளக் கையளித்து மக்களது இயல்பு வாழ்க்கையை உறுதிப்படுத்திக்கொள்வது தொடர்பாகவும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதன்போது தனியார் காணிகள், கட்டடங்கள், அரச காணிகள், அரச கட்டடங்கள், ஆலயங்கள்,





பாடசாலைகள் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்க கட்டடங்கள் போன்றவற்றில் சில இன்னமும் உரிமையாளர்களிடம் கையளிக்கப்படாமை தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

மண்முனை வடக்கு, மண்முனைப்பற்று, களுவாஞ்சிக்குடி, வெல்லாவெளி, பட்டிப்பளை, கோறளைப்பற்று மத்தி, கிரான் மற்றும் வாகரை பிரதேச செயலாளர் பிரிவுகளில் இன்னமும் தனியார் மற்றும் அரச காணிகளில் படையினர் நிலைகொண்டிருப்பதனால் மக்களது இயல்பு வாழ்வில் தடங்கள் இருப்பதாக பிரதேச செயலாளர்களினால் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன்போது பாதுகாப்புப் படையினர் தம்வசமுள்ள காணிகளில் பெரும்பாலான பகுதிகளை இவ்வருட இறுதிக்குள் உரிய நபர்களிடம் வழங்கவுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

குறித்த கலந்துரையாடலில் 231ஆவது படைப்பிரிவின் பிரிகேட் கொமாண்டர் திலீப பண்டார, மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் எல்.ஆர்.குமாரசிறி, காணி பிரிவிற்கான மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி நவரூபரஞ்சினி முகுந்தன், காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் மட்டக்களப்பு மாவட்ட பணிப்பாளர் நே.விமல்ராஜ், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி சசிகலா புண்ணியமூர்த்தி, முப்படையினர் மற்றும் சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர்களும் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றியவாறு கலந்துகொண்டிருந்தனர்.

அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற மாவட்ட அரசாங்க அதிபர்களுக்கான மாநாட்டின் போது உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களை மீள குடியமர்த்துதல், படையினரிடமுள்ள அரச, தனியார் நிறுவனங்களின் காணிகள் மற்றும் கட்டடங்களை மீளக் கையளித்தல் தொடர்பாக பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரெட்ண மற்றும் வெளிநாட்டு அமைச்சின் செயலாளரினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைவாகவே இக் கலந்துரையாடல் இடம்பெற்றதாக மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் இதன்போது தெரிவித்துள்ளார்.

## வெருகல் பிரதேச செயலாளருக்கு சேவை நலன் பாராட்டு நிகழ்வு





(கிண்ணியா நிருபர்)

கிண்ணியா பிரதேச செயலாளராக கடமையாற்றி வெருகல் பிரதேச செயலாளராக இடமாற்றம் பெற்ற எம்.எச்.முகம்மது கனியின் சேவைநலன் பாராட்டு விழா நேற்று கிண்ணியா உலமா சபை கிளை அலுவலகத்தில் வைத்து இடம்பெற்றது.

கிண்ணியா உலமா சபைத் தலைவர் ஏ.எம்.ஹிதாயத்துள்ளாஹ் நளீமி தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது. இதில் கிண்ணியா சூறா சபை, கிண்ணியா பள்ளிவாசல்கள் ஒன்றியம் ஆகிய சிவில் அமைப்பின் தலைவர்களும் பிரதிநிதிகளும் கலந்துகொண்டார்கள்.

தற்போதைய கால சூழ்நிலையை கவனத்திற்கொண்டு மிகக் குறைந்த அளவான உறுப்பினர்களே அழைக்கப்பட்டிருந்தார்கள்.

இதன்போது பிரதேச செயலாளர் கடமையாற்றிய காலப்பகுதியில் சிவில் சமூகத்தின் ஒத்துழைப்புடன் செயற்பட்டது பற்றி ஞாபகப்படுத்தப்பட்டது. மேலும் பிரதேச செயலாளர் கனி, நன்றியுரையில் எதிர்காலத்திலும் ஒரு சமூக செயலாளராக சிவில் அமைப்புடன் இணைந்து செயற்பட முடியும் என்று தெரிவித்தார்.

சிவில் அமைப்புகளினால் ஞாபக சின்னங்களும் பரிசுப் பொருட்களும் வழங்கப்பட்டன.

## தேசிய வர்த்தக சந்தையில் அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் - தட்டுப்பாடுகளால் மக்கள் திண்டாட்டம்

### மட்டு. மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிநேசன்

(வீரமுனை நிருபர்)

அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிக்கின்றபோது சாதாரண ஏழை மக்கள் அவற்றை வாங்க முடியாமல் திண்டாடுகிறார்கள் - என கூட்டமைப்பின் மட்டு. மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறீநேசன் தெரிவித்தார்.

தேசிய வர்த்தக சந்தையில் அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம், தட்டுப்பாடு தொடர்பாக வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

தொழிலற்று நிர்க்கதியாகியுள்ள மக்கள் பொருட்களின் விலையேற்றத்தால் அவற்றை வாங்க முடியாமல் சிரமப்படுகின்றனர். கடன்களுக்குள் சிக்கிவிடுகின்றனர்.

தற்போது பருப்பு, சீனி, பால்மா, அரிசி, இறைச்சி போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் சத்தம் இல்லாமல் அதிகரித்துள்ளன. அதேவேளை அங்கர், லக்ஸ்பிறே போன்ற பால்மா உணவுகள், எரிவாயு சிலிண்டர் என்பவற்றுக்குத் தட்டுப்பாடுகள் ஏற்பட்டுள்ளன, கடைகளில் அப்பொருட்களைப் பெற முடியாதிருக்கின்றது. இது தொடருமானால் சிறுபிள்ளைகள், கர்ப்பிணித் தாய்மார்கள் போஷாக்கில்லாமல் பாதிக்கப்படக்கூடிய நிலைமை ஏற்படலாம். வறுமை, கடன், பசி, பட்டினி, போஷாக்கின்மை என்பன நாட்டிலுள்ள சாதாரண மக்களைப் பாதிக்கும்போது மக்கள் அரசின் மீது கொண்டுள்ள நம்பிக்கை குறையும் நிலை ஏற்படும்.

மேலும், சில பொருட்களின் விலையேற்றப்படலாம் என்ற அடிப்படையில், பதுக்கப்படும் நிலையும் உருவாகியுள்ளது. இதனால் மக்கள் உலர் பாலுணவுப் பெட்டிகளுக்காக அலையும் நிலை ஏற்பட்டுள்ளது. எரிவாயு சிலிண்டர்களுக்குத் தட்டுப்பாடுகள் ஏற்பட்டுள்ளது. இதனால் மக்கள் வரிசையில் நின்று கொள்வனவு செய்யும் நிலை தோன்றியுள்ளது.

மக்கள் ஒரேநேரத்தில் பல நெருக்கடிகளை எதிர்நோக்கும் வேளையில் அரசு எப்படி நாட்டையும் மக்களையும் சுபீட்சத்தை நோக்கிக் கொண்டுசெல்லப் போகின்றது என்பது வேடிக்கையான விடயமாகவுள்ளது.

வார்த்தைகளால், வாக்குறுதிகளால் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியாது.

அதேவேளை, அரசு ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை இழக்கக்கூடிய நிலைமையும் காணப்படுகிறது. இதனால் அரசு மேலும் பொருளாதார நெருக்கடியைச் சந்திக்கவேண்டிய நிலை ஏற்படப்போகிறது. அரசின் சுபீட்சத்தை நோக்கிய பாதையில் நாடு என்ற கருத்தானது, இருட்டறையில் கறுப்புப் பூனையைப் பிடிக்கும் செயலாகவே அமையப்போகிறது.

மக்களின் அதிருப்திகளை ஆர்ப்பாட்டங்களை பாதுகாப்புக் கெடுபிடிகளால் அடக்கிவிட முடியாது என்பதை அரசு கற்கவேண்டிய சூழல் உருவாகியுள்ளது. எனவே, அரசு மக்களை ஏமாற்றாமல் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறைப்பதற்கும் அவற்றிற்கான கிடைத்தலை உறுதிப்படுத்தவும் வேண்டியுள்ளது- என்றார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## திருக்கோவில் ரூபஸ் குளத்தில் 50 ஆயிரம் மீன்குஞ்சுகள் விடுவிப்பு




(அக்கரைப்பற்று நிருபர்)

திருக்கோவில் பிரதேச செயலகத்திற்குட்பட்ட ரூபஸ் குளத்தில் 50 ஆயிரம் மீன்குஞ்சுகள் விடும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

மீன் வளர்ப்பு ஊடாக காஞ்சிரங்குடா கிராம சேவகர் பிரிவிற்குட்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தை ஊக்குவிக்கும் முகமாக இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

Pledge to Restore Foundation நிதி அனுசரணையுடன் இடம்பெற்ற இந்நிகழ்வில், திருக்கோவில் பிரதேச செயலாளர் த.கஜேந்திரன் கலந்துகொண்டு மீன்குஞ்சுகளை குளத்தில் விட்டார்.

நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் மு.சதிசேகரன், அமைப்பின் அம்பாறை மாவட்ட பணிப்பாளர் இரா.விக்னேஸ்வரன், அக்கரைப்பற்று பகுதி இணைப்பாளர் இதயதினேஸ், திருக்கோவில் இணைப்பாளர் சேந்தன் மற்றும் மீன்பிடி அபிவிருத்தி உத்தியோகத்தர் அபராஜிதன், மீன் வளர்ப்பு விரிவாக்கல் உத்தியோகத்தர் ரவிக்குமார், ரூபஸ் குள நன்னீர் மீன்பிடி மீனவ சங்க செயலாளர் தியாகராஜா, பொருளாளர், சங்க உறுப்பினர்கள் உள்ளிட்டவர்கள் கலந்து சிறப்பித்தனர்.

திலாப்பியா இனத்தைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான சுமார் 50 ஆயிரம் மீன்குஞ்சுகள் குளத்தில் விடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கரடியனாறில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிச்சென்ற உழவு இயந்திரம் மீது பொலிஸார் துப்பாக்கிச்சூடு

### காயங்களுடன் ஒருவர் வைத்தியசாலையில்





(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, கரடியனாறு பகுதியில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிச்சென்ற உழவு இயந்திரம் மீது கரடியனாறு பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் காயங்களுடன் ஒருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பொலிஸாரின் சமிக்ஞையை மீறிச்சென்ற உழவு இயந்திரம் மீது நடத்திய துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில், மட்டு. போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் நேற்று அதிகாலையில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கரடியனாறு பன்குடாவெளிச் சந்தியில் நேற்று அதிகாலை 3 மணியளவில் சட்டவிரோதமாக மணல் அகழ்ந்து உழவு இயந்திரத்தில் எடுத்துச் சென்றபோது பொலிஸார் குறித்த உழவு இயந்திரத்தை நிறுத்த முயற்சித்துள்ளனர். உழவு இயந்திரம் பொலிஸாரின் சமிக்ஞையை மீறிச் சென்ற நிலையில், பொலிஸார் அதனை துரத்திச்சென்று துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதையடுத்து ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

செங்கலடி பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதுடைய துசாந்தன் என்பவரே இவ்வாறு துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கானவர் எனத் தெரிய வருகிறது. குறித்த நபருக்கு தோள்பட்டை பகுதியில் காயம் ஏற்பட்டுள்ளதாகவும் அவரை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## 70 இலட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் நிந்தவூர் ஆதார வைத்தியசாலைக்கு வழங்கிவைப்பு

(அட்டாளைச்சேனை)

நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் அமையப்பெற்றுள்ள கொரோனா தடுப்பு சிகிச்சை நிலையத்திற்கு முன்னாள் சுகாதாரத்துறை இராஜாங்க அமைச்சரும், தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான பைசால் காசிமின் முயற்சியினால் மேலும் சுமார் 70 இலட்சம் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

நாட்டில் தற்போது நிலவும் கொரோனாவின் தீவிரத் தன்மையை கருத்திற்கொண்டு நமது பிரதேசத்தில் அதிகரித்துவரும் நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் நோக்காக நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம், சுகாதார அமைச்சரிடம் விடுத்த அவசர வேண்டுகோளையடுத்து, இந்த உபகரணங்கள் நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில்



அமையப்பெற்றுள்ள கொரோனா சிகிச்சை நிலையத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினரால் வழங்கப்பட்டுள்ளது.

இந்த சிகிச்சை நிலையத்தினை ஆரம்பித்து வைப்பதற்காக முதற்கட்டமாக 30 இலட்சம் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் நாடாளுமன்ற உறுப்பினரால் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## ஜீவநகர் மாதிரிக் கிராம குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு; திருமலையில் கிணறுகள் நிர்மாணித்து வழங்கிவைப்பு

(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை மக்கள் சேவை மன்றத்தினால் முத்தையன்கட்டுக்குளம் கிராமசேவகர் பிரிவிலுள்ள ஜீவநகர் மாதிரிக் கிராமத்தில் குடிநீர் பொதுக் கிணறுகள் இரண்டு நிர்மாணித்து அவற்றை பொதுமக்களுக்கு கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மன்றத்தின் திட்ட அதிகாரி ஆர்.கணேசமூர்த்தி தலைமையில் இடம்பெற்றது.

முத்தையன்கட்டு ஜீவநகர் மாதிரிக் கிராம மக்கள் மிக நீண்டகாலமாக குடிநீர் வசதிகளின்றி கஷ்டப்பட்டுவந்த நிலையில், குறித்த பிரச்சினை தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் ஆராயப்பட்டது. இந்த விடயம் தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட செயலகமும், முல்லைத்தீவு மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையமும் திருகோணமலை மக்கள் சேவை மன்றத்திற்கு



விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில் வன்னி ஹோப் நிறுவனத்தின் வாழ்வதற்கான நீராகாராத் திட்டத்தின்கீழ் இரு பொதுக் கிணறுகள் நிர்மாணிக்கப்பட்டன.

சுமார் பத்து இலட்சம் பெறுமதிகொண்ட இரு குடிநீர்க் கிணறுகள் நிர்மாணித்து வழங்கியதன் மூலம் சுமார் 100இற்கும் மேற்பட்ட மீள்குடியேற்றப்பட்ட மக்கள் நன்மையடைந்துள்ளதுடன், குறித்த மக்களின் நீண்டகால தேவையாக இருந்துவந்த சுத்தமான குடிநீர் தேவையும் பூர்த்தியடைந்துள்ளது.

கொவிட-19 பாதுகாப்பு சுகாதார வழிகாட்டலுக்கமைய நடைபெற்ற இந்தக் கிணறுகள் கையளிக்கும் நிகழ்வுகளில் ஒட்டுசுட்டான் உதவிப் பிரதேச செயலாளர் ரமேஷ், முல்லைத்தீவு மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் இணையத்தின் தலைவர் எஸ்.சிவஞானசேகரம், கிராம உத்தியோகத்தர் நாகலிங்கம் ரஞ்சித்குமார், அபிவிருத்தி உத்தியோகத்தர் தியாகராசா அருள்வேந்தன், முத்தையன்கட்டு ஜீவநகர் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், கிராம மக்கள் உள்ளிட்ட பலரும் இதில் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பின்னிற்கப்போவதில்லை

## நல்ல சமிக்ஞை கிடைத்தால் மாத்திரமே இறுதித் தீர்மானத்துக்கு வரமுடியுமென செல்வம் எம்.பி. சுட்டிக்காட்டு

(மன்னார் நகர் நிருபர்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் அரசாங்கத்திற்கும் இடையில் பேச்சுவார்த்தை இடம்பெறவேண்டுமாக இருந்தால் நிபந்தனையின் அடிப்படையில், ஒரு நல்லெண்ண முயற்சியாக அமையவேண்டும் - என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரிலுள்ள அலுவலகத்தில் நேற்று மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அரசாங்கத்திற்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளதாக அண்மைக்காலமாக செய்திகள் வெளிவந்த வண்ணம் உள்ளன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை மேற்கொள்வதற்கு பின்னடைவை எதிர்நோக்கப் போவதில்லை.

ஆனால், கடந்த கால அனுபவத்தை வைத்துக்கொண்டு நாங்கள் அரசுக்கு சில நிபந்தனைகளை விதிப்பதனூடாக அரசாங்கம் எங்களுடன் பேசுவதற்கு ஒரு நல்லெண்ண முயற்சியாக சில விடயங்களை முதலிலே மேற்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையை நாங்கள் விதிப்பது நன்றாக அமையும் என உங்களுடைய கட்சி கருதுகிறது.

அந்தவகையில் ஐ.நா. தீர்மானங்கள் குறிப்பாக, வடக்கு, கிழக்கில் நடைபெறுகின்ற நில அபகரிப்பு, மக்களின் அன்றாட வாழ்க்கை மிக மோசமாக காணப்படுகின்ற நிலையில், காணிகள் சொந்தமான நிலையில் இல்லை. ஒவ்வொரு திணைக்களத்தினூடாகவும் எமது நிலங்கள் பறிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ள நினைக்கும் அரசாங்கம், முதன் முறையாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பேச்சுவார்த்தைக்கு அழைக்கின்றபோது நல்லெண்ண முயற்சியாக சில விடயங்களை செய்ய வேண்டும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது.


13ஆவது திருத்தச்சட்டத்தை அதிகாரங்களுடன் மாகாண சபை முறைமையை இருக்கிற அதிகாரங்களுடன் செயற்படுவதற்கான ஆணையை அரசாங்கம் பிறப்பிக்க வேண்டும். அரசியல் கைதிகள் குறைந்த எண்ணிக்கையில் இருக்கிறார்கள். அவர்களை நல்லெண்ண அடிப்படையில் விடுதலை செய்யவேண்டும். நில அபகரிப்பு தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது. அபகரித்த நிலங்களை விட்டுக் கொடுக்கும் நிலையை ஏற்படுத்த வேண்டும் என்பது எமது கோரிக்கையாக உள்ளது. அரசாங்கம் பேச்சுவார்த்தைக்கு அழைக்கின்ற போது நாங்கள் பேச தயாராக இருக்கிறோம்.

பேச்சுவார்த்தைக்கு முன்னதாக முக்கிய கோரிக்கைகளை நாங்கள் முன்வைத்துள்ள கோரிக்கைகள் நிபந்தனையின் அடிப்படையில் கலந்துகொள்கின்ற சூழ்நிலை ஏற்பட வேண்டும். கடந்த கால அனுபவங்களைக்கொண்டு இன்று பலர் விமர்சிக்கிறார்கள். இலங்கை அரசாங்கத்திற்கு ஐ.நா. சபையில் காலக்கெடு எடுத்து கொடுத்துள்ளதாக கூறுகிறார்கள். இவ்வாறு பல்வேறு விடயங்களை குற்றச்சாட்டாக முன்வைக்கின்ற சூழ்நிலையில், உலக நாடுகள் இன்றுள்ள சூழ்நிலையில் எங்களுக்குள்ள பிரச்சினைகளை சாதகமாகக் கொண்டுவருகின்ற சூழலை கொண்டுவருகின்ற ஒரு நிலையோடு இந்த விடயத்தை நாங்கள் முன்வைக்க விரும்புகிறேன்.

பேச்சுவார்த்தை என்று வருகின்றபோது இந்திய அரசுடன் இணைந்தொரு செயற்பாட்டை செய்வதன் ஊடாகத்தான் வெளிப்படைத்தன்மை உருவாகும். அந்த அடிப்படையில் அரசாங்கத்திற்கு நிபந்தனை வைக்கின்றோம். முன்வைத்த விடயங்களில் நல்ல சமிக்ஞையை காட்ட வேண்டும். அவ்வாறில்லாமல் நாங்கள் சந்திப்பதன் ஊடாக இன்று இருக்கின்ற ஐ.நா. சபை தீர்மானத்தின் நிபந்தனைகள் மழுங்கடிக்கக்கூடிய வகையில் அரசாங்கம் எதிர்கொள்கின்ற உலக நாடுகளின் அழுத்தங்களை நாங்கள் இல்லாமல் செய்கின்ற சூழ்நிலையை ஏற்படுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருபோதும் சந்தர்ப்பத்தை வழங்கக்கூடாது என்பதே எமது பிரதான நோக்கம்.

தமிழீழ விடுதலை இயக்கம் இந்த பொதுவான விடயத்தை முன்வைத்துள்ளது. அரசாங்கம் எங்களுடன் பேசுகின்ற ஒரு முயற்சியை முன்னெடுக்குமாக இருந்தால் குறித்த விடயங்களை நாங்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளுக்கு நல்ல சமிக்ஞை கிடைப்பதன் ஊடாகத்தான் பேச்சுவார்த்தையில் நாங்கள் கலந்துகொள்வதற்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்த முடியும் என்பது எமது கருத்து - என அவர் மேலும் தெரிவித்தார்.

# அதிக மழைவீழ்ச்சியினால் தெரணியகல – மாலிபொட பிரதான வீதி நீரில் மூழ்கியது





(அருண் யுகேஷ்)

அதிக மழைவீழ்ச்சியின் காரணமாக சீதாவக்க கங்கை பெருக்கெடுத்தமையினால் தெரணியகல - மாலிபொட பிரதான வீதி, நக்காவிட்ட பாலம் நீரில் மூழ்கியது. இதன் காரணமாக பல மணிநேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது

எட்டியாந்தோட்டை வீ ஒய ஆறு பெருக்கெடுத்தமையினால் எட்டியாந்தோட்டை இவ்விலக்கிய பிரதான வீதி பருஸ்சல்ல பாலம் நீரில் மூழ்கியது இதன் காரணமாக 3 மணிநேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. எட்டியாந்தோட்டை சீபோத் ஊடாக நாவலப்பிட்டி நகருக்கு செல்லும் பிரதான வீதி, நாகஸ்தென்ன தோட்டத்தில் ஆறு பெருக்கெடுத்தமையினால் நாகஸ்தென்ன நாவலப்பிட்டிய பிரதான வீதி நீரில் மூழ்கியது.

# வீட்டிலிருந்து கடல் ஆமை மீட்பு

(மன்னார் நகர் நிருபர்)

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மூன்றாம் பிட்டி கிராம பகுதியிலுள்ள வீடொன்றில் உயிருடன் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 50 கிலோவுக்கும் அதிகமான எடையுடன் கூடிய கடல் ஆமை ஒன்றை நேற்று இலுப்பைக்கடவை பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளன.



இலுப்பைக்கடவை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் விரைந்து சென்ற பொலிஸார் குறித்த கடல் ஆமையை உயிருடன் மீட்டுள்ளனர். இதன்போது குறித்த கடல் ஆமைகளை வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் மூன்றாம் பிட்டி பகுதியைச் சேர்ந்த 42 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். உயிருடன் மீட்கப்பட்ட குறித்த கடலாமை இலுப்பைக்கடவை பொலிஸ் நிலையத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ள நிலையில், குறித்த ஆமையினை வனஜீவராசிகள் திணைக்களத்திடம் ஒப்படைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட நபரிடம் மேலதிக விசாரணைகளை இலுப்பைக்கடவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.









*தமது கோரிக்கைகளுக்கு உடனடி தீர்வை பெற்றுத் தருமாறு கோரி, ஆசிரியர்கள் சங்கம் உள்ளிட்ட தொழிற் சங்கங்கள் நேற்று கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் சத்தியாக் கிரகத்தில் ஈடுபட்டனர். (படப்பிடிப்பு – பிரதீப் தம்பரகே)*



# செப்டெம்பரில் வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக இரண்டு தினங்களை பெற்றுக்கொடுக்க தீர்மானம்

## எதிர்வரும் 17 – 20ஆம் திகதிவரை நாடாளுமன்றம் கூடவுள்ளதாக தம்மிக்க தசநாயக்க அறிவிப்பு

பல்வேறு காரணங்களினால் நாடாளுமன்றத்தில் கேட்கப்படாதுள்ள 68 வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக செப்டெம்பர் மாதம் 06ஆம், 27ஆம் திகதிகளில் முற்பகல் 10.00 மணிமுதல் பிற்பகல் 4.30 மணிவரையான நேரத்தை ஒதுக்குவதற்கு நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு தீர்மானித்துள்ளதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க தெரிவித்தார் .

அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஓகஸ்ட் 17ஆம் திகதிமுதல் ஓகஸ்ட் 20ஆம் திகதிவரை நான்கு நாட்கள் நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக செயலாளர் நாயகம் மேலும் குறிப்பிட்டார் .

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதற்கமைய ஓகஸ்ட் 17ஆம் திகதி நாடாளுமன்றம் முற்பகல் 10 மணிக்குக் கூடவிருப்பதுடன், முற்பகல் 11 மணிமுதல் பிற்பகல் 4.30 மணிவரை கொரோனா வைரஸ் தொற்று (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டமூலம், பெறுமதிசேர் வரிச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதி, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழான 06 கட்டளைகள், துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழான 05 கட்டளைகள் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

ஓகஸ்ட் 18ஆம் திகதி இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு சட்டமூலம், உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழான 03 கட்டளைகள், மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழான அறிவித்தல்கள் மற்றும் சுங்கக் கட்டளைச் சட்டத்தின்கீழ் (அதியாயம் 235) 02 தீர்மானங்களும் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

இந்த இரு தினங்களும் பிற்பகல் 4.30 மணிமுதல் 4.50 மணிவரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான கேள்விகளுக்கும், ஓகஸ்ட் 17ஆம் திகதி பிற்பகல் 4.50 மணிமுதல் பிற்பகல் 5.30 மணிவரை ஆளும் கட்சியினால் கொண்டுவரப்படும் சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான பிரேரணைக்கும், ஓகஸ்ட் 18ஆம் திகதி எதிர்க்கட்சியின் ஒத்திவைப்பு நேரத்தின் போதான பிரேரணைக்கும் நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஓகஸ்ட் 19ஆம் திகதி முற்பகல் 11 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை தேருநர்களைப் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமூலம் விவாதமின்றி நிறைவேற்றப்படவிருப்பதாக செயலாளர் நாயகம் தெரிவித்தார் . இதன்பின்னர் நண்பகல் 12 மணிமுதல் பிற்பகல் 5.30 மணிவரை எதிர்க்கட்சியினரால் கொண்டுவரப்படும் 'இலங்கை கல்வித்துறையில் தற்பொழுது காணப்படும் பிரச்சினைகள்' தொடர்பான சபை ஒத்திவைப்புப் பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

ஓகஸ்ட் 20ஆம் திகதி முற்பகல் 11 மணிமுதல் பிற்பகல் 5.30 மணிவரை அரசாங்கத்தினால் கொண்டுவரப்படும் யோசனைக்கமைய 2021ஆம் ஆண்டுக்கான அரையாண்டு நிதி நிலைமைகள் தொடர்பான அறிக்கை குறித்த சபை ஒத்திவைப்பு விவாதம் முன்னெடுக்கப்படவுள்ளது.

நாடாளுமன்றம் கூடும் நான்கு நாட்களும் முற்பகல் 10.00 மணிமுதல் முற்பகல் 11.00 மணிவரை நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டிருப்பதாக செயலாளர் நாயகம் தெரிவித்தார் .

அதேநேரம், நாடாளுமன்ற உறுப்பினர் களின் வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக ஒதுக்கப்படும் நேரத்தை முற்பகல் 11.00 மணியுடன் முடிவுக்குக் கொண்டுவர இங்கு தீர் மானிக்கப்பட்டது.

அத்துடன், 27(2) நிலையியற் கட்டளையின் கீழ் கட்சித் தலைவர்களால் எழுப்பப்படுகின்ற கேள்விகளுக்கு 5 நிமிடங்களும், அவற்றுக்குப் பதில்களை வழங்கும் அமைச்சர்களுக்கு 05 நிமிடங்களை வழங்குவதற்கும் இங்கு தீர் மானிக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள அமைச்சுகளின் கீழ் உள்வாங்கப்படாத அரச நிறுவனங்களால் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படுகின்ற விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்கு பிரதமரின் தலைமையில் மேலும் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கியதாக நாடாளுமன்ற விசேட குழுவொன்றை நியமிப்பதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டதாக செயலாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

# மயங்கி விழுந்தவர் திடீர் மரணம்

## நுவரெலியாவில் சம்பவம்

(டி.சந்ரு)

நுவரெலியா, நகரில் லோசன் வீதியில் அமைந்துள்ள தனியார் வங்கி ஒன்றுக்கு அருகில் வீதியில் மயங்கி வீழ்ந்து ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவர் கடந்த செவ்வாய்க்கிழமை இவ்வாறு மயங்கி விழுந்துள்ளார். இராகலை, மாகுடுகலை கொலனி பிரதேசத்தைச் சேர்ந்த டி.எம்.சுபுன் துஸார (வயது 30) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் உயிரிழந்த நபர் மது அருந்தியிருந்ததாக தெரியவந்துள்ளது. இவர் நடந்துவந்த நிலையில் திடீரென மயங்கியவாறு வீதியில் வீழ்ந்துள்ளார். இதையடுத்து, இவ்விடயம் பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டதையடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் குறித்த நபர் உயிரிழந்துள்ளதை கண்டறிந்துள்ளனர்.

பின்னர், இவரை நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதித்தபோது, இவர் உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேநேரத்தில், உயிரிழந்தவரின் மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.







*கொழும்பு, விஹாரமகாதேவி பூங்காவில் இராணுவத்தினரால் 24 மணிநேரம் முன்னெடுக்கப்படும் தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டத்துக்கமைய 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு முதலாம் மற்றும் கட்ட தடுப்பூசிகளை வழங்கும் நடவடிக்கைகள் நேற்றும் இடம்பெற்றன. (படப்பிடிப்பு : எஷான் தஸநாயக்க)*

# அனுமதியை மீறி 10ஆயிரம் கிலோ கடலட்டைகளை வைத்திருந்த களஞ்சியசாலை உரிமையாளர் கைது

## தென்னிந்தியாவிலிருந்து இடைக்கிடை நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக கடற்படையினரின் விசாரணைகளில் தகவல்



(ஜூட் சமந்த)

புத்தளம், தில்லடிய பிரதேசத்தில் வீடொன்றுக்கு அருகில் முன்னெடுக்கப்பட்டு வந்த குளிரூட்டி வசதிகொண்ட களஞ்சியத்திலிருந்து 10 ஆயிரம் கிலோ கிராம் வரையிலான கடலட்டைகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் கடற்படை தெரிவித்துள்ளது.

அந்தக் களஞ்சியசாலையின் உரிமையாளரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், கடற்படையினரால் நேற்று முன்தினம் இரவு இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

4000 கிலோ கிராம் கடலட்டைகள் வைத்திருப்பதற்கான அனுமதிப்பத்திரத்தை வைத்துள்ள நபரொருவர், அந்த தொகைக்கும் அதிகளவான கடலட்டைகளை களஞ்சியப்படுத்தி வைத்துள்ளதாக கடற்படையின் கற்பிட்டி விஜய முகாமின் புலனாய்வுப்பிரிவு அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்துள்ளது. அந்தத் தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர் இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தென்னிந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாக நாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ள இந்த கடலட்டை தொகை, இடைக்கிடை சிறிய சிறிய தொகைகளாக நாட்டுக்கு கொண்டுவந்து சேர்க்கப்பட்டுள்ளதாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இவ்வாறு கொண்டுவரப்பட்டுள்ள கடலட்டைகளின் ஒரு தொகை கொழும்பு, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய பிரதேசங்களுக்கு விற்பனை செய்ய தயார்ப்படுத்தி வைக்கப்பட்டிருந்ததாக சந்தேகநபர் சுற்றிவளைப்பை மேற்கொண்ட அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ள கடலட்டை தொகையுடன் சந்தேகநபர் புத்தளம் உதவி மீன்வள பணிப்பாளர் காரியாலய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

புத்தளம் உதவி மீன்வள பணிப்பாளர் சுமிந்த விக்ரமாரச்சி உள்ளிட்ட அதிகாரிகளினால் இதுதொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# நியூஸிலாந்து உயர்ஸ்தானிகர் பாதுகாப்பு செயலாளரை சந்தித்து கலந்துரையாடல்



இலங்கைக்கான நியூஸிலாந்து உயர்ஸ்தானிகர் மைக்கல் எட்வேர்ட் அப்பல்டொன், பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்னவை (ஓய்வு) நேற்று முன்தினம் சந்தித்தார்.

ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே பாதுகாப்பு தலைமையக வளாகத்தில் அமைந்துள்ள பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்ற இச்சந்திப்பில் இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தொடர்பாக பாதுகாப்புச் செயலாளர் மற்றும் நியூஸிலாந்து உயர்ஸ்தானிகர் ஆகியோருக்கிடையில் நட்புபூர்வ கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இந்தோ-பசிபிக் பிராந்தியத்திலுள்ள தீவு நாடுகள் என்ற வகையில் இரு நாடுகளினதும் பூகோள மூலோபாய முக்கியத்துவத்தையும், அதனால் ஏற்படக்கூடிய நன்மைகளையும் எடுத்துரைத்த நியூஸிலாந்து உயர்ஸ்தானிகர், இரு நாடுகளுக்குமிடையே நிலவும் உறவுகளை மேலும் வலுப்படுத்துவதாக உறுதியளித்தார்.

அத்துடன், இலங்கையில் கொவிட்-19 தொற்றுநோய் பரவுவதை கட்டுப்படுத்த இராணுவத்தினரால் வழங்கப்பட்டுவரும் பங்களிப்பையும் உயர்ஸ்தானிகர் இதன்போது பாராட்டினார்.

இச்சந்திப்பில் பாதுகாப்பு அமைச்சின் இராணுவ இணைப்பு அதிகாரி பிரிகேடியர் தினேஷ் நாணயக்காரவும் கலந்துகொண்டார். கொவிட் -19 பரவலைத் தடுப்பதற்கான சுகாதார நடைமுறைகளுக்கேற்ப இச்சந்திப்பு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# கொழும்பு திட்டத்தின் புதிய விடயங்களை ஊக்குவிக்க இலங்கை தயாராக இருக்கிறது

## 47ஆவது ஆலோசனைக்குழுக் கூட்டத்தில் வெளிநாட்டமைச்சர் தினேஷ் அறிவிப்பு

அரசாங்கத்தின் சுற்றுச்சூழல் கொள்கையான "நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான செழிப்பான பார்வை'' க்குள், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் "பசுமை மற்றும் ஸ்மார்ட்" நகரங்களின் இலக்குக்கு ஏற்ப, நிலையான பசுமை நகரங்களை உருவாக்குவதற்கான கொழும்பு திட்டத்தை ஊக்குவிக்க இலங்கை தயாராக இருப்பதாக வெளிநாட்டமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தனர்.

கொழும்பு திட்டத்தின் 47ஆவது ஆலோசனைக் குழுக் கூட்டத்தின் ஆரம்ப அமர்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார் . அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

உறுப்பு நாடுகளுடன் இணையும்போது, கொழும்பு திட்டத்தின் சமூகப் பொருளாதார அபிவிருத்திப் பகுதிகளில் வேலை மற்றும் அனுபவம், தொற்றுநோய்க்குப் பிந்தைய உலகின் சவால்கள் வலிமையின் ஆதாரமாக இருக்கும். உலகளாவிய காலநிலை சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தியில் இன்னும் அதிக கவனம் செலுத்த வேண்டும். ஆதலால், கொழும்புத் திட்ட உறுப்பு நாடுகள் தற்போதுள்ள ஒத்துழைப்பை உருவாக்க வேண்டும். அதேபோன்று, புதிய மற்றும் சவாலான உலகளாவிய சூழலில் ஒத்துழைப்புக்கான புதிய வழிகளை ஆராய வேண்டும்.

அனைத்து உறுப்பு நாடுகளினதும் அர்ப்பணிப்பு, பங்களிப்பு மற்றும் அர்த்தமுள்ள நடவடிக்கை ஆகியவற்றைப் பொறுத்து அமைப்புக்களின் வெற்றி ஏற்படுகின்றது.

அனைவருக்கும் வளம் பெறும் வேட்கையில் அபிவிருத்தியடைந்துவரும் உறுப்பு நாடுகளுக்கான அர்த்தமுள்ள திட்டங்களை தக்கவைத்து மேலும், மேம்படுத்த உதவும் வகையில் அபிவிருத்தியடைந்த அரசுகள் கொழும்பு திட்டத்திற்கு தமது ஆதரவை தொடர்ந்தும் நீடிக்க வேண்டும்.

அரசாங்கத்தின் சுற்றுச்சூழல் கொள்கையான "நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான செழிப்பான பார்வை''க்குள், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் "பசுமை மற்றும் ஸ்மார்ட்" நகரங்களின் இலக்குக்கு ஏற்ப, நிலையான பசுமை நகரங்களை உருவாக்குவதற்கான கொழும்புத் திட்டத்தை ஊக்குவிக்க இலங்கை தயாராகவுள்ளது. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் மற்றும் ஏழை நாடுகள் தொழில்நுட்பத் தாக்கத்தை தொடர்ந்தும் எதிர்கொள்வதற்கு விரைவான நகரமயமாக்கல் வழிவகுக்கப்படும். நிலையான நகரங்களை உருவாக்குவதற்கு முதலீடுகள் தேவைப்படுவதால், திறன் அபிவிருத்தி, பசுமைத் தொழில்நுட்பம், ஆற்றல் மற்றும் உட்கட்டமைப்பு, நிலையான மற்றும் நம்பகமான பொதுச் சேவைகளின் அபிவிருத்தி போன்ற உதவிகள் மூலம் நாடுகள் ஆதரிக்கப்படல் வேண்டும்.



சுற்றுச்சூழல் பங்களிப்பையும், அர்ப்பணிப்பையும் காட்டிய நாடுகளின் நிதிக்கடனை ஈடுசெய்வதற்காக சாதகமான வருமானத்தை வழங்குவதற்காக, பசுமை சுற்றுச்சூழல் கலந்துரையாடல்களில் முன்மொழியப்பட்ட முன்னுதாரண மாற்றத்தில், இலங்கையைச் சேர்ந்த உலகளாவிய சுற்றுச்சுழல் ஆர்வலரான பேராசிரியர் ரணில் சேனாநாயக்கவையும் வெளிநாட்டு அமைச்சர் மேற்கோள்காட்டினார்.

கொழும்பு திட்டத்தின் செயலாளர் நாயகம், தூதுவர் பன் கியே து, அமர்வில் உரையாற்றியதுடன், கொழும்பு திட்டத்தின் கலந்துரையாடல்களுக்கான இலங்கை மற்றும் ஏனைய உறுப்பு நாடுகளின் பங்களிப்பையும் பாராட்டினார். கொழும்பு திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து ஐந்தாவது முறையாகவும் இருபது ஆண்டுகளில் முதல் முறையாகவும் இரண்டு நாள் அமர்வாக 47ஆவது ஆலோசனைக் குழுக் கூட்டத்தை இலங்கை நடத்துகின்றது.

வெளிநாட்டமைச்சின் பொருளாதார விவகாரப் பிரிவின் மேலதிக செயலாளர் பி.எம். அம்சா தலைமையில் இந்த ஆலோசனைக் குழுக் கூட்டம் நடைபெற்றதுடன், பொருளாதார விவகாரப் பிரிவின் பதில் பணிப்பாளர் நாயகம் எச்.எம்.கே.ஹேரத், பொருளாதார விவகாரப் பிரிவின் பணிப்பாளர் பிரியங்கா விக்கிரமசிங்க மற்றும் பொருளாதார விவகாரப் பிரிவின் பதில் பணிப்பாளர் அகமது ராஸி ஆகியோர் இலங்கைத் தூதுக்குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

# வாகன நெரிசலுக்குத் தீர்வாக பாலங்களை நிர்மாணிக்க முடிவு

## அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தகவல்



கொழும்பு உட்பட ஏனைய மாவட்டங்களில் காணப்படும் அதிக போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வாக அந்த நகர வீதிகள் மற்றும் அதிக நெரிசல் உள்ளதாக அடையாளம் காணப்பட்ட பிரவேச வீதிகள் மற்றும் மாற்று வீதி கட்டமைப்பு என்பவற்றை அபிவிருத்தி செய்யவும், பாலங்களை நிர்மாணிக்கவும், விசேட அபிவிருத்தித் திட்டமொன்றை ஆரம்பிக்க இருப்பதாகவும் ஆளும் தரப்பு பிரதம கொறடாவும் நெடுஞ்சாலைகள் அமைச்சருமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நெடுஞ்சாலைகள் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்தின் பின்னர் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்த விசேட வீதி அபிவிருத்தித் திட்டம் கொழும்பு, கண்டி, காலி, குருநாகல் மற்றும் கம்பஹா ஆகிய நகரங்களை மையமாகக் கொண்டு தொடங்கப்படும். அதன்பிறகு, இந்த விசேட வீதி அபிவிருத்தித் திட்டம் ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் ஆரம்பிக்கப்படும். குறிப்பாக தினசரி வேலை நேரத்தின் தொடக்கத்திலும் முடிவிலும், இந்த நகரங்களில் பல மணிநேரம் ஏற்படும் போக்குவரத்து நெரிசலினால் அன்றாட வாழ்க்கைக்கு பெரும் தடை ஏற்படுகிறது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இந்த விசேட வீதி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், போக்குவரத்து நெரிசலைக் குறைக்க கொழும்பு மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் அடையாளம் காணப்பட்ட 9 வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. மேலும், கம்பஹா மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களின் போக்குவரத்து நெரிசலுக்குத் தீர்வாக 15 வீதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அத்துடன், கண்டி மற்றும் அதனைச் சுற்றியுள்ள போக்குவரத்து நெரிசலுக்கு காரணமாகவுள்ள 12 வீதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இதேவேளை, காலி மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் போக்குவரத்து நெரிசலை போக்குவதற்கு 8 வீதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு, இத்தேபான மற்றும் மாது கங்கைக்கு குறுக்கே 02 பாலங்களை நிர்மாணிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

அத்தோடு, குருநாகல் நகரில் காணப்படும் போக்குவரத்து நெரிசலை நீக்குவதற்காக மாற்று வீதிகளை நிர்மாணிக்கவும், சுற்றுவட்ட வீதிகளை அபிவிருத்தி செய்யவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இது தவிர யாங்கல்மோதர, அளவ்வ, மஹவ மற்றும் முத்தெட்டுக்கல ஆகிய பிரதேசங்களில் மேம்பாலம் அமைக்கவும், ஒரு மாற்று வீதிளமைக்கவும் பூர்வாங்க திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். அனைத்து வீதி கட்டமைப்புகளுடனும் தொடர்புள்ள வீதி சமிக்ஞை கட்டமைப்புகள் மற்றும் சுற்றுவட்டங்கள் போன்றவற்றை நிர்மாணிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஆனமடுவவில் பொலிஸ் சார்ஜன்ட் திடீர் மரணம்

(ஜூட் சமந்த)

ஆனமடுவ பொலிஸ் பிரிவில் சேவையாற்றிய பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் சுகயீனமடைந்த நிலையில் திடீரென உயிரிழந்துள்ளார். நேற்று முன்தினம் இரவு இவர் உயிரிழந்துள்ளார்.

பொலிஸ் சார்ஜன்ட் இலக்கம் 41500 விமலரத்ன அபேசிங்க (வயது 49) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இவர் ஆனமடுவ, வல்பாலுவ பிரதேசத்தில் வசித்து வந்துள்ளார்.

தனது கடமையை முடித்துவிட்டு வீட்டுக்கு சென்றுள்ள குறித்த பொலிஸ் சார்ஜன்ட், திடீரென சுகயீனமடைந்துள்ளார். அதன் பின்னர் அவரை விரைவாக வைத்திசாலையில் சேர்க்க குடும்பத்தினர் நடவடிக்கை எடுத்திருந்த போதிலும், வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லும் வழியிலேயே அவர் உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில், அவரின் மாதிரியை பரிசோதனைக்குட்படுத்த வைத்திய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். பரிசோதனை அறிக்கை கிடைத்தவுடன் பிரேத பரிசோதனைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

# லக்ஷ்மன் கதிர்காமர் இன வேறுபாடுகளின்றி சேவை புரிவதில் முன்னுதாரணமாகத் திகழ்ந்தவர்

## கலாநிதி சுரேன் ராகவன் தெரிவிப்பு

இன வேறுபாடுகளின்றி தாய்நாட்டுக்காக சேவை புரிவதில் முன்னுதாரணமாக திகழ்ந்தவர் லக்ஷ்மன் கதிர்காமர் என நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

இலங்கையின் கீர்த்திமிகு அரசியல்வாதியும், முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான லக்ஷ்மன் கதிர்காமர் கொலை செய்யப்பட்டு நேற்றுடன் 16 ஆண்டுகள் பூர்த்தியாவதை முன்னிட்டு நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி சுரேன் ராகவன் கொழும்பு-3 இல் அமைந்துள்ள அமரர் லக்ஷ்மன் கதிர்காமரின் திருவுருவச் சிலைக்கு மலரஞ்சலி செலுத்தியதன் பின்னர் கருத்துரைக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சர்வதேச ரீதியில் தாம் செல்வாக்குச் செலுத்திய சட்டத்துறையைக் கைவிட்டு சவாலான நேரத்தில் நம் தாய்நாட்டுக்காக முன்வந்து பணியாற்றிய லக்ஷ்மன் கதிர்காமர், அதற்காக தமது உயிரையும் அர்ப்பணித்தார் என்பதை கலாநிதி சுரேன் ராகவன் இதன்போது நினைவுகூர்ந்தார்.



# ஹெரோயினுடன் நபரொருவர் கைது –

## மீகொட

மீகொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹெட்டியாவத்த, 06ஆவது ஒழுங்கைக்கு அருகில் நேற்று முன்தினம் மீகொட பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது 04 கிராம் 480 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மீகொட பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

# கொலைச் சம்பவம் –

## பயாகல

பயாகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பயாகல வடக்கு பிரதேசத்திலுள்ள வீடொன்றுக்கு எதிரில் நேற்று முன்தினம் வெட்டுக்காயங்களுடன் நபரொருவர் நாகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். இதுதொடர்பில் பயாகல பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தளுவத்த, பயாகல பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் நாகொட வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. இந்த கொலைச்சம்பவத்துடன் சம்பந்தப்பட்ட சந்தேகநபர் மற்றும் கொலைக்கான காரணம் என்பன இதுவரையில் அடையாளம் காணப்படவில்லை என்பதுடன், இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை பயாகல பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# வீதி விபத்துகளில் இருவர் பலி

## மஹவிலச்சிய

மஹவிலச்சிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அனுராதபுரம் - மஹவிலச்சிய வீதியில் நேற்று முன்தினம் பேமடுவ பொது மயானத்துக்கு அருகில் வீதி திருத்தப் பணியில் ஈடுபட்டுகொண்டிருந்த மோட்டார் க்ரேடர் இயந்திரம் திருத்தப் பணிகளுக்காக பின்நோக்கிப் பயணித்துகொண்டிருந்தபோது, அந்த இயந்திரத்துக்கு பின்னால் வீதி திருத்தபணியில் ஈடுபட்டிருந்த நபர் மீது மோட்டார் க்ரேடர் இயந்திரம் ஏறியதால் விபத்தொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் படுகாயங்களுக்குள்ளான நபர் பேமடுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

கிம்புல்வெவ, தந்திரிமலை பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சடலம் பேமடுவ வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், விபத்து தொடர்பில் க்ரேடர் இயந்திரத்தின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார். மஹவிலச்சிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## சியம்பலாண்டுவ

சியம்பலாண்டுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அம்பாறை - சியம்பலாண்டுவ வீதியில் நேற்று முன்தினம் முதலாவது ஒழுங்கையில் மௌனராகலையை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்களொன்றும், எதிர்த்திசையில் வந்த ரிப்பர் ரக வாகனமொன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன. விபத்தில் படுகாயங்களுக்குள்ளான மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் சியம்பலாண்டுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

02ஆவது ஒழுங்கை, அம்பாறை வீதி, சியம்பலாண்டுவ பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சடலம் சியம்பலாண்டுவ வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், விபத்து தொடர்பில் ரிப்பர் ரக வாகனத்தின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார். இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை சியம்பலாண்டுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நல்லூர் கந்தசுவாமி ஆலய கொடிச்சீலை எடுத்துவரும் நிகழ்வு






(ஐ.சிவசாந்தன்)

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவப் பெருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நிலையில், சம்பிரதாய பூர்வமாக கொடியேற்றத்துக்கான கொடிச்சீலை எடுத்துவரும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

செங்குந்தர் பரம்பரையினரால் நல்லூர் ஆலயக் கொடியேற்றத்திற்கான கொடிச்சீலை சம்பிரதாயபூர்வமாக ஆலயத்தில் ஒப்படைக்கப் படுவது பாரம்பரிய வழக்கமாகும்.

நல்லூரிலுள்ள செங்குந்த மரபினர் வருடா வருடம் கொடியேற்றத்திற்கான கொடிச்சீலையை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அதன்படி யாழ். சட்டநாதர் சிவன் ஆலயத்திற்கு அருகிலுள்ள வேல் மடம் முருகன் ஆலயத்தில் காலை 9 மணிக்கு நடைபெற்ற விசேட பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து அங்கிருந்து கொடிச்சீலை மாட்டுவண்டியில் பருத்தித்துறை வீதியினூடாக எடுத்துச் செல்லப்பட்டு காலை 10 மணியளவில் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தை வந்தடைந்தது.

அங்கு ஆலயத்தின் வெளிவீதி உலா சென்று சுபநேரத்தில் பூஜைகள் இடம்பெற்று கொடிச்சீலை நல்லூர் ஆலய பிரதம குருக்களிடம் கையளிக்கப்பட்டது.

இன்று காலை பத்து மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் மகோற்சவ பெருவிழா தொடர்ந்து 25 நாட்கள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மட்டுப்படுத்தப்பட்ட 150 பக்தர்களுடன் மடுத் திருவிழாவைக் கொண்டாடவுள்ளோம்

## ஒத்துழைப்பு நல்குமாறு அரச அதிபர் வேண்டுகோள்

(மன்னார் நகர் நிருபர்)

தேசிய திருவிழாக்களில் ஒன்றான மன்னார் மறை மாவட்டம் மருதமடு அன்னையின் ஆவணி மாதப் பெருவிழாவில் கலந்துகொள்ள பாதயாத்திரையாகவோ அல்லது போக்குவரத்து மூலமோ வேறு மாவட்டங்களிலிருந்து மடுத் திருத்தலத்துக்கு வருகை தருகின்றவர்களை பாதுகாப்புத்துறையின் உதவியுடன் தடுத்து நிறுத்தி திருப்பியனுப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன – என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெல் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

தேசிய திருவிழாக்களில் ஒன்றான மன்னார் மாவட்டம் மருதமடு அன்னையின் ஆவணி மாதப் பெருவிழாவை எதிர்வரும் மாதம் 15 ஆம் திகதி கொண்டாடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இம்மாவட்டத்தில் கொரோனா தொற்றை கவனத்திற்கொண்டு நாங்கள் இவ்விழா தொடர்பாக முடிவுகளை மேற்கொண்டுள்ளோம்.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனைகளுக் கிணங்க இம்முறை மடு திருவிழாவுக்கு 150 பக்தர்களை மட்டுமே அனுமதிப்பதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, ஒருசில நாட்களில் எங்கள் அவதானிப்பின் அடிப்படையில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களிலிருந்து பாதயாத்திரையாக பக்தர்கள் மடு தேவாலயத்தை நோக்கி



வருவதை நாங்கள் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

பாதயாத்திரையாக அல்லது போக்குவரத்து மூலமோ வேறு மாவட்டங்களிலிருந்து மடு திருத்தலத்துக்கு வருவதை பாதுகாப்புத்துறையின் உதவியுடன் நிறுத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சகல சோதனைச்சாவடிகளிலும் பாதுகாப்புத் துறையினரும், அதிகாரிகளும் இதனை வலியுறுத்துவார்கள்.

எல்லா மாவட்ட மக்களுடனும் நாங்கள் இந்த தேசிய விழாவான மருதமடு அன்னையின் விழாவைக் கொண்டாட விருப்பம் கொண்டிருந்தபோதிலும், தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள மிக வேகமான கொரோனா நோயின் தீவிரத்தால் பல கட்டுப்பாடுகளை சுகாதார அமைச்சு எங்களுக்கு விதித்துள்ளது.

ஆகவே, இதனைப் பின்பற்ற வேண்டிய கட்டாயத்திலிருக்கிறோம். எனவே, சென்ற முறை வழங்கிய ஒத்துழைப்பு போன்று இம்முறையும் எமக்கு ஒத்துழைப்பு தந்து உங்கள் வீடுகளிலிருந்து பிரார்த்தனைகளை மேற்கொள்ளுங்கள்.

சுகாதார நடைமுறைகளை முறையாக பின்பற்றுவதன் மூலம் இறைவன் சித்தம் கொண்டால் அடுத்த வருடம் நாம் எல்லோரும் ஒன்றிணைந்து மிகச் சிறப்பாக கொண்டாடக்கூடிய சூழ்நிலை ஏற்படும் என்பதை கவனத்திற்கொண்டு இம்முறை மன்னார் மாவட்ட மக்களுடன் அதுவும் மட்டுப்படுத்தப்பட்ட 150 பக்தர்களுடன் கொண்டாட அனைவரினதும் ஒத்துழைப்பை நான் தயவாக வேண்டி நிற்கின்றேன் – என்றார்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# பரவிப்பாஞ்சானில் தனியார் காணி இராணுவத்தினரிடமிருந்து விடுவிப்பு

(கிளிநொச்சி நிருபர்)

கிளிநொச்சி, பரவிப்பாஞ்சான் பகுதியில் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலிருந்து காணியொன்று நேற்று விடுவிக்கப்பட்டது.

2010ஆம் ஆண்டு முதல் படையினர் வசமிருந்த காணிகள் படிப்படியாக விடுவிக் கப்பட்ட நிலையில், குறித்த காணியைத் தொடர்ந்தும் படையினர் தம் வசம் வைத்திருந்தனர்.

இந்நிலையில் காணி உரிமையாளர், அதிகாரிகள் மற்றும் கிளிநொச்சி இராணுவ தலைமையக கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் கரேந்ர ரணசிங்கவிடம் விடுத்த கோரிக்கைக்கமைய, ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷவின் பணிப்பின்பேரில் விடுவிக்கப்பட்டதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.




57ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் ஜி.ஆர்.ஆர்.பி.ஜெயவர் தனவால் குறித்த காணி கரைச்சி பிரதேச செயலாளர் பாலசுந்தரம் ஜெயகரனிடம் கையளிக்கப்பட்டது.

இதனையடுத்து காணி உரிமையாளரின் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டதன் பின்னர் காணியை உரிமையாளரிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென கரைச்சி பிரதேச செயலாளர் பாலசுந்தரம் ஜெயகரன் தெரிவித்தார். இந்நிகழ்வில் 57ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் ஜி.ஆர்.ஆர்.பி.ஜயவர்தன, கரைச்சி பிரதேச செயலாளர் பாலசுந்தரம் ஜெயகரன், கிராமசேவையாளர், காணி உரிமையாளர் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

# பொலிஸார் – பீ.எச்.ஐ. உட்பட எட்டு பேருக்கு கொரோனா தொற்று

(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு நேற்று முன்தினம் புதன்கிழமை சிகிச்சை பெற வந்தவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் சிறுவர்கள், சுகாதார பரிசோதகர், பொலிஸார் உட்பட எட்டு பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸார், பொதுச் சுகாதாரப் பரிசோதகர், வெளிமாவட்டத்திலுள்ள தையல் நிலையத்தில் கடமையாற்றும் பெண், அவரது இரு குழந்தைகள் மற்றும் அவரது தாயார் ஆகியோர் உட்பட எட்டு பேர் தொற்றுக்கு இலக்காகி இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

தொற்றுக்குள்ளான பொலிஸார் விடுமுறையில் வீடு சென்று வந்து தனிமைப்படுத்தலில் இருந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# ‘பசி இல்லா மன்னார்’ அமைப்பினால் நிவாரணப் பொருட்கள் கையளிப்பு



(மன்னார் நகர் நிருபர்)

நாடளாவிய ரீதியில் பயணத்தடை நீக்கப்பட்டுள்ள நிலையில், நானாட்டாம் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட முருங்கன், இரட்டைகுளம் பகுதியில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவம் மற்றும் காணாமலாக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு ஒருதொகுதி நிவாரணப் பொருட்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்டத்தில் இயங்கிவரும் டொக்டர் அரசகோன் கிளினிக்கின் நிதி அனுசரணையில், ‘பசி இல்லா மன்னார்’ அமைப்பின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் சதீஸின் ஏற்பாட்டில், வைத்தியர் அரசகோன் கிளினிக்கின் நிறுவனத் தலைவர் குறித்த நிவாரணப் பொருட்களை இரட்டைகுளம் பகுதிகளைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கினார்.

அண்மையில் கொரோனா பரவல் காரணமாக மிகவும் பாதிக்கப்பட்ட குறித்த பகுதியைச் சேர்ந்த மக்கள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களில் முதல் கட்டமாக 25 குடும்பங்களுக்கு சுமார் 2,500 ரூபா பெறுமதியான அரிசி, சீனி, மா, பருப்பு, கடலை உட்பட அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய நிவாரணப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வாள்வெட்டில் ஒருவர் படுகாயம்

(சாவகச்சேரி நிருபர்)

தென்மராட்சி-மீசாலை வயல்கரை பகுதியடியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் சுவிஸிலிருந்து வந்த ஒருவர் கையில் படுகாயமடைந்துள்ளார்.

இரவு 8.30 மணியளவில் வீதியால் நடந்து சென்ற குறித்த நபர் மீது இனந்தெரியாதோர் வாள்வெட்டுத் தாக்குதல் நடத்திவிட்டு தப்பித்துச் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் சுவிஸிலிருந்து வருகை தந்து மீசாலை வயல்கரை பகுதியில் வசித்துவரும் 50 வயதான நபர் காயமடைந்த நிலையில், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

குறித்த வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# நெருக்கடிகளை உணர்ந்து செயற்படத் தவறின் பேரிழப்புகளை சந்திக்கவேண்டி நேரிடும்

## மருத்துவர் நிமால் அருமைநாதன்

(கிளிநொச்சி நிருபர்)

நாளுக்கு நாள் கிளிநொச்சி மாவட்டத்தில் தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. எனவே, பொதுமக்கள் இந்த நெருக்கடியை உணர்ந்துகொண்டு செயற்படத்தவறின் பேரிழப்புகளை சந்திக்க வேண்டிய நிலை ஏற்படும் - என கிளிநொச்சி மருத்துவர் நிமால் அருமைநாதன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் முதலாவது நோயாளி 07.11.2020 அன்று அடையாளம் காணப்பட்ட நாள் தொடக்கம் ஜூலை 2021 வரை 1,400 கொவிட் -19 நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் 14 கர்ப்பிணித் தாய்மார்கள், 10 வயதுக்குட்பட்ட 52 சிறுவர்கள், அடங்குகின்றனர். அத்தோடு மூன்று மரணங்களும் ஏற்பட்டுள்ளன.

மாவட்டத்தில் நாளுக்கு நாள் தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. ஆனால், பெரும்பாலான பொதுமக்கள் எவ்வித சமூகப் பொறுப்புமின்றி சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்காது நடமாடித் திரிகின்றனர். பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்காதுவிடின் தொற்றுபரவும் வேகம் மிகவும் வேகமாக அதிகரிக்கும். இதேவேளை தடுப்பூசியை கிளிநொச்சி மக்கள் அதிக ஆர்வத்துடன் செலுத்தி வருகின்றனர்.



மாவட்டத்திற்கு கிடைக்கப்பெற்ற தடுப்பூசிகள் அனைத்தும் அந்தக் காலப்பகுதிக்குள் செலுத்தி முடிக்கப்பட்டுள்ளன. தடுப்பூசியை செலுத்திக்கொண்டாலும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றுவது கட்டாயமாகும். இதனை அனைத்து மக்களும் புரிந்துகொள்ள வேண்டும். முக்கியமாக கொவிட் தொற்றுக்குள்ளானோர் எண்ணிக்கை தற்போது அதிகரித்து வருகிறது. நாளுக்கு நாள் அதிக எண்ணிக்கையானவர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர். கொவிட்-19 பரிசோதனை மேற்கொள்கின்றவர்களில் இவ்வாறு அதிகரித்த தொற்றுக்குள்ளானோர் இனங்காணப்படுகின்ற போது சமூகத்தில் இன்னும் எத்தனை பேர் தொற்றுடன் இருக்கின்றார்கள் என்பதும் முக்கியமானது.

மட்டுப்படுத்தப்பட்ட சுகாதார வளங்களைக் கொண்டுள்ள கிளிநொச்சி போன்ற மாவட்டங்களில் கொவிட் -19 தொற்றுக்குள்ளாவோர் அதிகரித்தால் மருத்துவ வளங்கள் அனைத்தும் அங்கு திசைதிருப்பப் படுகின்றபோது ஏனைய நோய்கள், சிகிச்சைகளைக் கவனிக்க முடியாமல் போய்விடும். இதனால் அதிகளவு பாதிப்புகள் மற்றும் பேரிழப்புகள் ஏற்படும்.

எனவே, பொதுமக்கள் இந்த நெருக்கடிகளை புரிந்துகொண்டு சுகாதார நடைமுறைகளை பின்பற்றி பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்பதை இந்த இடத்தில் வலியுறுத்துகின்றேன் - எனக் குறிப்பிட்டார்.

# பண்டாரிக்குளம் கிராமசேவையாளர் பிரிவு அலுவலகம் தற்காலிகமாக பூட்டு

(வவுனியா நிருபர்)

கொரோனா தொற்று அச்சம் காரணமாக வவுனியா - பண்டாரிக்குளம் கிராமசேவையாளர் பிரிவு அலுவலகம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.



குறித்த அலுவலகத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டதையடுத்து கிராமசேவையாளர் அலுவலகம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக அப்பகுதி கிராமசேவையாளர் தெரிவித்துள்ளார்.

மேலும், கொரோனா தொற்றுக்குள்ளானோருடன் தொடர்புகளைப் பேணிய அலுவலகத்தில் பணியாற்றும் அனைத்து ஊழியர்களும் அவர்களின் வீடுகளில் சுயதனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

# வீட்டில் தனிமையிலிருந்த இளம் தாய் – இரண்டு பிள்ளைகளைக் காணவில்லை; கணவர் முறைப்பாடு

(வவுனியா நிருபர்)

வவுனியா பூந்தோட்டம் முதலாம் ஒழுங்கை, மகாறம்பைக்குளம் பகுதியில் வசித்துவரும் சற்குணசிங்கம் தமிழினி மற்றும் பிள்ளைகளான டனிஸ்கா, கனிஸ்கா ஆகியோர் வீட்டில் தனிமையிலிருந்த சமயத்தில் காணவில்லையென வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.



குறித்த பகுதியில் குடும்பத்தினருடன் கணவர், மனைவி, இரு பிள்ளைகள் என நால்வர் வசித்துவந்த நிலையில், கடந்த 10ஆம் திகதி கணவர் வேலைக்குச் சென்று மாலை வீடு திரும்பியபோது வீட்டிலிருந்த மனைவி மற்றும் அவரது இரு பிள்ளைகளையும் காணவில்லை. இதனையடுதது கணவரால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

சற்குணசிங்கம் தமிழினி (வயது 32), பிள்ளைகளான டனிஸ்கா (வயது 5), கனிஸ்கா (வயது 4) ஆகியோரே காணாமல்போனவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

இவர்கள் தொடர்பில் தகவல் தெரிந்தவர்கள் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கோ அல்லது 0777111103, 0775945839 ஆகிய கைபேசி இலக்கங்களுக்கோ அழைப்பையேற்படுத்தி அறிவிக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4ஆம் பக்கத் தொடர்ச்சி...

நாளுக்கு நாள் வியாபாரம் அமோகமாக நடைபெற ஆரம்பித்தது. கொழும்பிலுள்ள தனது சொந்த வீட்டிலேயே ஒரு இரத்தினக்கல் காட்சியறையை அமைத்து வியாபாரத்தை மேற்கொண்டார். பின்னர் நாளடைவில் வியாபாரத்தின் வளர்ச்சி காரணமாக றிபாய் ஹாஜியார் தனது வியாபாரத்தை நிறுவனமயப்படுத்த எண்ணினார்.

1976 ஆம் ஆண்டு தனது பெயரின் முதலெழுத்துகளைக்கொண்டு ZAM Gems எனும் வர்த்தக நாமத்தில் இரத்தினக்கல் வியாபார நிலையமொன்றை ஒரேயொரு ஊழியருடன் ஆரம்பித்தார். தனது அயராத முயற்சியின் பலனாகவும், இறைவனின் பேரருளினாலும் விற்பனையாளராக தொழில் சந்தையில் பிரவேசித்த ஷம் றிபாய், தொழிலதிபர் ஷம் றிபாய் ஹாஜியாராக பரிணமித்தார். இறைவனின் பேரருளினாலும், அயராத உழைப்பினாலும் வர்த்தகராகும் தனது கனவை நனவாக்கிக் கொண்டார் றிபாய் ஹாஜியார்.



ZAM Gems இரத்தினக்கல் வியாபாரத்தில் தேசிய ரீதியில் மட்டுமல்லாது, சர்வதேச ரீதியிலும் தனக்கென தனியிடத்தையும், நன்மதிப்பையும் குறுகிய காலத்திலேயே ஈட்டிக்கொண்டது. இதன்மூலம் கொழும்பு பம்பலப்பிட்டியில் ZAM Gems தனது சொந்தக் கட்டடத்திலேயே தனது காட்சியறையை 1989ஆம் ஆண்டு நிறுவியது. ZAM Gems பின்னர் தனது கிளையை கண்டி நகரில் ஆரம்பித்தது. மேலும் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் உட்பட நாட்டின் ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள், வர்த்தக அங்காடிகள் போன்றவற்றில் காட்சியறைகளை நிறுவியது. ZAM Gems வர்த்தக நாமம் வெளிநாட்டு வாடிக்கையாளர்களின் பேரபிமானத்தை பெற்றமையினால் கடல்கடந்த நாடுகளிலும் சர்வதேச முன்னனி விமான நிலையங்களில் ZAM Gems தனது காட்சியறைகளை நிறுவி போட்டி நிறைந்த இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் சந்தையில் தன்னை நிலைநிறுத்திக்கொண்டுள்ளது. இதுவரை தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் 15 கிளைகளைக்கொண்டுள்ளது. வர்த்தகத்துறையில் தேசிய, சர்வதேச மட்டங்களில் பல்வேறு விருதுகளையும், சான்றிதழ்களையும் ZAM Gems பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ZAM Gems ஊடாக எண்ணற்ற இரத்தினக்கல் வியாபாரிகள் தங்களது இரத்தினக்கற்களுக்கு நியாயமான விலையைப் பெற்று இலாபமடைந்து வருவதுடன், ZAM Gems காட்சியறைகளில் மற்றும் ஆபரண வடிவமைப்பு தொழிற்சாலைகளில் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளனர். ZAM Gems வியாபாரத்தினூடாக இலங்கையின் தேசிய பொருளாதாரத்திற்கும் குறிப்பிடத்தக்களவிலான அந்நியச்செலாவணி கிடைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கொடை வள்ளல்

ஷம் றிபாய் ஹாஜியார் கோடீஸ்வரரானதன் பின்னர் கொடை வள்ளலான ஒருவரல்ல. மாறாக, விற்பனையாளராக கடையில் பணியாற்றும்போதே பெற்றுக்கொண்ட சிறிய சம்பளத்திலேயே தனது உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் தனது சக்திக்கேற்ப உதவிபுரியும் நற்பழக்கத்தைக்கொண்டவர். அவரது வியாபாரத்தையும், வளர்ச்சியையும் போலவே பிறருக்கு உதவும் பண்பும் கூடவே வளர்ந்தது என்பது பாராட்டுக்குரியது.

றிபாய் ஹாஜியாரைவிட பன்மடங்கு கோடீஸ்வரர்கள் பேருவளையில், இலங்கையில் வாழ்ந்தார்கள், வாழ்கின்றார்கள். ஆனால், அவர்களில் பலர் அவர்கள் மட்டுமே வாழ்ந்தார்கள். அனுபவித்தார்கள். ஆனால், றிபாய் ஹாஜியார் “தான் மட்டும் வாழாது, தனது குடும்பத்தினரையும், ஊர் மக்களையும், சமூகத்தினரையும், நாட்டு மக்களையும் தன்னால் இயன்றளவு வாழவைத்தார்” என்பதே அவரது தனித்துவமாக இருந்தது. “எங்களுக்கும் காலம் வரும், காலம் வந்தால் வாழ்வு வரும், வாழ்வு வந்தால் அனைவரையும் வாழவைப்போமே...” என்ற பாடலினையே றிபாய் ஹாஜியார் அடிக்கடி முணுமுணுத்ததாக அறியமுடிகிறது. அதனால்தான் இன்று அவர் இறந்த பின்னரும் அவரைப்பற்றி இந்தப் பத்திரிகை மட்டுமல்லாது ஏனைய ஊடகங்கள், சமூக ஊடகங்கள் என எல்லா ஊடகங்களும் பேசிக்கொண்டிருக்கின்றன. செல்வத்தைக் கொடுக்கின்ற இறைவன் எல்லோருக்கும் அதனை பிறருக்கு வழங்குவதற்கான உள்ளத்தைக் கொடுப்பதில்லை. அவ்வாறு இரண்டும் கிடைக்கப்பெற்ற சொற்பமானவர்களில் றிபாய் ஹாஜியாரும் ஒருவரே.





றிபாய் ஹாஜியாரது சமூகசேவைப் பணிகளைத் தடுக்காமல் அவரது நற்பணிகளை ஊக்குவித்த பெருமை அவரது மனைவி உட்பட அவரது பிள்ளைகள், உடன்பிறப்புகள மற்றும் குடும்பத்தினரையே சாரும். அவரது குடும்பத்தினரது பூரண ஒத்துழைப்புடன் இப்பணிகள் முன்னெடுக்கப்பட்டமையினால் தங்குதடையின்றி றிபாய் ஹாஜியாரினால் சமூக சேவைப் பணிகளை முழுவீச்சுடன் மேற்கொள்ளமுடியுமாக இருந்ததெனலாம்.

ZAM Trust எனும் சமூகசேவை நிதியத்தினை நிறுவி அதன்மூலம் குடும்பத்தினர்கள், ஊழியர்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள், பள்ளிவாசல்கள், அனர்த்த நிவாரணங்கள், வீடமைப்புத் திட்டங்கள் என இன, மத, பிரதேச வேறுபாடுகளின்றி பல்வேறு சமூகநலப் பணிகளை மேற்கொண்டுவந்தார் றிபாய் ஹாஜியார். தனது செல்வச் செழிப்பிலும் பெண்கள் கல்வியை வலியுறுத்தியது மட்டுமல்லாது, முன்னுதாரணத்தினையும் தனது குடும்பத்திலேயே உருவாக்கினார். தனது மகள் வர்தா றிபாய்யை வைத்தியராக்கினார். நாட்டுக்கும், சமூகத்திற்கும் பல்வேறு சேவைகளை வைத்தியர் வர்தா றிபாய் மேற்கொண்டு வருகின்றமை பாராட்டத்தக்கது.




றிபாய் ஹாஜியார் அவர்களது பொருளாதாரம், கல்வித்துறை, சமூக சேவைப் பங்களிப்புகளை பாராட்டி கௌரவிக்கும் முகமாக இலங்கை ஜனாதிபதியினால் வழங்கப்படுகின்ற அதியுயர் விருதுகளில் ஒன்றான ஸ்ரீலங்கா சிகாமணி விருது 2005ஆம் ஆண்டு றிபாய் ஹாஜியாருக்கு வழங்கப்பட்டது.

### குடும்பத்தினருக்கான உதவி

உழைக்க ஆரம்பித்த காலம் முதலே இளைஞர் றிபாய் தனது சொற்ப வருமானத்திலிருந்தே தனது நெருங்கிய குடும்பத்தினருக்கு தன்னால் இயலுமான பொருளாதார ஒத்துழைப்புகளை வழங்கிவரும் ஒருவராகவே இருந்தார். பின்னர் தனது பொருளாதார வளர்ச்சிக்கேற்ப குடும்பத்தினருக்கான அவரது நன்கொடைகளும் அதிகரித்தவண்ணமே இருந்தன. குடும்பத்தினருக்குத் தேவையான ரமழான் கால உலருணவுகள்முதல் திருமணத்திற்கான உதவித் தொகைகள், நோயாளிகளுக்கான மருத்துவச் செலவுகள், சுயதொழில் வாய்ப்புகள், மின்சாரம் மற்றும் குழாய்நீர் இணைப்பு போன்றவற்றை பெற்றுக்கொள்வதற்கான கொடுப்பனவுகள், வீடு கட்டிக்கொடுப்பதுவரை குடும்பத்தினருக்கு தேவையான பல்வேறு உதவிகளையும் நீண்டகாலமாகவே மேற்கொண்டு வந்தார். குடும்பத்தினரோடு மட்டும் நின்றுவிடாது தனது பழைய வகுப்புத் தோழர்கள், அயலவர்கள், நண்பர்கள் என சகலருக்கும் எந்தவித வேறுபாடுமின்றி உதவிய தாராள மனம் படைத்தவர் என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும்.

### ஊழியர்களுக்கான உதவி

ZAM Gems நிறுவனத்தின் வளர்ச்சியில் நம்பிக்கையும், நேர்மையும், அர்ப்பண சேவையும்மிக்க அதன் ஊழியர்களது வகிபாகம் மெச்சத்தக்கது. அதனை கருத்திற்கொண்டு தனது ஊழியர்களுக்கு கௌரவமான வாழ்க்கையை வழங்க வேண்டுமென்பதற்காக ஊழியர்களுக்குத் தேவையான பல்வேறு ஒத்துழைப்புகளை ZAM Gems வழங்கிவருகிறது. உலருணவுப் பொருட்கள், பாடசாலை உபகரணங்கள், திருமண உதவித்தொகைகள், மருத்துவ உதவிகள், வீடமைப்பு போன்ற ஒத்துழைப்புகளை தனது ஊழியர்களுக்கு வழங்கிவருகின்றது.

### கல்வித்துறை

றிபாய் ஹாஜியார் தனது ZAM Trust ஊடாக பாடசாலைகளுக்கான கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு பெருமளவிலான நிதியை வழங்கியுள்ளார். பாடசாலைகளுக்குத் தேவையான வளங்களை வழங்குவதனூடாக மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளை மேம்படுத்தி கல்வித்துறையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதே ஷம் றிபாய் ஹாஜியாரது குறிக்கோளாக இருந்தது. அதனடிப்படையில் நாடளாவிய ரீதியில் பல பாடசாலைகளுக்குத் தேவையான கட்டடங்களை ZAM Trust அன்பளிப்புச் செய்துள்ளது.

குறிப்பாக, பேருவளையில் அமைந்துள்ள மாளிகாஹேனை முஸ்லிம் மகா வித்தியாலயத்திற்குத் தேவையான சகல வசதிகளுடனும் கூடிய மூன்று மாடிக் கட்டடங்கள் நான்கு அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன. மேலும் இப்பாடசாலை ஷம் றிபாய் ஹாஜியார் மகா வித்தியாலயமாக பெயர்மாற்றம் செய்யப்பட்டு பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கொழும்பு 12இல் அமைந்துள்ள பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரிக்கு நான்கு மாடிக் கட்டடமொன்றும், தெமட்டகொடையில் அமைந்துள்ள ஹைரியா முஸ்லிம் மகளிர் கல்லூரிக்கு நான்கு மாடிக் கட்டடமொன்றும், மக்கொனை அல்-ஹஸனியா மகா வித்தியாலயத்திற்கு மூன்று மாடிக் கட்டடமொன்றும், தர்கா நகர் ஸாஹிரா கல்லூரிக்கு மூன்று மாடிக் கட்டடமொன்றும், பேருவளை மஹகொடை ஐ.எல்.எம்.சம்சுதீன் வித்தியாலயத்திற்கு மூன்று மாடிக் கட்டடமொன்றும், அட்டுளுகமை அல்-கஸ்ஸாலி தேசிய பாடசாலைக்கு மூன்று மாடிக் கட்டடமொன்றும், வியங்கல்லை முஸ்லிம் மகா வித்தியாலயத்திற்கு மூன்று மாடிக் கட்டடமொன்றும், களுத்துறை முஸ்லிம் மகளிர் கல்லூரிக்கு மூன்று மாடிக் கட்டடமொன்றும், பேருவளை மருதானை அல்-பாஸியதுல் நஸ்ரியா முஸ்லிம் மகளிர் கல்லூரிக்கு கட்டடங்கள் கட்டுவதற்கான காணியொன்றும், விசாலமான விளையாட்டு மைதானமும் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன. மேலும் பேருவளை மருதானை அல்-பாஸியதுல் நஸ்ரியா முஸ்லிம் மகளிர் கல்லூரியை ஆரம்பிக்கும்போது பாடசாலைக்குத் தேவையான காணியை 1936ஆம் ஆண்டு ஷம் றிபாயின் தந்தையான மர்ஹூம் ஸைனுல் ஆப்தீன் மரிக்கார் அன்பளிப்புச் செய்திருந்தமை இங்கு நினைவுகூரத்தக்கது. மேலும் களுத்துறை மாவட்டத்திலுள்ள பல முஸ்லிம் பாடசாலைகளுக்கு பல்வேறு உதவிகளை ஷம் றிபாய் வழங்கியுள்ளார்கள்.



### ஆன்மீகத்துறை

சன்மார்க்க விழுமியங்களுடனும், அறநெறிகளுடனும் கூடிய சமூகமொன்றை கட்டியெழுப்புவதில் பள்ளிவாசல்களின் பங்களிப்பு இன்றியமையாதது. அந்தவகையில் ZAM Trust ஊடாக பேருவளை, எலந்தகொடை ஷேக் முஸ்தபா ஜும்ஆ பள்ளிவாசல் முழுமையாக கட்டப்பட்டதோடு, பேருவளை மொல்லியமலை ஹிழ்ரியா ஜும்ஆ பள்ளிவாசல் மற்றும் வெலிப்பன்னை மஸ்ஜிதுன் நபவி ஜும்ஆ பள்ளிவாசல் என்பன புனரமைப்புச் செய்து கொடுக்கப்பட்டன. மேலும், பேருவளை மஸ்ஜிதுல் அப்றார் ஜும்ஆ பள்ளிவாசலின் மையவாடி நவீனமயப்படுத்தல் பணிகளுக்கு ஒத்துழைப்புகளை வழங்கியதோடு காலத்திற்குக் காலம் மஸ்ஜிதுல் அப்றார் பள்ளிவாசலின் புனரமைப்பு நடவடிக்கைகளுக்கும் உதவிகள் செய்யப்பட்டுள்ளன. களுத்துறை மாவட்டத்திலுள்ள பெரும்பாலான பள்ளிவாசல்களுக்கு ஷம் றிபாய் ஹாஜியார் பல்வேறு நன்கொடைகளை வழங்கிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### சுகாதாரத்துறை

கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை உட்பட பல வைத்தியசாலைகளுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளையும், கட்டட வசதிகளையும் ZAM Trust அன்பளிப்புச்செய்து வருகிறது.

### வீடமைப்பு

ZAM Trust பேருவளை மற்றும் மன்னார் பிரதேசங்களில் நூற்றைம்பதுக்கும் மேற்பட்ட வீடுகளை வறிய மற்றும் தேவையுடையோருக்கு அன்பளிப்புச் செய்துள்ளது. குறிப்பாக, மன்னார் பிரதேசத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு மீண்டும் தமது பூர்வீக பூமிகளில் மீளக்குடியேறிய குடும்பங்களுக்கு வீடமைப்புத் திட்டமொன்று அன்பளிப்புச் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. 2004 ஆம் ஆண்டு சுனாமி அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டு வீடுகளை இழந்த பேருவளை மருதானை மக்களுக்கு மஸ்ஜிதுல் அப்றார் பள்ளிவாசலினால் நிர்மாணிக்கப்பட்ட தொடர்மாடி வீடமைப்புத் திட்டத்திறகு ZAM Trust குறிப்பிடத்தக்களவிலான பங்களிப்பை வழங்கியிருந்தது. மேலும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்குத் தேவையான மின்சார இணைப்பு மற்றும் குழாய்நீர் இணைப்புகளும் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன.

### மாதாந்த கொடுப்பனவுகள்

ZAM Trust மாதந்தம் நாடளாவிய ரீதியில் 90 விதவைகள் மற்றும் அநாதைகளுக்குத் தேவையான நிதியுதவிகளை வழங்கிவருவதுடன், தெரிவுசெய்யப்பட்ட 30 பல்கலைக்கழக மாணவர்களுக்குத் தேவையான புலமைப்பரிசில்களை மாதாந்தம் வழங்கிவருவதுடன், வறிய நூறு குடும்பங்களுக்குத் தேவையான உலருணவுப் பொருட்களை மாதாந்தம் தொடர்ந்தும் அன்பளிப்புச் செய்துவருகிறது. மேலும், ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு ரமழான் மாதத்திற்குத் தேவையான உலருணவுப் பொருட்களும், ஸகாத் உதவித் தொகைகளும் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றன.

### கூட்டு சமூகசேவை

ZAM Trust தனிப்பட்ட நிதியமாக இருந்து பல்வேறு சமூகசேவைப் பணிகளை முன்னெடுத்து வருகின்ற அதேவேளை, நாடளாவிய ரீதியில் சமூகசேவைப் பணிகளை மேற்கொண்டு வருகின்ற ZAMZAM Foundation, Fathih Academy போன்ற முன்னனி சமூகசேவை அமைப்புகளுடனும் இணைந்தும் செயற்பட்டு வருகின்றமை விசேட அம்சமாகும். மேலே பட்டியலிடப்பட்ட சமூகசேவைகள் மட்டுமல்லாது சமூக முன்னேற்றத்தையும், இறை திருப்தியையும் இலக்காகக்கொண்டு இன்னும் பல்வேறுவிதமான சமூகப் பணிகளை ZAM Trust மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



### இறப்பு


தர்மம் தலைகாக்கும் என்பதுபோல ஷம் றிபாய் 85 வருடங்கள் உயிர் வாழ்ந்தார். இன்றைய காலகட்டத்தில் ஒரு மனிதன் 50 வயதைத் தாண்டுவதே அபூர்வமானது. அந்தவகையில் உறவினர்களையும், ஏழைகளையும் சேர்ந்து நடந்தமையினாலும், அதிகமதிகம் தர்மம் செய்தமையினாலும் இறைவன் அன்னாருக்கு நீடித்த ஆயுளை வழங்கியிருந்தான் எனலாம். 2021ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 07ஆம் திகதி அதிகாலையில் கொழும்பு தனியார் வைத்தியசாலையில் ஷம் றிபாய் கொரோனா தொற்று காரணமாக காலமானார். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன். அன்னாரின் ஜனாஸா கிழக்கிலங்கையின் ஓட்டமாவடி, மஜ்மா நகரிலுள்ள கொரோனா தொற்றாளிகளுக்கான விசேட மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

***மண்ணில் மலர்ந்திருந்த***
***மாணிக்கத்தையே***
***மஜ்மா மண் தன்னுள்***
***மறைத்துக் கொண்டாள்.***
***மாமனிதருக்கு***
***மனிதம்மிக்க தன்மடியில்***
***மண்ணறை வழங்கி***
***மஜ்மா நகர்***
***மகிமைபெற்று***
***மகுடம் சூடிக்கொண்டாள்.***
***மஜ்மா மண்ணில் இனி***
***மறுமைவரை மலர்ச்சிதான்***
***யா அல்லாஹ்!***


ஷம் றிபாய் ஹாஜியார் அவர்களது சகல பாவங்களையும் மன்னித்து, அன்னாரது சகல சமூகசேவைகளையும் பொருந்திக்கொண்டு மேலான ஜென்னத்துல் பிர்தௌஸ் எனும் சுவனபதியை வழங்குவாயாக!

“உன் பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம், ஆனால், உன் இறப்பு ஒரு சரித்தரமாக இருக்கவேண்டும்” என்ற முன்னாள் இந்திய ஜனாதிபதி டாக்டர் ஏ.பி.ஜே அப்துல் கலாம் அவர்களது கூற்றுப்படி சரித்திரமாகவே வாழ்ந்து இறந்துபோனார் ஷம் றிபாய் ஹாஜியார். மண்ணுள் மறைந்தாலும் எண்ணற்ற இதயங்களில் என்றும் வரலாறாய் மலர்ந்துகொண்டிருப்பார்.

***•ரூமி ஹாரிஸ்***



# ஆபத்தில் ஆப்கானிஸ்தான்:
# விரைவில் காபூல் தலிபான் வசமாகும்



எதிர்பார்த்ததையும் விட விரைவாக ஆப்கன் தலைநகர் காபூலை தலிபான்கள் பிடித்து விடுவார்களென எதிர்பார்க்கப்படுவதால், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் நிர்வாகம் கவலையடைந்துள்ளது.

இன்னும் 3 மாதங்களில் தலிபான்கள் காபூலை கைப்பற்றுவார்களென அமெரிக்க இராணுவம் தெரிவித்தாலும், தற்போது இன்னும் ஒரே மாதத்தில் இது நடந்துவிடும் என்ற பலமான கருத்தும் நிலவுகிறது.

ஆப்கனிஸ்தானில் கடந்த 6 நாட்களில் 9 மாகாணங்களின் தலைநகரங்கள் தலிபான்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன.

இதனால், நாட்டின் 65 சதவிகித நிலப்பரப்பு இப்போது அவர்களின் கையிலுள்ளது. இதனிடையே இந்த மாத இறுதிக்குள் ஆப்கானிலிருந்து முழு படையினரையும் வாபஸ் பெறுவதில் உறுதியுடன் இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி பைடன்

## அமெரிக்கா கவலை

அறிவித்துள்ளார்.

அத்தோடு ஆப்கானிஸ்தானுக்கு இனி இராணுவ ரீதியிலான உதவிகளை செய்யப் போவதில்லை என்றும் இராச்சிய ரீதியான உதவிகளை மட்டுமே செய்யப்படும் எனவும் அமெரிக்க இராணுவம் சார்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.




### தலிபான்களின் நிலைப்பாடு குறித்து பாக். பிரதமர்

இந்நிலையில், ஆப்கானிஸ்தானில் அஷ்ரப் கனி ஜனாதிபதியாக இருக்கும்வரை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தப்போவதில்லை என்று தலிபான் தலைவர்கள் கூறியதாக பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் தெரிவித்துள்ளார்.

இஸ்லாமாபாத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமைதிப் பேச்சுகள் நிறுத்தப்பட்ட நிலையில், ஆப்கானிஸ்தானில் வன்முறை கடுமையாக அதிகரித்துள்ளதாகவும், கடந்த சில மாதங்களுக்கு முன்பு தலிபான் மூத்த தலைவர்கள் தன்னை சந்திக்க வந்தபோது, அவர்களை சமாதானப்படுத்த முயற்சித்ததாகவும் பிரதமர் இம்ரான்கான் தெவித்தார்.




### 3.90 இலட்சம் பேர் இடம்பெயர்வு

ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் தாக்குதலுக்கு பயந்து சொந்த ஊர்களிலிருந்து புலம்பெயர்ந்தோரின் எண்ணிக்கை 3.90 இலட்சமாக அதிகரித்துள்ளதாக ஐ.நா. மனிதநேய விவகாரக் குழு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ஐ.நாவின் மனிதநேய விவகாரக் குழு வெளியிட்ட அறிக்கையில்,

“தீவிரவாதிகளின் தாக்குதல்களால் இதுவரை 3,90,000பேர் சொந்த ஊர்களிலிருந்து வெளியேறியுள்ளனர்.

கடந்த ஜூலை முதலாம் திகதிமுதல் ஒகஸ்ட் 5 வரை கபூல் நகரத்திற்கு மட்டும் 5,800இற்கும் மேற்பட்டோர் புலம்பெயர்ந் துள்ளனர். அவர்கள் அனைவரும் நண்பர்கள் மற்றும் உறவினர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர்.

மேலும், பலர் வீதியோரங்களில் தற்காலிக இருப்பிடம் அமைத்தும், பூங்காக்களிலும் தங்கியுள்ளனர். அவர்களுக்கு உணவு, தண்ணீர் உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகளை தொண்டு நிறுவனங்கள் வழங்கி வருகின்றன.

நாடு முழுவதும் இதுவரை 156 தொண்டு நிறுவனங்கள் மூலம் 78 இலட்சம் மக்களுக்கு உணவுகள் உள்ளிட்டவை வழங்கப்பட்டு வருகின்றன'' - என தெரிவிக்கப்படுகிறது.

ஆப்கானிஸ்தானில் கடந்த 20 ஆண்டுகளாக நிலைகொண்டு போரிட்டு வந்த அமெரிக்கப் படையினர், அங்கிருந்து முழுமையாக தங்களது நாடுகளுக்குத் திரும்பி வருகின்றனர். இந்தச் சூழலைப் பயன்படுத்திக் கொண்டுள்ள தலிபான் தீவிரவாத அமைப்பினர் நாட்டின் பல்வேறு பகுதிகளில் தாக்குதல் நடத்தி கைப்பற்றி வருகின்றனர்.

இதுவரை ஆப்கானிஸ்தானின் 421 மாவட்டங்கள் தலிபான்களின் கட்டுப்பாட்டிலுள்ளதுடன், ஈரான், தஜிகிஸ்தான் மற்றும் பாகிஸ்தானுடனான எல்லைப் பகுதிகளையும் கைப்பற்றியுள்ளனர்.

இந்நிலையில், தலிபான்களின் தாக்குதலுக்கு பயந்து சொந்த ஊர்களிலிருந்து நாட்டின் தலைநகரான கபூல் மற்றும் சில பெரும் நகரங்களுக்கு மக்கள் புலம்பெயர்ந்து வருகின்றனர்.

# உலக செய்திகள்

## பிலிப்பைன்ஸில் 7.1 ரிச்டர் சக்திவாய்ந்த நிலநடுக்கம்

பிலிப்பைன்ஸில் 7.1 ரிச்டர் அளவில் அதிக சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

பிலிப்பைன்ஸின் தென்கிழக்குக் கடற்கரையில் நேற்று அதிகாலைவேளை இந்நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளதுடன், இது பூமியின் மட்டத்திலிருந்து 65 கிலோமீற்றர் ஆழத்தில் இந்நிலநடுக்கம் நிலைகொண்டிருந்ததாகவும் பிலிப்பைன்ஸ் எரிமலை மற்றும் நில அதிர்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

ரிச்டர் அளவில் 7.1ஆக பதிவாகியுருந்த இந்நிலநடுக்கம் தொடர்பான சேதவிபரங்கள் எதுவும் வெளியாகாத நிலையில் சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படாததால் மக்கள் நிம்மதியடைந்துள்ளனர்.

## கலிபோர்னியாவை கபளீகரம் செய்த காட்டுத் தீ



கலிபோர்னியாவில் காட்டுத் தீயால் சேதமான வனம் மற்றும் குடியிருப்பின் செயற்கைகோள் புகைப்படம் தற்போது வெளியாகியுள்ளது.

கலிபோர்னியாவில் பற்றி எரியும் காட்டுத் தீ வனத்தை கபளீகரம் செய்வதோடு மட்டுமன்றி ஆயிரக்கணக்கான மக்களின் வாழ்வாதாரத்தையும் சாம்பலாக்கியுள்ளது. அமெரிக்காவின் கலிபோர்னியா பகுதியில் மிகத் தீவிரமான காட்டுத் தீ தாக்கி வருகின்றது. வடக்கு கலிபோர்னியாவில் தற்போது தாக்கிவரும் டிக்ஸியே தீ கலிபோர்னிய புவியியல் வரலாற்றில் 2ஆவது மிகப் பெரும் காட்டுத் தீயாகப் பதிவாகியுள்ளது. ஞாயிற்றுக்கிழமை மாத்திரம் தீக்கிரையான 4,63,477 ஏக்கர் நிலமானது லொஸ்ஏஞ்சல்ஸ் நகரை விடப் பெரியது எனக் கணிக்கப்பட்டுள்ளது.



## கவலைக்கிடமான நிலையில் மதுரை ஆதீனம் அருணகிரிநாதர்



சுவாசக் கோளாறு காரணமாக சிகிச்சை பெற்றுவரும் மதுரை ஆதீனம் அருணகிரிநாதரின் உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளதாக அப்பலோ மருத்துவமனை தெரிவித்துள்ளது.

கடந்த 8ஆம் திகதி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவருக்கு, வென்டிலேட்டர் பொருத்தப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், 77 வயதாகும் அருணகிரிநாதர் ஐசியூ பிரிவுக்கு மாற்றப்பட்டு தீவிர சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாக அப்பலோ மருத்துவமனை நிர்வாகம் தகவல் அளித்துள்ளது.

## தல - தளபதி சந்திப்பு



சென்னையில் இடம்பெற்ற படப்பிடிப்பின்போது இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் தோனியும், நடிகர் விஜய்யும் சந்தித்துக்கொண்ட புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றன.

நெல்சன் திலீப்குமார் இயக்கத்தில் நடிகர் விஜய் நடித்துவரும் பீஸ்ட் படத்தின் படபிடிப்பு சென்னையிலுள்ள தனியார் ஸ்டூடியோவில் நடந்துவருகிறது.

பீஸ்ட் படத்தின் படபிடிப்பு நடக்கும் அதே ஸ்டூடியோவில், 2 நாட்களுக்கு முன் தோனி நடிக்கும் விளம்பரத்திற்கான படபிடிப்பும் நடந்துள்ளது. அப்போது தோனியும், விஜய்யும் சந்தித்துக் கொண்டதோடு, புகைப்படங்களும் எடுத்துக்கொண்டுள்ளனர்.

### அவுஸ்திரேலியாவில்...

## ஒருவருக்கு கொரோனா: 7 நாட்கள் முடங்குகிறது தலைநகர்

அவுஸ்திரேலியாவின் தலைநகர் கேன்பராவில் ஒருவருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டதால், 7 நாட்களுக்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் தலைநகரில் ஒரு வருடத்திற்கு பின்னர், ஹோட்டல்களில் தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கு வெளியே ஒருவருக்கு தொற்று பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

உடனடியாக ஊரடங்கு அமுல்படுத்துவதன் மூலம், கொரோனாவால் அதிகளவு பாதிப்பை கட்டுப்படுத்துவதற்கான சிறந்த வழி என்பதால் ஒரு வருடத்திற்குப் பின்னர் தலைநகர் கேன்பராவில் முதன்முறையாக தற்போது ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பிடத்தக்கது.

## கொரோனா சிகிச்சைக்கு மேலும் 3 மருந்துகள்

**உலகம் முழுவதும் 600 மருத்துவமனைகளில் ஆய்வக பரிசோதனைகளை தொடங்கியது WHO**

கொரோனா தொற்றுக்கெதிராக போராடி நோய் எதிர்ப்புச்சக்திகளை அதிகரிக்கும் 3 மருந்துகளை உலக சுகாதார நிறுவனம் பரிசோதனை செய்துவருகிறது.

கொரோனா பரவலை தடுக்க பல்வேறு நிறுவனங்களின் தடுப்பூசி மருந்துகளுக்கு ஒப்புதலளிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், ஏற்கனவே புழக்கத்திலிருக்கும் சில மருந்துகள் கொரோனா பரவலை தடுக்கும் ஆற்றலை கொண்டிருப்பதாக மருத்துவ நிபுணர்கள் தெரிவித்தனர்.

இதையடுத்து மலேரியா, புற்றுநோய் மற்றும் மூட்டு தேய்மான சிகிச்சைகளுக்கு தரப்படும் 3 வகையான மருந்துகளை உலக சுகாதார நிறுவனம் ஆய்வுக்குட்படுத்தி வருகிறது.

இந்த 3 மருந்துகளும் உடலில் நோய் எதிர்ப்புச்சக்தியை அதிகரிக்கும் ஆற்றலை கொண்டிருப்பதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய டெட்ராஸ் அதனோம்,

''சொலிடாரிட்டி பிளஸ் என்ற திட்டத்தின்கீழ் 3 மருந்துகள் மீதான ஆய்வக பரிசோதனையை தொடங்கியுள்ளோம். ஆர்டெஸ்யுனேட் மருந்து மலேரியா சிகிச்சைக்கு தரப்படுவது. இமாட்டினிப் சில வகை புற்றுநோய்க்கு வழங்கப்படுவது இன்பிளிக்சி-மேப் நோய் எதிர்ப்பு அமைப்பு பாதிப்புக்கு தரப்படும் மருந்துகளாகும்.

உலகம் முழுவதிலுமுள்ள 600 மருத்துவமனைகளில் இந்த மருந்துகள் மீதான ஆய்வக பரிசோதனைகள் தொடங்கப்பட்டுள்ளன'' - என்றார். இதனிடையே இந்த ஆய்வு இந்தியாவிலுள்ள சில மருத்துவமனைகளிலும் நடைபெறுகிறது.

### கஜகஸ்தானில் கடும் வறட்சி:


## உணவு - தண்ணீரின்றி உயிரிழக்கும் விலங்கினங்கள்





கஜகஸ்தானின் மாங்கிஸ்ட்டாவில் நிலவும் கடும் வறட்சி காரணமாக நீர், உணவின்றி விலங்குகள் உயிரிழக்கும் அவலநிலை ஏற்பட்டுள்ளது.

குதிரை மற்றும் ஒட்டகங்களை வளர்க்கும் விவசாயிகள் அவற்றிற்கு உணவு அளிக்க இயலாமலும், வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்ட நிலையிலும் தவித்து வருகின்றனர். குதிரை, ஒட்டகங்களுக்கான தீவனங்களின் விலையும் பன்மடங்கு எகிறியுள்ளதால் விவசாயிகள் செய்வதறியாது விழி பிதுங்கியுள்ளனர். எலும்பும் தோலுமாய் தென்படும் குதிரைகளும், மடிந்த அவற்றின் எலும்புக் கூடுகளும் கஜகஸ்தானில் நிலவும் வறட்சியின் கோர முகத்தை உணர்த்துகின்றன.



அவுஸ்திரேலியாவில் பல இலட்சம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த வேட்டையாடும் திறன்பெற்ற உடல் அமைப்போடு அரிய வகை உயிரின படிமம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அழிந்துபோன இந்த உயிரினத்திற்கு ‘தபுங்காகா ஷாவி’ என பெயரிடப் பட்டுள்ளது.

11 கோடி ஆண்டுகளுக்கு முன்பு அவுஸ்திரேலியாவில் வாழ்ந்த பறக்கும் ‘‘டிராகன்’’, இக்கண்டத்தில் மிகப்பெரிய அளவில் வானத்தில் ஆதிக்கம் செலுத்தி இருக்கலாம் எனவும், 23 அடி நீளம் கொண்ட இந்த உயிரினம், 3 அடி நீள தலையுடன், 40 கூரிய பற்களுடன் மிகப் பயங்கரமாக வேட்டையாடும் திறனை பெற்று இருந்திருக்கும் என்றும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com



## ஜூலை மாதத்தின் சிறந்த வீரராக ஷகீப்



சர்வதேச கிரிக்கெட் பேரவையினால் இந்த வருடத்திலிருந்து அறிமுகப்படுத்தப்பட்ட மாதத்தின் சிறந்த வீரர் என்ற விருதில் ஜூலை மாதத்தின் சிறந்த வீரராக பங்களாதேஷ் அணியின் சகலதுறை வீரர் ஷகீப் அல்-ஹஸன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஜூலை மாதம் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் சிறப்பாக செயற்பட்ட சிறந்த மூன்று வீரர்கள் இரசிகர்களின் வாக்கெடுப்புக்கான பரிந்துரையில் இடம்பெற்றிருந்தனர். இதில் அவுஸ்திரேலியாவின் மிட்சல் மார்ஷ், பங்களாதேஷின் ஷகீப் அல்-ஹசன், மேற்கிந்திய தீவுகளின் ஹைடன் வால்ஷ் ஜூனியர் ஆகியோர் இடம்பிடித்திருந்தனர்.

இதில் ஜூலை மாதத்தின் சிறந்த வீரராக பங்களாதேஷ் அணியின் சகலதுறை வீரர் ஷகீப் அல்-ஹஸன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். சிம்பாப்வே மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுடனான தொடரில் சிறப்பாக செயற்பட்ட இவர், ஐ.சி.சி. இருபதுக்கு 20 மற்றும் ஒருநாள் போட்டிகளின் சகலதுறை வீரர்களுக்கான தரவரிசையில் முதலிடத்தில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சிறந்த வீராங்கனைக்கான பரிந்துரை பட்டியலில் மேற்கிந்திய தீவுகள் வீராங்கனைகளான ஸ்டெபானி டெய்லர், ஹேலி மெத்யுஸ், பாகிஸ்தானின் பாத்திமா சனா ஆகியோர் பரிந்துரைக்கப்பட்டனர். இதில் மேற்கிந்திய தீவுகளின் ஸ்டெபானி டெய்லர் ஜூலை மாதத்தின் சிறந்த வீராங்கனையாக தெரிவானார்.

## டெஸ்ட் தொடரிலிருந்து விலகிய ஸ்டுவர்ட் ப்ரோட்

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முக்கிய வேகப்பந்துவீச்சாளரான ஸ்டுவர்ட் ப்ரோட் உபாதை காரணமாக இந்தியாவுடனான டெஸ்ட் தொடரிலிருந்து விலகியுள்ளார்.

சுற்றுலா இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் தற்சமயம் நடைபெற்று வருகிறது. முதல் டெஸ்ட் போட்டி மழை காரணமாக வெற்றி, தோல்வியின்றி சமநிலையில் நிறைவுக்கு வந்தது. இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி நேற்று லோர்ட்ஸ் கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமானது.

இந்நிலையில், மீதமுள்ள போட்டிகளிலிருந்து ஸ்டுவர்ட் ப்ரோட் விலகுவதாக இங்கிலாந்து கிரிக்கெட் சபை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. லோர்ட்ஸ் கிரிக்கெட் மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை மேற்கொண்ட பயிற்சியின்போது ஸ்டுவர்ட் ப்ரோட் உபாதைக்குள்ளானார். இதைத் தொடர்ந்து, அவருக்குப் பதில் மாற்று வீரராக வேகப்பந்து வீச்சாளர் ஷகீப் மஹ்மூத் இங்கிலாந்து குழாமில் சேர்க்கப்பட்டுள்ளார்.

## இலங்கையுடன் மோதும் தென்னாபிரிக்க குழாம் அறிவிப்பு







இலங்கை அணியுடன் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட தொடரில் பங்கேற்கவுள்ள தென்னாபிரிக்க அணியின் ஒருநாள் மற்றும் இருபதுக்கு 20 சர்வதேச குழாம் நேற்று அந்நாட்டு கிரிக்கெட் சபையினால் அறிவிக்கப்பட்டது.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியானது அடுத்த மாத ஆரம்பத்தில் இலங்கைக்கு இருதரப்பு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு தலா மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் மற்றும் இருபதுக்கு 20 தொடர்களில் விளையாடவுள்ளது. இந்நிலையிலேயே இரு தொடர்களுக்குமான டெம்பா பவுமா தலைமையிலான தென்னாபிரிக்க குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அறிவிக்கப்பட்டுள்ள குழாமின் அடிப்படையில் தென்னாபிரிக்க அணியின் மூன்று முக்கிய வீரர்கள் இந்தத் தொடரில் இடம்பெறவில்லை. தென்னாபிரிக்க அணியின் விக்கெட் காப்பாளரும், அதிரடி ஆரம்ப துடுப்பாட்ட வீரருமான குயின்டன் டி கொக்கிற்கு ஒருநாள் தொடரில் ஓய்வு வழங்கப்பட்டுள்ளது.

அணியின் முக்கிய வேகப்பந்து வீச்சாளரான லுங்கிங்கிடி தனிப்பட்ட காரணங்கள் காரணமாக ஒருநாள் தொடரிலிருந்து விலகியுள்ளார். இதேவேளை, அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரரான டேவிட் மில்லர் உபாதைக்கு முகங்கொடுத்ததன் காரணமாக ஒருநாள் மற்றும் இருபதுக்கு 20 ஆகிய இரண்டு குழாம்களிலும் இடம்பெறவில்லை.

**போட்டி அட்டவணை (போட்டிகள் அனைத்தும் கொழும்பு ஆர். பிரேமதாஸ மைதானத்தில் நடைபெறவுள்ளன)**

| | |
|---|---|
| செப்டெம்பர் 2 | முதலாவது ஒருநாள் போட்டி |
| செப்டெம்பர் 4 | இரண்டாவது ஒருநாள் போட்டி |
| செப்டெம்பர் 7 | மூன்றாவது ஒருநாள் போட்டி |
| செப்டெம்பர் 10 | முதலாவது இருபதுக்கு 20 சர்வதேச போட்டி |
| செப்டெம்பர் 12 | இரண்டாவது இருபதுக்கு 20 சர்வதேச போட்டி |
| செப்டெம்பர் 14 | மூன்றாவது இருபதுக்கு 20 சர்வதேச போட்டி |

## ஒலிம்பிக்கில் சறுக்கிய தருணங்கள்



பெரு நாட்டைச் சேர்ந்த ஸ்கேட்போர்டர் வீரர் ஏஞ்சலோ கரோ நர்வேஸ் டோக்கியோ ஒலிம்பிக்கில் தனது நாட்டுக்கு பெருமை சேர்க்க காத்திருந்தார். ஏஞ்சலோ கரோ நர்வேஸின் முறை வந்தபோது ஸ்கேட்போர்டர் போட்டியில் களமிறங்கினார்.

சில்லு பூட்டிய சின்னப்பலகையில் தனது உடம்பை வளைத்து நெளிந்து வேகமாக ஊர்ந்தார். அங்கே வைக்கப்பட்டிருக்கும் மேடைகளிலும், கம்பிகளிலும் ஏறி இறங்க வேண்டும். உடம்பின் சமநிலை தவறினால் விபத்தைச் சந்திக்க நேரும். ஆபத்தான விளையாட்டு.



பதக்கத்திற்கான சிறந்த போட்டியாளராக நர்வேஸ் தொடங்கினார். எனினும், அவர் தனது பலகையிலிருந்து கீழே விழுந்து உலோகக் கம்பியில் மோதினார். அவரது ஆரம்ப ஓட்டம் மிகவும் தவறாக நடந்தது. அவர் மேற்பரப்பில் இறங்கிய பிறகு, அவரது எடை பின்னோக்கி நகர்ந்து அவர் பலகையிலிருந்து கீழே விழுந்ததால் இடுப்பில் ஏற்பட்ட வலியால் துடித்தார். ஒரு நிமிடத்தின் பின்னர் போட்டியைத் தொடர்ந்தார்.

ஏஞ்சலோ கரோ நர்வேஸ், இரண்டாவது சுற்றில் 6.96 மதிப்பெண்களைப் பெற்றார். மேலும், ஐந்து தனிப்பட்ட சாகசங்களை செய்தார். இறுதியில், அவர் ஏழாவது இடத்தைப் பிடித்ததன் மூலம் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றார்.

## மழையால் இன்றைக்கு மாற்றப்பட்ட முதல் நாள் போட்டிகள்

எஸ்.எல்.சி. இன்விடேஷனல் ரி20 லீக் தொடரின் முதல் போட்டி நேற்றைய தினம் ஆரம்பமாகவிருந்த நிலையில், நேற்றைய நாள் முழுவதும் கண்டி, பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் சீரற்ற காலநிலை நிலவியதன் காரணமாக நேற்று நடைபெறவிருந்த இரண்டு போட்டிகளும் இன்றைய தினத்திற்கு மாற்றப்பட்டன.

தென்னாபிரிக்க அணியுடன் அடுத்த மாதம் முதல் வாரம் நடைபெறவுள்ள இருதரப்பு கிரிக்கெட் தொடர் மற்றும் ஒக்டோபர் மாதம் ஐக்கிய அரபு இராச்சியம், ஓமானில் நடைபெறவுள்ள ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ணத் தொடர் ஆகியவற்றிக்கு வீரர்களை தயார்படுத்தும் முகமாக இலங்கை கிரிக்கெட் சபையினால் இன்விடேஷனல் ரி20 லீக் தொடர் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

4 அணிகளின் பங்கேற்புடன் நடைபெறுகின்ற குறித்த தொடரின் முதல் இரண்டு போட்டிகள் நேற்றைய தினம் நடைபெறவிருந்தன. மாலை 2.30 மணிக்கு நடைபெறவிருந்த முதல்



போட்டியில் தசுன் சானக்க தலைமையிலான கிரேஸ் அணியும், அஷான் பிரியஞ்ஜன் தலைமையிலான க்ரீன்ஸ் அணியும் மோதவிருந்தன.

இரவு 7.00 மணிக்கு நடைபெறவிருந்த போட்டியில் தினேஷ் சந்திமால் தலைமையிலான ரெட்ஸ் அணியும், தனஞ்ஜய டி சில்வா தலைமையிலான ப்ளஸ் அணியும் மோதவிருந்தன. எனவே, சீரற்ற காலநிலை காரணமாக குறித்த இரு போட்டிகளும் அதே நேரத்தில் இன்று நடைபெறவுள்ளன.

## எவரெஸ்ட் ப்ரீமியர் லீக் தொடரில் களமிறங்கும் சந்திமால்



இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவரும், நட்சத்திர துடுப்பாட்ட வீரர்களில் ஒருவருமான தினேஷ் சந்திமால், நேபாளத்தில் நடைபெறவுள்ள எவரெஸ்ட் ப்ரீமியர் லீக் தொடரில் விளையாடவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அந்தவகையில் இலங்கையின் முன்னாள் பயிற்றுவிப்பாளரான புபுது தசநாயக்க பயிற்றுவிக்கும் பைரஹாவா க்ளாடியேட்டர்ஸ் அணியில் தினேஷ் சந்திமால் விளையாடவுள்ளார்.

முன்னதாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்திய ப்ரீமியர் லீக் தொடர், கனடாவின் குளோபல் இருபதுக்கு 20 லீக் தொடர் போன்ற வெளிநாட்டு அணி உரிமையாளர்கள்கொண்ட தொடர்களில் விளையாடியிருக்கும் தினேஷ் சந்திமால், மூன்றாவதாக எவரஸ்ட் ப்ரீமியர் லீக் தொடரில் விளையாடவுள்ளார்.

எவரெஸ்ட் ப்ரீமியர் லீக் தொடர் செப்டெம்பர் மாதம் 25ஆம் திகதி தொடக்கம் ஒக்டோபர் மாதம் 09ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

## இலங்கை கிரிக்கெட் சபைக்கு 14.5 மில்லியன் டொலர் வருமானம்

ஷிகர் தவான் தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணியானது கடந்த மாதம் இலங்கைக்கு இருதரப்பு சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஒருநாள் மற்றும் இருபதுக்கு 20 தொடர்களில் விளையாடியது. ஒருநாள் தொடரை இந்திய அணி 2-1 என்ற அடிப்படையிலும், இருபதுக்கு 20 தொடரை இலங்கை அணி 2-1 என்ற அடிப்படையிலும் கைப்பற்றின. இந்நிலையில், குறித்த தொடரால் இலங்கை கிரிக்கெட் சபைக்கு 14.5 மில்லியன் டொலர் வருமானம் கிடைத்துள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபையின் செயலாளர் மொஹான் டி சில்வா தெரிவித்துள்ளார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், எவ்.டி.பி. (எதிர்கால தொடர் அட்டவணை) பிரகாரம் இந்திய அணி 3 ஒருநாள் போட்டிகளில் தான் விளையாட வேண்டும். ஆனால், இலங்கை கிரிக்கெட் சபை தலைவரின் முயற்சியால் 3 இருபதுக்கு 20 போட்டிகளிலும் விளையாட இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை சம்மதித்தது. இதனால் நல்ல வருமானம் கிடைத்துள்ளது.

இலங்கை கிரிக்கெட் சபைக்கும், இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கும் இடையே உள்ள நல்லுறவால் இது சாத்தியமானது. இந்தத் தொடரில் தொலைக்காட்சி ஒளிபரப்பு மற்றும் இதர உரிமைகள் மூலமாக 14.5 மில்லியன் டொலர் வருமானம் கிடைத்துள்ளது என தெரிவித்தார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7